821

821 G74

OFFICE OF THE ... MADRAS
11 AUG 1934

உ

சிவமயம்.

# திருக்களர் விளக்கம்

(2, 3, 4 பாகங்கள், அநுபந்தம்.)

இஃது
கருப்புக்களர்
திருவருள், சுப்பைய சுவாமிகள்
மாணாக்கர்களில் ஒருவராகிய
திருக்களர்
**மு. சுவாமிநாத மாதவராயர்**
எழுதியது.

திருவாரூர்—விஜயபுரம்
கருணாநிதி (பில்டிங்ஸ்) பிரஸில்
பதிப்பிக்கப்பெற்றது.

1934.

O23:38.21193.T
N34.

68280

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 AUG 1934
MADRAS

1

# பிழை திருத்தம்.

## (முகவுரை)

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 2 | 27 | யிருந்தததோ. | யிருந்ததோ. |
| 3 | 27 | கமாதூர. | காமாதூர. |

## (இரண்டாம் பாகம்)

| | | | |
|---|---|---|---|
| 9 | 15 | வேலி 5-ம். | வேலி 4-ம். |
| ,, | 16 | வேலி 32-ம். | வேலி 30-ம். |
| ,, | ,, | வேலி 37-ம். | வேலி 34-ம். |
| 14 | 22 | களைம். | களையும். |
| 23 | 6 | விட்டார்ளென்பதும் | விட்டார்களென்பதும் |
| 26 | 12 | ரூ. 1128. | ரூ. 1692. |
| 32 | 23 | பழ. வெ. ராம. வெ. | வெ. ராம. வெ. |
| 33 | 5 | ஒத்துபடி. | ஒத்தபடி. |

586
294·535



## (மூன்றும் பாகம்)

| பக்கம். | வரி | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 10 | 1 | இராமையாக். | சி. க. ராம. இராம |
| ,, | 10 | ரூ. 1128. | ரூ. 1692 [சுவாமிக். |
| 14 | 19 | களப்பாள. | களப்பாள். |
| ,, | 24,2 | (கல்வெட்டிவிருந்து கண்டுபிடித்தது; | (கல்வெட்டிவிருந்து கண்டுபிடித்தது); |
| 15 | 10 | கொண்டிருந்ததால் | கொண்டிருத்தல். |
| ,, | 8 | ரூ. 3300. | ரூ. 4005. |
| ,, | 20 | கோவில். | கோவிலில். |
| 17 | 25 | ரூ. 1128. | ரூ. 1692. |
| ,, | 33 | ரூ. 3300. | ரூ. 4005. |
| 21 | 25 | மாட்டுப்விலை. | மாட்டுவிலை. |
| 24 | 18 | இராமையாக். | சி. க. ராம. இராம |
| ,, | 26 | ரூ. 1128. | ரூ. 1692. [சுவாமிக் |

## (நான்காம் பாகம்)

| | | | |
|---|---|---|---|
| 18 | 4 | விக்கம். | விளக்கம். |
| 23 | 21 | ஸ்னீகபாத்தியமும். | ஸ்தானீகபாத்தியமும் |
| 24 | 20 | அருடைய. | அவருடைய. |
| 38 | 15 | ரூ. 3064—14—6. | ரூ. 3064—14—0. |
| 53 | 12 | மணிமாலே. | பணிமாலே. |
| 58 | 17 | வெளியாகாமையால. | வெளியாகாமையால். |

68280

# முகவுரை.

கடல்புடை சூழ்ந்த நெடுநிலவுலகிலே, தண்டமிழ் நிறைந்த மண்டலந்தன்னிலே, எந்நாட்டினுஞ் சிறந்த 'பொன்னி' நன்னாட்டினிலே, குறுநில மன்னராங் கூற்றுவ ராண்ட, அறந்திறம்பாத புறங்காம்பை நாட்டிலே (கடல் சூழ்ந்த வுலகிலே, சென்னை ராசதானியிலே, தஞ்சை ஜில்லா விலே, மன்னார்குடி தாலூகாவிலே) 'பிறந்தோர், தரிசித் தோர், நினைத்தோர், இறந்தோர்' என்னும் நால்வகை யோருக்கும் பிறவாப் பெருவாழ்வளிக்கும் பெரும்பதியாய் விளங்கும் மருக்கிளர் பொழில்சூழ் திருக்களர் என்னுஞ் சிவ திருக்கோயிலிலே, 1920-ம் வருஷம் முதல் 'பரிவர்த்தனை நிலங்கள் பறிமுதலாதல், கட்டிடங்கள் குட்டிச்சுவராதல், நாகாபரணம் நாசமடைதல், வெள்ளிச்சாமான்கள் வெளியிற் போதல், தேவியார் தாலி திருட்டுப்போதல், உபசாரம் அபசாரமாதல், விருக்ஷங்கள் விருத்தியாதல், உட்துறை உருக்குலைதல், தீர்த்தங்கள் செந்நீராதல், வீதிகள் வீணாய்ப் போதல், கோவிலில் திருடர் குடியிருத்தல்' முதலிய விபரங்களையும்; 1914-ம் வருஷம் முதல் கோவில் நிலத்திற் சிலர் பெருவிலைப் பெருநிலத்தைக் கைப்பற்றிக்கொண்டு, சிறுவிலைச் சிறுநிலத்தைக் கோவிலுக்குச் சேர்த்திருப்பதை யும் தற்கால பஞ்சாயத்தாராகிய க. வீ. சொ. வீ. அழகப்ப செட்டியாரவர்களிடத்திற் றெரிவித்தேன்; அவர் பரா முகமாக இருந்துவிட்டார். இக்கோவிலுக்கு 'குருபூசை மடம் தேவாரபாராயணம் வகையறுத் தருமங்கள்வைத்து வருஷம் ஒன்றுக்கு ரூ. 2500 செலவிட்டு நடத்திவருகின்ற **பாகனேரி பேரி. அழ. மு. முத்துகருப்பசெட்டியாரவர்கள் (1)**, பசுமடம் திருநந்தனவனம் வகையறுத் தருமங்கள் வைத்து, வருஷம் ஒன்றுக்கு ரூ. 4000 செலவிட்டு நடத்தி

வருகின்ற காரைக்குடி ராம. ஆத. மே. மெய்யப்ப செட்டியாரவர்கள் (2), மேற்படி காரைக்குடி ஆத. லே. ஆத. சோக்கலிங்க செட்டியாரவர்கள் (3), எசுர் வேத பாடசாலை வகையரூத் தருமங்கள் வைத்து வருஷம் ஒன்றுக்கு ரூ. 3000 செலவிட்டு நடத்திவருகின்ற காரைக்குடி ஆத. பழ. சிதம்பர செட்டியாரவர்கள் (4), இந்நான்கு திருச்செல்வர்களையும், சாசுவத பஞ்சாயத்தார்களாக நியமிக்கவேண்டுமென்று 'மனு' தயார்செய்து ரூ. 10 செலவிட்டு இங்கிலீஷில் டைப்படித்து, 'எண்டோமெண்ட் போர்டாரவர்களுக்கும், தஞ்சாவூர் ஜில்லா எண்டோமெண்ட் போர்டு கமிஷனர் அவர்களுக்கும், தஞ்சாவூர் சர்க்கிள் தேவஸ்தானங் கமிட்டியாரவர்களுக்கும் தபாலில் ரிஜிஸ்டர் மூலமாக 24—1—33-ல் அனுப்பி அக்னலெட்ஜ்மெண்ட் வாங்கியிருக்கின்றேன். 29-4-33-முதல் 8-5-33 வரையில் நடைபெறும் ஸ்ரீமுக சித்திரை பிரமோற்சவத்தில் வெளிப்படுத்த வேண்டியதற்காகக், கோவிலின் 'பெருமை, சிறுமை'களையும், இலாப நஷ்டங்களையும், ஒரு சிறு புத்தகமாக்கித் 'திருக்களர் விளக்கம்' என்று பெயர் கொடுத்து அச்சியற்றினேன். அவ்வுற்சவம் நடைபெறாமையால் 6—6—33-ல் ஸ்ரீவீரசேகர மகாமுனிவருடைய குருபூசை மகோற்சவத்தில் வெளிப்படுத்தியதுமன்னியில் எண்டோமெண்ட் போர்டாரவர்களுக்குப், தேவஸ்தானங் கமிட்டியாரவர்களுக்கும் தபால் மூலமாக அனுப்பி அக்னலெட்ஜ்மெண்ட் வாங்கியுளேன்.

மேற்படி அழகப்பசெட்டியாரவர்கள் அப்புத்தகத்தைப் பார்வையிட்டதும், கர்னகடூரமாக இதுவரையில் அச்சாபீசு சாத்தியிருந்ததமேதோ என்று கேட்டதுமன்னியில், கோவிலுக்கு ஏற்பட்ட நஷ்டங்களெல்லாவற்றிற்கும் காரணகுருவாயிருந்த கிருஷ்ணசாமி ஐயரிடத்தில் அப்புத்தகத்தைக்

கொடுத்து, வக்கீல்களிடத்திற்கு அனுப்பினர். மேற்படி புத்தகத்தில் எழுதாமல் விடுபட்டிருந்தவைகளிற் சிலவற்றையும், புத்தகம் வெளிவந்தபின் நடந்தவைகளிற் சிலவற்றையும் சிறுபுத்தகமாக்கி '**திருக்களர் விளக்கம் இரண்டாம்பாகம்**' என்று பெயரிட்டு அச்சியற்றக்கொடுத்தேன். அப்புத்தகம் வெளிவருவதற்குள்ளே, தேவஸ்தானங் கமிட்டியாரவர்கள் மேற்படி அழகப்ப செட்டியாரவர்களைத் திருக்களர் விளக்கத்திற்கண்ட நஷ்டங்களைப்பற்றிக் கேட்ட கேள்விகளுக்குச் சரியான பதிலெழுதாமல், தப்புந் தவறுமாக எழுதிய இயாதாஸ்து நகல் தேவஸ்தானங் கமிட்டி ஆபீஸிலிருந்து கிடைக்கப்பெற்றேன். அவ்இயாதாஸ்து சம்பந்தமான விஷயங்களையும், கோவில்சம்பந்தமான 'தாவர சொத்து, வரும்படி' என்பவற்றைப்பற்றிய விஷயங்களையும் சிறு புத்தகமாக்கித் '**திருக்களர் விளக்கம் மூன்றும்பாகம்**' என்று பெயரிட்டு, மேற்படி அச்சாபீசிற்கொடுத்து அச்சியற்றி, இரண்டுபாகங்களையும் ஒரே புத்தகமாக வெளிப்படுத்த எத்தனப்பட்டுக்கொண்டிருக்குஞ் சமயத்தில் பஞ்சாயத்துப் பவர்ப்பிரதிநிதியாகிய மேற்படி கிருஷ்ணசாமி ஐயர் தனக்குச் சொந்த அபிப்பிராயமாகிய அடக்குமுறைச்சட்டத்தைக் கையிலெடுத்துக்கொண்டு, 'சுப்பிரமணிய பிள்ளை, சண்முகசுந்தரஞ் செட்டியார், அமிர்தங்கண்ட பிள்ளை, முருகையதொண்டைமான்' என்பவர்களுடைய ஆலோசனையின்பேரில் சுதந்தர அவசரச்சட்டப்படி, 'அமிர்தங்கண்ட பிள்ளை, முருகைய தொண்டைமான்' என்னும் இரண்டு போர்வீரர்களையும் சேனாதிபதிகளாக்கி, தமது காலாட்படைகளாகிய கோவில் ஆட்களைத் திரட்டி அணிவகுத்து கமாதூர எசலாகிய 'போர்ப்பறை' நிகழ்த்தி, மூ. சுவாமிநாத உபாத்தியாயருடைய வேலியாகிய 'பகைவர்'களைத் தாக்கி வீழ்த்தி, வெற்றிக்கொடி நாட்டினார்கள். இவ்வேலியெறிந்த

திறனை **'வேலிப்பரணி'** என்னும் நூலாகப் பாடச்சக்தி யின்மையால், வேலியெறிவதற் காதாரமாயுள்ள கோவிலைப் பற்றியும்; வேலியெறிந்த பஞ்சாயத்தாராகிய அழகப்ப செட்டியாரவர்களைப்பற்றியும்; வேலியெறிந்த பஞ்சாயத்துப் பவர்ப்பிரதிநிதியாகிய கிருஷ்ணசாமி ஐயரைப்பற்றியும்; வேலியெறிந்த ஆலோசனையாளர்களாகிய 'அமிர்தங்கண்ட பிள்ளை, சண்முகசுந்தரஞ்செட்டியார், சுப்பிரமணியபிள்ளை' என்பவர்களைப்பற்றியும்; பழ. வெ. ராம. இராமநாதன் செட்டியாரவர்கள் கோவிலுக்கு எழுதிவைத்த உயிலைப்பற்றி யும் என் சிற்றறிவுக்கெட்டியதை ஒரு சிறு புத்தகமாக்கித் **'திருக்களர் விளக்கம் நான்காம்பாகம்'** என்றுபெயரிட்டு அச்சியற்றி அவ்விரண்டு பாகங்களோடு சேர்த்து மூன்று பாகங்களையும் ஒரே புத்தகமாக வெளிப்படுத்தியுளேன். முதன் மூன்றுபாகங்களிலுமுள்ள மாறுதல்களை நான்காம் பாகத்திற்கண்டபடி திருத்திக்கொள்ளவும். இம்மூன்று பாகங்களும் ஒரே புத்தகமாக வெளிவருவதற்கு இடையரு முயற்சியோடு தூண்டுதல் செய்தவர்களுக்கு மிக்க நன்றி பாராட்டுகின்றேன். குற்றமிருப்பினும் குணமெனக் கொள்வார்களாக.

**தி. மூ. சு.**

சிவமயம்.

# திருக்களர் விளக்கம்.

## (இரண்டாம் பாகம்)

காப்பு.

மாமலர்க் கோதை நாளு மகிழ்திருக் களருள் வைகுந்
தேமல ரிதழி வேய்ந்த செஞ்சடைக் கடவு ளோர்பாற்
காமர்பூங் கொம்ப ரீன்ற வலம்புரிக் களிற்றின் வண்ணத்
தாமரை புரையுஞ் செம்பொற் ருளிணை வணங்கல் செய்வாம்.

### திருக்கோவில்

ஸ்ரீ வேதாகம விபவாநந்த சாக்ஷாத்காரமாயும், பரிபூரணராயும், சச்சிதானந்தராயும், விபுவாயும், அருவாயும், உருவாயும், அருவுருவமாயும், ஆதிமத்தியாந்தரகிதராயும் விளங்கும், எண்குணக் கடவுளாகிய நமது பரமேஸ்வரன் தமது அடியார்களுடைய பக்குவாபக்குவத்துக்குத் தக்கபடி 'சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சிய' பதங்களையளித்தாள்வதற்கான திருவுருவுடனெழுந்தருளியிருக்கின்ற சிவதலங்கள் பலவற்றுள்ளே பிறந்தோர்க்குப் பிறவாப் பெரும்பேறளிக்கும் பெரும்பதியாயும், நினைத்தோர்க்கு நீங்கா நெடும்பேறளிக்கும் நீணெறிப்பதியாயும், தரிசித்தோர்க்குத் தனிப்பெரும் பேறளிக்குந் தவப்பெரும்பதியாயும், இறந்தோர்க்கு இறவாப் பெரும்பேறளிக்கும் இருநிதிப்பதியாயும், விளங்காநின்ற திருக்களர்ச் சிவதலமானது முற்காலத்தில் **"தருமபுரம்"** ஆதீனத்தி லிருந்ததாகப் பின்வரும் தல புராணச் சிறப்புப்பாயிரச் செய்யுளால் தெரியவருகின்றது.

"கருணைமிகு நந்தியுரைப் படிசூத மாமுனிவன்
கழறு மாறே
தருமைவரு மழகியசிற் றம்பலசற் குருவருளே
தரித்து நாளு
முருகனெனக் கலையுணர்ந்த சரவணமா முனியருளான்
மொழிகேன் றேத
விருநிலத்தி லுயர்களந்தை யாதியப்பன் பசுந்தமிழா
லியம்பல் செய்தான்".

அத்தருமபுரம் ஆதீனத்தார்கள் "வல்லபதேவன்" என்னும் அரசன் காலத்தில் இக்கோவிலுக்குத் தானஞ் செய்யப்பெற்றிருந்த "பஞ்சநதவாண (சந்தண) நல்லூர்" கிராமத்தை தருமபுர ஆதீனத்தின் ஒரு பகுதியாயுள்ள "திருப்பனந்தாள்" மடாலயத்துக்குச் சொந்தமாக்கிக் கொண்டு, கோவிலைக் கவனிக்காமல் விட்டுவிட்டார்கள்.

## பஞ்சாயத்தார்கள்.

தஞ்சாவூர் சர்க்கிள் தேவஸ்தானங் கமிட்டி ஏற்பட்ட பின்பு "சீனு முதலியார் அவர்கள், ஆறுமுகத்தா பிள்ளை அவர்கள், வீரராகவக் கண்டியரவர்கள், ஸ்ரீநிவாச முதலியாரவர்கள், திருவேங்கட முதலியார் அவர்கள், சடகோப முதலியார் அவர்கள், சிவராமகிருஷ்ணையர் அவர்கள் தியாகராஜசுவாமி உடையார் அவர்கள், நாராயண ஐயங்கார் அவர்கள், கோவிந்தசாமி உடையாரவர்கள், இராசு முதலியாரவர்கள், S. இரங்கசாமி முதலியாரவர்கள், ஐயப்ப முதலியாரவர்கள், ராம. ஆத. மெ. இராமசாமி செட்டியார் அவர்கள், பழ. வெ. ராம. இராமநாதன் செட்டியார் அவர்கள் K. T. கிருஷ்ணசாமி முதலியார் அவர்கள், கோபாலசாமி முதலியார் அவர்கள், சோமசுந்தர முதலியார் அவர்கள்,

பாலகிருஷ்ண முதலியார் அவர்கள், ஆ. பழ. நா. வயி. நாடிமுத்துப் பிள்ளை அவர்கள், க. வீ. சொ. வீ. அழகப்ப செட்டியார் அவர்கள்'' என்பவர்கள் பஞ்சாயத்தார்களாக நியமனம் பெற்றார்கள். இவர்களுள் ''நாராயண ஐயங்கார் அவர்கள், கோவிந்தசாமி உடையார் அவர்கள், ஐயப்ப முதலியாரவர்கள், ராம. ஆத. மெ. இராமசாமி செட்டியார் அவர்கள், K. T. கிருஷ்ணசாமி முதலியார் அவர்கள், ஆ. பழ. நா. வயி. நாடிமுத்துப் பிள்ளை அவர்கள்'' என்பவர்கள் பஞ்சாயத்து உத்தரவுகளை மாத்திரம் பெற்றுக் கொண்டார்கள்; கோவிலை ஒப்புக்கொள்ளவில்லை. கோவில் பாலாலயஞ்செய்து, 23-வருஷகாலம் காடு மூடப்பெற்றிருந்தது; அந்தக் காலங்களில் தேவஸ்தானம் இன்ஸ்பெக்டராகிய முற்கூறிய சிவராமகிருஷ்ணையரவர்கள், 5-வருஷ காலமும், தேவஸ்தானங் கமிட்டி மெம்பர்களி லொருவராகிய சிங்காரவேலுடையாரவர்கள் 18-வருஷ காலமும் மேல் விசாரணை வகித்திருந்தார்கள்; அக்காலங்களில் ''காலை மாலை'' இரண்டுகாலப் பூசைகூடச் சரிவர நடக்கவில்லை; கோவிலில் ஒரு பைசாகூட மீதமில்லை. அக்காலத்தில் கோவிலுக்கிருந்த நிலந்தான் இக்காலத்திலு மிருக்கிறது.

துருவாச மகா முனிவரைப்போன்ற தபோநிதியாகிய ஸ்ரீ வீரசேகர மகா முனிவரும் இருபத்து நான்கு திருக்கோயிற்கட்டிய ஐயடிகள் காடவர் கோன் நாயனாரைப்போன்ற திருத்தொண்டராகிய இராசு முதலியார் அவர்களும், ஏகமனதுடையவர்களாய் கோவிலைப் பிரித்து, பூமிமட்டத்தோடு நிறுத்தி பூமி மட்டத்துக்குக் கீழேபிரித்து எவ்விதமான கலாசோதனையுஞ் செய்யாமல் ஆன்மார்த்த பூசைசெய்யும் வீரசைவர்கள் கழுத்தில் அணிந்திருக்கின்ற சிவலிங்கத்

திருப்பேட்டகம் போலவும்; சைவர்கள் மடியில் வைத்துக்கொள்கின்ற விபூதிச் சம்புடம் போலவும்; சிவலிங்கப் பெருமான், சபாநாயகப் பெருமான், சோமசுந்தரப் பெருமான்' முதலிய எல்லாத் திருவுருவங்களுக்கும் ஒரு திருக்கோயிலும்; தேவியாருக்குத் தனியே ஒரு திருக்கோயிலும் "அழகொழுக" அமைத்து; திருவுருவங்களை "காகம், குருவி, அணில், எலி, பூனை, முதலியன தீண்டாவண்ணம் பேட்டகத்துள் வைப்பது போலப் பிரதிஷ்டை செய்து; விரோதிகிருது-ௗு சித்திரை-மீ குருவாரம் புனர்பூச நட்சத்திரங்கூடிய சுபதினத்தில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகஞ் செய்வித்தார்கள்.

இத்தலத்தைச் செந்தாமரைப் பூக்கள் நிறைந்த தடாகம் போலவும், அறிவாளிகள் நிறைந்த சபைபோலவும், நீதி நெறித் தலைவனைப்பெற்ற அரசாட்சிபோலவும், மலையின்மேலிட்ட தீபம்போலவும், பூரணைச் சந்திரனைப்போலவும், பிரகாசிக்கச்செய்து, பிரமோற்சவம் நடாத்தி பத்தாநாள் மகாரதம் தெற்குவீதியிற் போகும்போது "மகாதேவா! மகாதேவா!! மகாதேவா!!!" வெனப் பன்முறை உச்சரித்துக் கொண்டு "சிவசாரூபம்" பெற்றுத் திருக்கோயில்கொண்டு விளங்காநின்ற ஆண்டவராகிய ஸ்ரீ வீரசேகர மகா முனிவருக்கு 'திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் சோதியுட் கலந்த மாதத்திலே, சுப்பிரமணியக் கடவுள் திருவவதாரமான திருநட்சத்திரத்திலே, குருபூசை செய்வோர் பெரும் புண்ணியத்தை யடைவர்.

இக்கோவிலை நன்னிலைமைக்கு கொண்டுவரவேண்டுமென்ற திருநோக்கம் மிகக்கொண்ட தஞ்சாவூர் சர்க்கிள்

தேவஸ்தானம் கமிட்டி மெம்பர்களாக விருந்த "அருள்நிறை P. R. நடேச ஐயரவர்கள், திருவளர் V. A. வாண்டையார் அவர்கள். அருள்மிகு சாம்பமூர்த்திராயரவர்கள், புகழ்மிகு திருவேங்கட முதலியார் அவர்கள்" என்னும் இப்புண்ணிய சீலர்களுடைய வமிசங்கள் எக்காலமும் பூரணைச் சந்திரன் போல் தழைத்தோங்கி விளங்க எல்லாம் வல்ல இறைவன் இன்னருள் பாலிப்பாராக.

"இத்திருக்கோயில், பூவனூர்த் திருக்கோயில்" முதலிய எண்ணில்லாத சிவதிருக்கோயில்களையும்; வடுகூர்ப் பெருமாள்கோயில், தில்லைவளாகம் இராமசுவாமிகோயில்' முதலிய பல வைணவ திருக்கோயில்களையும், 'முயற்சி யுடையா ரிகழ்ச்சியடையார்' என்றபடி பெருமுயற்சி கொண்டு "மனம், வாக்கு, காயம்" என்னும் திரிகாணங் களினலும் "இராப்பகல்" நித்திரையின்றி திருப்பணி செய்து பெரும்பேறெய்திய அருண்மிகு அறிவாளராகிய இராசு முதலியார் அவர்களை சைவர்களும், வைணவர்களும், தெய்வமாகப்போற்றக் கடமைப்பட்டவர்களே யாவர். இப் புண்ணிய திருத்தொண்டருடைய வமிசம் என்றென்றுந் தழைத்தோங்க பரமபதி இன்னருள் பாலிப்பாராக.

முற்காலத்தில் இக்கோவில் பஞ்சாயத்துப் பதவியை இராஜிநாமா கொடுத்துவிட்டு, தஞ்சாவூர் சர்க்கிள் தேவஸ் தானம் சமிட்டி மெம்பர் பதவியை வகித்திருந்த, முற்கூறிய "திருவேங்கட முதலியார் அவர்கள்" இத்தலபுராணம் அச்சேற்றுவதற்கு வேண்டிய பேருதவிபுரிந்தும், முற்கூறிய "இராசு முதலியார் அவர்கள், S. இரங்கசாமி முதலியார் அவர்கள்" என்பவர்களைப் பெருமுயற்சியெடுத்து இக்கோயிற் பஞ்சாயத்தார்களாக நியமித்தும்; திருப்பணி

நடந்த காலத்தில் தம்முடைய சொந்த ஆட்களை வைத்துக் கொண்டு கூடவிருந்து வேண்டிய உதவிபுரிந்தும்; பிரகாரம் தளவரிசை போட்டு முடித்துவிட்டு, இன்றோடு என்வேலை முடிந்து விட்டதென்று சொல்லிவிட்டு, சாகைக்குச்சென்று கடவுளுடைய திருவடிநீழலை யடைந்தருளினர். கண்ண பிரானைப்போன்ற பேரறிவாளராகிய இப்புண்ணிய சீலர், கோவில் சம்பந்தமாக "ஸ்ரீவீரசேகர மகாமுனிவர் கட்டளையிட்டருளிய வேலையை முடித்துவிட்டேனென் பதையும், இன்றைக்கு மரணம் வந்துவிட்டதென்பதையும்" உலகோ ரறிந்துகொள்ளும்பொருட்டு "இன்றோடு என் வேலை முடிந்துவிட்டதென்று" சொல்லியருளினரென்பது நிச்சயமே யாகும்.

ஸ்ரீவீரசேகர மகாமுனிவரிடத்தில் மிக்க பெரும்பக்தி யுடையவரும், இராசு முதலியார் அவர்களிடத்தில் மிக்க பேரன்புடையவரும் ஆகிய முற்கூறிய S. இரங்கசாமி முதலியார் அவர்கள் ஸ்ரீவீரசேகர மகாமுனிவருடைய கட்டளைப்படி, இராசு முதலியார் அவர்களுக்கு உதவியாக இராப்பகல் நித்திரையின்றி "மனதினாலே" திருக்கோயிற் கட்டிய "பூசலார்" நாயனாரைப்போல, "மனம், வாக்கு, காயம்" என்பவைகளினாலே, மிக்க பேரன்போடு "திருப் பணி" சம்பந்தமான எல்லா வேலைகளையுங் கவனித்து நடாத்தியும்; தேவியாருக்குச் சொந்தச் செலவில் "வெள்ளிக் கவசம்" செய்துவைத்தும்; சீருஞ்சிறப்பும் பொருந்த பக்தி சிரத்தையோடு 'இலட்சதீபம்' போடுவித்தும்; பத்து வருஷ காலம் கோவில் விசாரணையை வகித்து 'நித்திய நைமித்திகங் களை' வழுவின்றிக் காலாகாலத்தில் கண்டோர் களிக்கும்படி செய்வித்தும் பெரும்புகழெய்தினர். இப்பேரறிவாளராகிய பக்திமான் காலத்தில் "பூசையும், திருவிழாவும்" நடந்தது

போல, இனிமேல் எக்காலத்திலும் நடக்கும்படி எல்லாம் வல்ல தபோநிதிகளாய் விளங்கும் துருவாச மகாமுனிவரும் வீரசேகர மகாமுனிவரும் அருள்புரிவார்களாக.

கோவில் கையிருப்புப் பொருள்களைக் கைப்பற்றிக் கொண்டு கணக்குச் சோடிக்க வேண்டியதற்காகவும்; "குடிக்காணி பாத்தியத்தினுலோ, பலாத்காரத்தினுலோ" பட்டாச் செய்து அனுபவித்துக் கொண்டிருக்கிற கோவில் நிலங்களுக்கு மூலசாதனமாயுள்ள "சிலாசாதனம், செப்புச் சாதனம்" என்பவற்றைச் சிதைக்க வேண்டியதற்காகவும்; கோவிலில் பூமிக்குள் "நவரத்தினப் பெட்டகங்கள், தங்கப் பாளப் பெட்டகங்கள்" இருக்கக்கூடுமென நினைத்து, அவற்றைக் கைப்பற்ற வேண்டியதற்காகவும் அநேகர் திருப்பணி செய்யப் போவதாகச்சொல்லி, கொஞ்சம் கற்களை வரவழைத்துப்போட்டு, சில தச்சர்களை வரவழைத்து வைத்துக்கொண்டு சத்தங்காட்டி, கோவில்களை யிடித்துப் பூமி மட்டத்துக்குக் கீழேபிரித்துக் கலாசோதனைசெய்து போட்டுவிட்டு, தங்கள் எண்ணம் நிறைவேறியவுடன் பலான காரணஞ்சொல்லி பாப்பர்மனுத் தயார்செய்கின்றூர்கள் இங்ஙனஞ் செய்வோர் கோவில்களின் பொருள்களைக் கொள்ளையிட்ட மகா சிவத்துரோகிகளே யாவர். இவர்களடைவது மீளாநரகமே யாகும். நிதியின்றித் திருப்பணிசெய்யப் புகுவோரும், நல்ல கோவில்களைத் திருப்பணி செய்யப் புகுவோரும், பிரபலமான திருக்கோயில்களைத் திருப்பணி செய்யப் புகுவோரும், கோவில்களைப் பூமி மட்டத்துக்குக் கீழே பிரித்துக் கலாசோதனை செய்வோரும் கோவிற் பொருள்களைக் கொள்ளையடிக்குங் கள்ளர்களே யாவர். கலாசோதனை செய்யவேண்டுமென்று சொல்லுகிற ஸ்தபதியும் பக்காத்திருடனே யாவன். சிவதிருவுருவங்களின் கீழ்ப்

பாகத்தில் "பெரியோர்களின் எலும்புகள், இயந்திரங்கள், நவரத்தினங்கள்" என்பவற்றுள் ஏதேனுமிருக்கும். அவற்றை எடுப்போர் மூர்த்திகரத்தைக் கெடுத்த மகா சிவத்துரோகிகளே யாவர். அவர்களடைவதும் மகா ரௌரவ நரகமே யாகும். ஒன்றுமில்லையேல் மூர்த்திகரமில்லை. திருப்பணி செய்து சிவசொத்தைக் கொள்ளையடித்த குடும்பங்களெல்லாம் "சிவசொத்துக் குலநாசம்" என்றபடி வறுமையுற்று, வமிசமற்று பராதீனமாயினவென்பது உலகப் பிரசித்தம். கோவில்களை யிடித்துப்போட்டுவிட்டு, பாப்பர்களாகிவிட்டதாகச் சொல்வது, 'சூத்திலடித்தான் பற்கள்போயின' வென்பதுபோலாகும். கலாசோதனை செய்யும் மகா சிவத்துரோகிகளிடம் கோவிலை ஒப்புவிப்பதே அதிபாதகமாகும். மேற்கண்டவற்றையெல்லாம் இடித்துப் போட்டிருக்கும் "திருக்கடிக்குளம், திருச்சிற்றேமம், திருப்பாதாளீச்சுரம், திருக்களர்த்தை ஆதித்தேச்சுரம்" என்னும் சிவதலங்களினால் நன்குணரலாகும்.

முற்கூறிய பழ. வெ. ராம. இராமநாதன் செட்டியார் அவர்கள் "கட்டிடம், இருக்குவேத பாடசாலை, உற்சவ சமாராதனை" என்பன ஏற்படுத்தியும்; தேவியாருக்கு தங்கத்தினால் "கவசம், புசக்கிளி, கைக்கிளி, வைரப்புலாக்கு, இரத்தினத்தாலிக்கோர்வை" வெள்ளியினால் "திருவாசிகை, அலங்காராசனம், சரவிளக்குகள், கந்தருவ விளக்குகள்" என்பனசெய்து வைத்தும்; 'சிவலிங்கப்பெருமான், பிரதோஷநாதர், சுக்கிரவார அம்பாள்' என்னும் திருவுருவங்களுக்கு 'வெள்ளிக்கவசங்கள்' பண்ணிவைத்தும்; பஞ்சாக்கர உபதேச மூர்த்தியாகிய சண்முகக்கடவுளுக்கு வெள்ளியினால் 'கிரீடம், அபயம், வரதம், வேல்' என்பன அமைத்து வைத்தும்; வெள்ளி "சோடச உபசார சாமான்கள்" செய்து

வைத்தும்; 'திருவனந்தல், உருத்திரசெபம், குழித்தளிகை, தேவியார் நேத்திரவிளக்கு, நித்தியப்படி அருச்சனை, தேர்மண்டபப்படி, சிவராத்திரி' என்னும் கட்டளைகள் ஏற்படுத்தியும், தேவியாருக்கு 'மஞ்சள், பச்சை, நீலம், என்னும் மூன்று பட்டுப்புடவைகள், உற்சவத்துக்கு மூன்று அலங்காரப்படுதாக்கள், "கெண்டாமணி" என்பன வாங்கி வைத்தும்; 'பெரிய கோபுரவாயிற்படி தளவரிசை, வசந்த மண்டபத்துக்கெதிரில் கீத்துக்கொட்டகை, சதுரக்கல் தளவரிசை" என்பன போடுவித்தும் ரௌத்திரி வருஷம் வைகாசி மாதம் ஆதிவாரம் சுவாதி நட்சத்திரங்கூடிய நற்றினத்தில் மருந்து சாத்திக் கும்பாபிஷேகஞ் செய்வித்து, அன்றிரவு பஞ்சமூர்த்திகளையும் வீதிகளில் எழுந்தருளப் பண்ணினர். மேற்கண்ட "இருக்குவேத பாடசாலை, உற்சவ சமாராதனை, கோவிற்கட்டளைகள்" எக்காலமும் நடந்துவரும் பொருட்டு இவ்வூரில் வேலி 5-ம், ஒருக்குடியில் வேலி 32-ம், ஆக நிலம் வேலி 37 கிரயசாசனம் வாங்கி 1927-ம்-ஹு எப்ரல்-மீ 28உயில் ஒரு உயில் எழுதி வைத்திருக்கிறார். இவர் விசாரணையில் கோவிலில் 'கட்டிச்சூட டின், பாராத் சாம்பிராணி டின், தேன் டின், புத்துருக்கு நெய் டின், கழுவி இளநீர்விட்டு வெல்லம்போட்டு ஆட்டிய எள் நெய் டின், தேங்காய் நெய் டின், இருப்பை நெய் டின், என்பவைகளும், பன்னீர்ப்புட்டிகளும், சந்தனக் கட்டைக் கட்டுகளும், "அரிசி, உளுந்து, பயறு, கடலை, உப்பு, புளி, மிளகாய், மிளகு, சீரகம், சர்க்கரை, பாக்கு, மஞ்சள், திரவியம்" என்னும் மூட்டைகளும் அளவின்றி அடுக்கிவைத்திருந்தார். கோவில் விசாரணை இவரைவிட்டு நீங்கிய வருஷத்தில் நெற்கலம் 3000, சேர்க்கட்டி வைத்திருந்தார். ஸ்ரீவீரசேகர மகாமுனிவருடைய திருநோக்கத்துக்கு மாறாக "நவக்கிரகங்கள், வைரவர்" என்னும்

திருவுருவங்களை வெளியிற் கொண்டுவந்து, கட்டைக்கோபுரத்துக்கு சமீபத்தில் 'காகம், குருவி, அணில், எலி' என்பன தீண்டும்படி பிரதிஷ்டை செய்து வைத்திருக்கிறார்; பெரிய கோபுரத்துக்கும் திருக்குளத்துக்கும் நடுவிலுள்ள நடைகாவணத்தில் ஒழுங்கீனமாகக் கட்டிடத்தை முன்னுக்கிழுத்துக் கட்டியிருக்கிறார். துருவாச மகாமுனிவருடைய திருநோக்கத்துக்கு அன்னியமாக கோவிலுக்குச் சொந்தமான ரூ. 4005, பெறுமானமுள்ள கப்பலடிக்காடு நன்செய் சர்வே 220-ல் 2, ஏகர் 2, செண்ட் 48, சர்வே 245-ல் 2, ஏகர் 3, ஆக ஏகர் 5, செண்ட் 48, இந்த ஐந்து ஏகர் நாற்பத்தெட்டு செண்ட் நிலத்தையும், தன்னுடைய நிலத்தோடு சேர்த்துக் கொண்டு தனக்குச் சொந்தமான ரூ. 1300, பெறுமானமுள்ள கீழ்க்கருப்பன்சேரி நன்செய் சர்வே 54-ல் 1, ஏகர் 4, செண்ட் 8, இந்த நாலு ஏகர் எட்டுச் செண்ட் நிலத்தையும் கோவில் அனுபோகத்தில் விட்டுவைத்திருக்கிறார். இவருடைய சுவீகார குமாரராகிய வெ ராம. வெ. வெங்கடாசல செட்டியாரவர்கள் கோவிலுக் கேற்பட்டிருந்த கட்டளைகளை யெல்லாம் நிறுத்திவிட்டார். மேற்கண்ட கீழ்க்கருப்பன்சேரி நன்செய் மேமற்படி வெங்கடாசல செட்டியார் அவர்களைச் சேரவும், கப்பலடிக்காடு நன்செய் கோவிலைச் சேரவும் எல்லாம் வல்ல சித்தமூர்த்திகளாகிய துருவாச மகாமுனிவரும், வீரஃசகர மகாமுனிவரும் அருள்புரிவார்களாக.

மேற்கூறிய கோபாலசாமி முதலியார் அவர்கள் சோமசுந்தர முதலியார் அவர்கள் என்பவர்களின் பிரதிநிதியாக கோவில் விசாரணைபார்க்கும் பொருட்டு கிருஷ்ணசாமி ஐயர் ஏன்பவர் இவ்வூரில் குடியேறினர். இவர் செய்கையிலும், சூட்சியிலும் துவாரகாபுரி வாசனைப் போன்றவர்;

சிங்காரவேலு உடையார் அவர்களிடத்தில் கணக்கு வேலை கற்றுத் தேறினவர்; சடகோப முதலியாரவர்களிடத்தில் கணக்கு வேலை பார்க்கும்போது தகப்பனுக்கும் பிள்ளைக்கும் பாகம்பிரித்து வைத்தவர்; பழ. வெ. ராம. இராமநாதன் செட்டியாரவர்களிடமிருந்த கோவிலை மூவாயிரக்கல நெல்லுடன், பலாத்காரமாகக் கைப்பற்றிக் கொண்டவர்; ஒரு நவராத்திரி உற்சவத்தில் வசந்த மண்டபத்தில் வைக்க வேண்டிய கொலுவை, அமுதவல்லியம்பாள் சந்நிதி வெளி மண்டபத்தில் வைத்து உற்சவம் நடத்தினார்; அவ்வுற்சவத்தில் ஒரு நாள் சந்திரப்பிரபையில் தேவியாரையும், ஸ்ரீ வீரசேகர மகாமுனிவர் (சிவலிங்கப் பெருமானுக்குச்) செய்து வைத்திருந்த வெள்ளி நாகாபரணக் குவளையையும் வைத்து; அமுதவல்லியம்பாளுடைய "மஞ்சள், பச்சை, நீலம்" என்பனவாகிய ஏழு பட்டுப்புடவைகள், "உற்சவ அலங்காரப் படுதாக்கள், ஐந்தாந் திருவிழாச் சப்பரப் படுதாக்கள்" என்பனவாகிய ஐந்து படுதாக்கள், "அசுமான கிரிகள், வாசன் மாலைகள், அசைந்தாடு மாலைகள், மகர தோரணக் கொடிகள்" முதலியவைகளினாலே காஞ்சிபுரத்தில் "காமாட்சி அம்மையார்" சிவலிங்கபூசை செய்த ஐதிகமாக அலங்காரஞ் செய்து, தீபாராதனை செய்து கொண்டு போன பிறகு "வாயுபகவான்" வாசன்மாலையைத் தூக்கி, எரிந்து கொண்டிருந்த விளக்கிற் போட்டு, எல்லாவற்றையுங் கொளுத்தி, நாகாபரணக் குவளையையும் உருக்கினார்; மெய்காவல் அசாமி விழித்துக்கொண்டு சத்தம்போட்டு "சந்திரப் பிரபை" முற்றும் வேகாமல் காப்பாற்றினான். மேற்படி கிருஷ்ணசாமி ஐயர் சந்திரப்பிரபையைப் பழுதுபார்த்து வைத்துவிட்டு, மௌனஞ்சாதித்து விட்டார். இவருடைய காலத்திலேயே மேற்படி "உருகிய நாகாபரணம், வெள்ளிக் கைத்தீவட்டிகளினுடைய 2 வெள்ளிப்புதிலிகள், வெள்ளி

இடபங்களினுடைய 2 புடுக்குகள், 2 மணிகள், 8 பதக்சங்கள், சின்ன வெள்ளியிடபத்தினுடைய நெற்றிப்பட்டம்'' முதலியன காணுமற்போய்விட்டன. மேற்படி கிருஷ்ணசாமி ஐயர் "திருநந்தனவனம், பசுமடம், இருக்குவேத பாடசாலை, எசுர்வேத பாடசாலை, சாமவேத பாராயணம், குருபூசை மடம்'' என்பவற்றின் கீழ் நிலங்களுக்காகவும், விளக்குடி தென்னந்தோப்புக்காகவும், பரிவர்த்தனை செய்திருந்த, கோவில் நன்செய் நிலங்களின்பேரில் ஏற்பட்ட வியாச்சியங்களில் சரிவர நடவடிக்கை நடத்தாமலும், மேற்கண்ட தருமகர்த்தாக்களுக்குத் தெரிவித்து அவர்களைக்கொண்டு நிலங்கொடுத்தவர்களின்பேரில் நடவடிக்கை நடத்தாமலும், மௌனமாக இருந்துவிட்டார்; இவர் இவ்வூருக்கு வந்த பின்பு சம்பாதித்து 'தாயார் பெயரால் கிரயசாசனம் வாங்கியிருக்கும் நிலத்தின்பேரில் "வியாச்சியம்'' ஏற்பட்டால் என்ன பாடுபடுவார்; இவர் சரிவர நடவடிக்கை நடத்தாத காரணத்தினுல் இப்போது கோவிலுக்கும், பின்னுல் முற்கூறியதருமகர்த்தாக்களுக்கும் பெருத்த நஷ்டமுண்டாகிவிட்டன; இவர் காலத்தில் "விறகுவாடி, வாகனமண்டபம், குருக்கள் சுயம்பாகி வகையரு ஐந்து வீடுகள், தேர்நிலைகளுக்குத் தெற்கிலும் வடக்கிலுமுள்ள கட்டிடங்கள்'' என்பன இடிந்து விழுந்துவிட்டன; இவர் மழையொழுக்கைக் கவனிக்காமலிருந்தது போலவே கட்டிடங்கள் இடிந்து விழுந்ததையும் கவனிக்கவில்லை. இவருடைய சொந்தக்கட்டிடங்களா யிருந்தால் கவனிக்காமலிருப்பாரா? தேர்நிலைகளுக்கு தெற்கிலும் வடக்கிலுமுள்ள கட்டிடங்களின் பகுதிப்பணத்தைக் கொண்டே. எல்லாக் கட்டிடங்களையும் பழுது பார்த்திருக்கலாம். மேற்படி கிருஷ்ணசாமி ஐயர் இளந்தென்னமரங்களைச் சாத்துக் குத்தகைக்குக் கொடுத்த காரணத்தினுல் 25-தென்னமரங்சள் பட்டுப்

போயின. இவர் காலத்தில் பூமி நன்றாக விளையவில்லை; இவர் கிராம வழக்க மறியாதவர்; இவர் காலத்தில் கோவிலுக்கு ஏற்பட்ட கடன்கள் டிக்கிரியாகி சப்திக்கு வந்து கொண்டிருக்கின்றன. இவர் கோவிலை விட்டு விலகி கோவிலூர் மடாலயத்தில் தாசில்தாராக நியமனம் பெற்றிருந்தார்; இவர் சென்ற பிரசோற்பத்தி-ஸு மாசி-மீ 23உ அமுதவல்லியம்பாளுடைய ரூ 500 பெறுமானமுள்ள தங்கத்தாலி வகையறுக்கோர்வை திருட்டுப்போனதைப் பற்றி விசாரணைக்கு வந்து சுயம்பாகி கிருஷ்ண ஐயரோடு கலந்து பேசிக்கொண்டு அத்திவெட்டிப் பெரியாண்டவர் கோவிலில் சத்தியம் வாங்கும்படி சொல்லிவிட்டுப் போனார். இவர் வீட்டுத்தாலி திருட்டுப் போனால் சந்தேகப்பட்டவர்களிடத்தில் சத்தியம் வாங்கச் சொல்வாரா? திருடர்களுக்கு சத்தியமுண்டா? சத்தியத்திற்குப் பயந்தவர்கள் திருடுவார்களா? திருடர்களுக்குத் தெய்வமுண்டா? தெய்வ நம்பிக்கையுடையவர்கள் திருடுவார்களா? தெய்வ நம்பிக்கையுடையவர்கள் தெய்வத்தினிடத்தில் திருடுவது வழக்கமா?

மேற்கண்ட க. வீ. சொ. வீ. அழகப்ப செட்டியாரவர்களால் கோவிலுக்கு எவ்வித தருமமும் ஏற்படவில்லை; இவர் கோவிலுக்குச் சொந்தமான பனைமரங்களில் சில மரங்களை வெட்டிவிட்டார்; சுவாமி அம்பாள் தேர்முட்டிகளினிடையில் அறுப்புக்குழி வெட்டிவைத்திருக்கிறார்; அவ்வறுப்புக்குழியில் மழைத்தண்ணீர் தங்கும் பட்சத்தில் அத் தேர்முட்டிகளுக்கு அபாயம் நேரிடுமென்பதிற் சந்தேகமில்லை. சென்ற பிரசோற்பத்தி-ஸு மாசி-மீ 23உ அமுதவல்லியம்பாளுடைய ரூ 500 பெறுமானமுள்ள தங்கத்தாலி வகையறுக்கோர்வை திருட்டுப் போனதைப் பற்றி 'சுப்பிரமணியக் குருக்கள்' சுயம்பாகி கிருஷ்ண ஐயர், மெய்காவல்

இராமலிங்கம் என்பவர்களிடத்தில் அத்திவெட்டிப் பெரியாண்டவர் கோயிலில் சத்தியம் வாங்கிக்கொண்டு, அவர்களிடத்திலும், 'சோமசுந்தரக் குருக்கள் முதலானவர்களிடத்திலும் பொதுவாக ரூ. 100 மாத்திரம் வசூல் செய்து ஸ்ரீமத் மகாதேவ ஞானதேசிக சுவாமிகளிடங் கொடுத்து தாலிசெய்து வைத்திருக்கிறார்கள். திருட்டுப்போன தாலி 'தகட்டுத்தாலியு மல்ல, அரக்கு சம்பந்தமுடையது மல்ல' தங்கத்தை உருக்கிவார்த்து தமர்வைத்து நகாசு செதுக்கியது; குண்டுகளும் அவ்வாறே செய்தவைகள்; தங்கக் கனக்கம்பியிற் கோர்த்தவைகள்; இக்காலத்திற் செய்யக் கூடியவைகளல்ல; சோழர்கள் காலத்திற் செய்து வைத்தவைகள்; பெறுமானம் ரூ. 500-க்கு அதிகமிருக்குமே தவிரக் குறையக் கூடியவைகளல்ல; அத்திவெட்டியில் சத்தியம் வாங்கியதால் இத்தலத்தில் தெய்வீகமில்லையென்று நினைத்திருக்கின்றார்களென்பதும், திருடர்கள் கோவிலில் வேலைபார்ப்பதால் சிவதிருவுருவங்களெல்லாவற்றையும் சிலாதிருவுருவங்களாக நினைத்திருக்கின்றார்களென்பதும், சத்தியஞ் செய்தவர்களிடத்திலும் செய்யாதவர்களிடத்திலும் பணம் வசூல் செய்திருப்பதால் மொட்டை மாடுகளையும் கொம்பு மாடுகளையும் சமத்துவமாக நினைத்திருக்கின்றார்களென்பதும், திருடர்களையும் திருடாதவர்களையும் ஓரிடத்தில் வைத்திருப்பதால் யோக்கியர்களைம் அயோக்கியர்களையும் சமத்துவமாக மதித்திருக்கிறார்களென்பதும், குற்றத்தைக் கண்டுபிடிக்காதவர்கள் கோவிலைக் கவனிக்கார்களென்பதும், குற்றவாளிளோடு சுத்தவாளிகளிருப்பதால் சுத்தவாளிகளும் குற்றவாளிகளாவார்களென்பதும், குற்றவாளிகளிருக்கு மிடங்களில் கொள்ளை நடக்குமென்பதும் உலகப்பிரச்சித்தம்.

ஸ்ரீமுக வருஷம் சித்திரை மாசம் 17-ம் தேதி முதல் 26-ம் தேதி வரையில் நடைபெறவேண்டிய பிரமோற்சவம் நடை

பெறவில்லை. மேற்படி அழகப்ப செட்டியாரவர்கள் 'மடத்திலும், மண்டபப்படி செய்வோரிடத்திலும், மற்றும் பலரிடத்திலும் பொருள் வசூல் செய்து 'பிரகாரங்கள், சலதாரைகள் என்பவற்றைப் பழுதுபார்த்து ஸ்ரீமுக வருஷம் வைகாசி மாசம் சோமவாரம் திருவோண நட்சத்திரங்கூடிய மங்கலநாளில் மருந்து சாத்திக் கும்பாபிஷேகஞ் செய்வித்து, அன்றிரவு பஞ்சமூர்த்திகளையும் திருவீதிகளில் எழுந்தருளப் பண்ணினர். ஸ்ரீ வீரசேகர மகாமுனிவருடைய திருநோக்கத்துக்கு விரோதமாக 'துற்கையம்பாளை' வெளியில் கொண்டு வந்து காகம் 'எச்ச' அபிஷேகஞ் செய்யும்படி பிரதிஷ்டை செய்திருப்பதும், தூபிகைகளினுடைய புதிய பட்டு வஸ்திரங்கள் பழைய பட்டுவஸ்திரங்களானதும், சண்டேசுரப் பெருமான் இடபவாகனத்தில் எழுந்தருளியதும் மகா சிவத்துரோகமேயாகும். பிரமதீர்த்தத்தை, முத்தி மண்டபம் தருமகர்த்தாவும், திருநந்தனவனம் தருமகர்த்தாக்களும் ரூ 50 கொடுத்து வெட்டுவித்தார்கள்; வெட்டியவர்கள் சரியான முறையில் வெட்டாமையால் விரைவில் தூர்ந்துவிடுமென்பதிற் சந்தேகமில்லை. மேற்படி அழகப்ப செட்டியாரவர்களுக்குப் பிரதிநிதியாக கோவில் விசாரணை பார்க்கும் பொருட்டு முற்கூறிய கிருஷ்ணசாமி ஐயர் இவ்வூரில் குடியேறியிருக்கின்றார்; இவருக்கு மாசச் சம்பளம் ரூ 25; இந்த இருபத்தைந்து ரூபாய்க்கும் காலக்கிரயப்படி நெல் கலம் 25-விற்கவேண்டும்; இவர் இக்கோவிலில் சம்பளம் பெற்றுக்கொண்டு சிவபுரிக்கோவில் விவகாரமும் நடத்த வேண்டுமாம். முன்னாலே கோவிலிலும் பின்னாலே மடத்திலும் விலக்கப்பெற்ற 'அமிர்தங்கண்ட பிள்ளை, முருகைய தொண்டைமான் என்பவர்கள் 'பழையகுருடி கதவைத்திறடி என்றபடி கோவிலில் காரியம் பார்க்கின்றார்கள்; இவர்களுக்கு மாசச் சம்பளம் நெற் கலம் 9; மேற்படி கிருஷ்ணசாமி ஐயர்

சூட்சியினலே ஒருவர் பார்க்கும் வேலைக்கு இருவருக்குச் சம்பளங் கொடுக்கப்படுகின்றன. ஆக மூவருக்கும் மாசச் சம்பளம் நெற்கலம் 34. கோட்டூர் இரங்கசாமி முதலியாரவர்களுடைய தரும எஸ்டேட்டுக்கு இவ்வூரில் வேலி 75-ம், புத்தூரில் வேலி 10-ம் ஆக நிலம் வேலி 85 இருக்கிறது; இந்த எண்பத்தைந்து வேலி நிலமும் 100 ஏரைக்கொண்டு, 4-மணியம் 4-விசாரிப்பு என்பவர்களால் 'சாகுபடி, கண்டு முதல்' முதலின செய்யப்படுகின்றன. 4-மணியத்துக்கும் நெற்கலம் 24 ரூ 8; சாலக்கிரயப்படி எட்டு ரூபாய்க்கும் நெற் கலம் 8, ஆக நெற்கலம் 32; 4-விசாரிப்புக்கும் நெல் கலம் 16, ஆக நான்கு மணியம் நான்கு விசாரிப்புகளுக்கு மாசச்சம்பளம் நெல்கலம் 48; ஏர்மானியம் வேலி 5 நீக்கி ஒரு மணியத்துக்கும் ஒரு விசாரிப்புக்கும் சராசரி வேலி 20 ஏர் 25 ஆகிறது; இந்த இருபது வேலிக்கும் அசாமிச் சம்பளம் நெற்கலம் 144 செலவாகிறது; கோவில் நிலம் வேலி 19, மா 10; இதில் ஏலத்தில் போனது வேலி 2, மேளம் வகையரு மானியம் வேலி 1 மா 5, ஏர்மானியம் வேலி 1 மா 10 ஆக வேலி 4 மா 15 நீக்கி, பாக்கி வேலி 14 மா 15 இந்தப் பதினலு வேலி பதினைந்து மா நிலத்தையும் மேற்கண்ட மூவர்களும் 30-ஏரைக்கொண்டு சாகுபடி கண்டுமுதல் முதலியன செய்கின்றார்கள். இந்தப் ப தி ன லு வேலி பதினைந்து மா நிலத்துக்கும் அசாமிச் சம்பளம் நெற் கலம் 408 செலவாகிறது. மேற்படி எஸ்டேட்டில் வேலி 20-க்கு ஏர் மானியம வேலி 1 மா 5 ஏற்பட்டிருக்கிறது. கோவிலில் வேலி 14 மா 15-க்கு ஏர் மானியம் வேலி 1 மா 10 ஏற்பட்டிருக்கிறது; இந்த அநியாயத்தை யாரிடத்தில் சொல்லுகிறது. சாகுபடியாவது எஸ்டேட்டைப் பார்க்கிலும் துடியாக இருக்குமோ, இருக்கவே இருக்காது; கோவில் நிலத்தில் விளையும் நெல், சர்க்கார் கிஸ்திக்கும் மேற்படி மூன்று

அசாமிகள் சம்பளத்துக்கும் தன்னுைத்துப் போகும்படி பிள்ளையாருக்குத் தேங்காயுடைக்க வேண்டிய காலம் வந்து விட்டது; ஒரு மணியத்துக்கு நெற் கலம் 8, ஒரு விசாரிப்புக்கு நெற் கலம் 4 ஆக மாதச் சம்பளம் நெற் கலம் 12 கொடுத்து, 20 ஏர்வைத்து சாகுபடி செய்யும் பட்சத்தில் மேற்படி 14 வேலி 15 மா நிலத்துக்கும் வருஷம் ஒன்றுக்கு அசாமிச் சம்பளத்தில் நெற்கலம் 144-க்குமேல் எக்காரணத்தை முன்னிட்டும் செலவாகாது; கோவிலுக்கு அசாமிச் சம்பளத்தில் நெற்கலம் 264 ஏர்மானியத்தில் மா 10-க்கு நெற்கலம் 60 ஆக நெற்கலம் 324-ம், மாட்டு விலையினல் ரூ. 350-ம், ஆதாயமாகும்; மேற்படி இருபது ஏரையும் பண்ணையாகவைத்துச் சரியானமுறையில் காலாகாலத்தில் சாகுபடிசெய்யும் பட்சத்தில் நெற்கலம் 2700 கண்டிப்பாய்க் கண்டுமுதலாகும்; கடவுளிடத்தில் அன்புடையவர் பண்ணைவைத்துச் சாகுபடிசெய்து கோவிலை விருத்தி செய்வர். கடவுளிடத்தில் அன்பில்லாதவரும், சிவதிருவுருவங்களையெல்லாம் சிலா திருவுருவங்களாக நினைத்திருக்கின்றவரும், கடைத் தேங்காயை யெடுத்து வழிப்பிள்ளையாருக் குடைப்பவரும், ஆற்றிற்போகும் நீரை ஐயா குடியுங்கள் அப்பாகுடியுங்கள் என்று சொல்லுகின்றவரும், யார் சாப்பிட்டாலும் சாப்பிடவேண்டியதுதானே என்று நினைக்கின்றவரும், எது எப்படிப்போனலும் எனக்கென்னவென்று நினைக்கின்றவரும், பண்ணைவைத்துச் சாகுபடி செய்யப் பிரியப்படமாட்டாரென்பது திண்ணமேயாகும்.

அன்புஞ் சிவமு மிரண்டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருந் தாரே. (திருமந்திரம்)

ஸ்ரீமத் மகாதேவ ஞானதேசிக சுவாமிகளுடைய திருவுள்ளப்படி நல்லவரல்லவென்று கோவிலூர் மடாலயத்தினின்று விலக்கப்பெற்ற மேற்படி கிருஷ்ணசாமி ஐயரை தமக்குப் பிரதிநிதியாக இக்கோவில் விசாரணையையும் சிவபுரித்திருக்கோயில் விவகாரத்தையும் பார்க்கும்படி இக்கோவிற் சம்பளத்தில் நியமித்த மேற்படி அழகப்ப செட்டியாரவர்களுடைய "சிவபக்தி, குருபக்தியே" சிறந்த பக்தியாகும். முற்காலத்தில் இக்கோவில் விசாரணைபார்த்த பஞ்சாயத்தார்களுடைய குடும்பங்களில் மூன்று குடும்பங்கள் சந்ததியற்று நாசமடைந்தன.

## பூசகர்கள்.

"பெரியாக்குருக்கள், கனகக்குருக்கள், சாமிக்குருக்கள், சுப்பராயக் குருக்கள், முத்துக் குருக்கள், தண்டபாணிக் குருக்கள், இராமையாக் குருக்கள், ஈஸ்வரக் குருக்கள், வெங்கடேசக் குருக்கள், பொன்னையாக் குருக்கள், சின்னையாக் குருக்கள், சோமசுந்தரக் குருக்கள், சுப்பிரமணியக் குருக்கள்" என்பவர்களில் பெரியாக்குருக்களுக்கு கோவிலினின்று கொடுக்கப்பெற்றிருந்த மானியமும் மனைக்கட்டும் பராதீனமாயின.

**சோமசுந்தரக் குருக்கள்**:—இவர் காலத்திலே இரண்டு கும்பாபிஷேகங்கள் நடந்தன. அவற்றுள் ஒன்று பழ. வெ. ராம. இராமநாதன் செட்டியாரவர்களாலும், மற்றொன்று க. வீ. சொ. வீ. அழகப்ப செட்டியாரவர்களாலும் நடத்தப்பட்டன. ஸ்ரீவீரசேகர மகா முனிவராகிய ஆண்டவர் "காமிகம் முதல் வாதுளம் இறுதியாக" இருபத்தெட்டாகமங்களையும் ஓதியுணர்ந்த 'ஊமத்தநாட்டுக் குருக்கள்' முதலிய ஆகம பண்டிதர்களையும்; 'விச்சுவதருமம் முதல்

மானபேதம் இறுதியாக' முப்பத்திரண்டு சிற்ப சாஸ்திரங்களையும் நன்குணர்ந்த நால்வகைச் சிற்பாசாரியர்களையும் வரவழைத்து வைத்துக்கொண்டு சாஸ்திரயுக்தமாக சுவாமி சந்நிதிக்குள்ளே பிரதிஷ்டை செய்திருந்த 'வைரவக்கடவுள், நவக்கிரகங்கள்' என்னும் திருவுருவங்களை முதற் கும்பாபிஷேகத்திலும், துற்கையம்பாளை இரண்டாங் கும்பாபிஷேகத்திலும், வெளியிற் கொண்டுவந்து, காகம் 'எச்ச' அபிஷேகஞ் செய்யும்படி பிரதிஷ்டை செய்திருக்கின்றன. மேற்படி திருவுருவங்கள் இடமாறுதல் செய்யும் வரையில் கோவில் மூர்த்திகரமாக விருத்தியாகிக்கொண்டே வந்தது. மேற்படி சோமசுந்தரக் குருக்கள் ஸ்ரீவீரசேகர மகாமுனிவருடைய திருநோக்கத்துக்கு விரோதமாக மேற்படி திருவுருவங்களை இடமாறுதல் செய்த அன்று முதல் கோவிலில் மூர்த்திகரங் குறைந்து 'நவராத்திரி யுற்சவத்தில் தீப்பற்றி எரிதல், வெள்ளி, தங்கந் திருட்டுப்போதல், நிலங்கள் வியாச்சியத்தில் ஏலம்போதல், கட்டிடங்கள் இடிந்துவிழுதல், அடுத்தடுத்து வெள்ளம் வந்து கிராமங்கள் விளையாமற்போதல்' முதலிய அளவில்லாத நஷ்டங்கள் மேன்மேலும் விருத்தியாகிக் கொண்டே வருகின்றன. 'சிதம்பரம், திருக்கோயில் கும்பாபிஷேகஞ்செய்து, 50-வருஷமாகிறது; இன்னும் கும்பாபிஷேகஞ்செய்ய எத்தனப்படவில்லை. இக்கோயில் மகா கும்பாபிஷேகஞ்செய்து, 22-வருஷமாகிறது; இந்த இருபத்திரண்டு வருஷத்துக்குள்ளே சுயலாபங்கருதிய சோமசுந்தரக் குருக்களுடைய சூட்சியினாலே இரண்டுதரம் மருந்துசாத்திக் கும்பாபிஷேகஞ்செய்ய நேர்ந்தன. தெய்வீகமே திருவுருவாய் விளங்கிய ஸ்ரீவீரசேகர மகாமுனிவருடைய திருநோக்கத்துக்கு அன்னியமாக மேற்படி திருவுருவங்களை இடமாறுதல்செய்தவர் எந்தக் காரியத்தைச் செய்யமாட்டார்? இவர் மனச்சாட்சிக்கு விரோதமாக

மருதவனம் கோவிலில் வெறுங்கூடையை வைத்து மணியடித்ததாக வதந்தி; இவரைவைத்துப் பூஜைசெய்வது மகா சிவத்துரோகமேயாகும். ஸ்ரீவீரசேகர மகாமுனிவர் பிரதிஷ்டை செய்திருந்த இடத்திலேயே 'வைரவக்கடவுள், நவக்கிரகங்கள், துற்கையம்பாள்' என்னும் திருவுருவங்களைப் பிரதிஷ்டை செய்துவிடுகிற பட்சத்தில் கோவிற் காரியங்களெல்லாம் நிருவிக்கினமாக நிறைவேறுமென்பது நிச்சயமே.

**சுப்பிரமணியக் குருக்கள்:—** இவர் பூசைமுறையில் அமுதவல்லியம்பாளுடைய தாலிவகையறாக் கோர்வை திட்டுப்போயிற்று; இவர் மேற்படி தாலிவகையறாக் கோர்வையை அர்த்தமண்டபத்திலிருந்த பூட்டில்லாத பெட்டிக்குள்வைத்து அர்த்தமண்டபப் பூட்டில்லாத கதவுகளைச் சாத்திக்கொண்டு வீட்டிற்குப் போனதாகவும், மாலை $5\frac{1}{2}$-மணி சுமாருக்கு வந்து பார்த்தபோது காணாமலிருந்ததாகவும் சொல்லுகிறார்; இது உண்மையாகுமா? மணியகாரரிடத்திலாவது மானேசரிடத்திலாது கொடுத்துவைக்க வேண்டாமா? திருட்டுப்போனதற்கு காரணம் பூட்டுகளில்லை என்று சொல்வதைத் தவிர வேறுமார்க்கமில்லை. இவர் அத்திவெட்டிப் பெரியாண்டவர் கோவிலில் சத்தியஞ்செய்தவர்; தாலிக்குச் சொற்பத்தொகை கொடுத்தவர்; பலியிடுங் கோயில்களிலும் பூசைசெய்கின்றவர்; பலியிடுங்கோயிற் பூசகருக்கு சீவகாருண்யம் உண்டாகாது; சீவகாருண்யமில்லாத பூசகருக்கு ஈசுரனிடத்தில் அன்புண்டாகாது; ஈசுரனிடத்தில் அன்பில்லாத பூசகர் பாவத்துக்குப் பயப்படமாட்டார்; சிவத்துரோகமே செய்வார்; மேற்படி சுப்பிரமணியக் குருக்கள் வகையறாப்பேர்களைக் கொண்டு இக்கோவிற் பூசைசெய்வது மகா சிவத்துரோகமேயாகும். இக்கோவிற் பூசகர்களில் மனச்சாட்சிக்கும் சிவாகமத்துக்

கும் விரோதமாகப் பூசைசெய்த ஆறு பூசகர்களுடைய வமிசங்கள் நாசமடைந்தன.

## சுயம்பாகர்கள்.

'வெங்கடாசலையர், சிதம்பரையர், சேஷப்பையர், பஞ்சுவையர், ஐயாவையர், நடேசையர், வெங்கடகிருஷ்ணையர், வெங்கட்டராமையர், சுப்பையர், குருமூர்த்தியையர், இலட்சுமணையர், சீநிவாசையர், முத்துவையர், சங்கரையர், கோபாலையர், நாராயணசாமியையர், ஐயாவையர், சுப்பிரமணிய ஐயர், பிச்சுவையர், இராசாவையர், கிருஷ்ண ஐயர் என்பவர்களில் 'வெங்கடாசலையர், சிதம்பரையர், சேஷப்பையர்' என்பவர்களுக்கு கோவிலில் 'மானியமும், மனைக்கட்டும்' கொடுக்கப்பட்டிருந்தன; அவர்களுடைய சந்ததியார்கள் சொந்தமாக்கிக்கொண்டு விற்கிரயஞ்செய்து விட்டார்கள்; அவர்களுடைய சந்ததியும் நாசமடைந்து விட்டன. 'குருமூர்த்தியையர், பஞ்சுவையர், ஐயாவையர், நடேசையர், சுப்பையர், இலட்சுமணையர், சீநிவாசையர்' என்பவர்களுக்கு சந்ததிகளிருப்பதாகத் தெரியவில்லை.

**கிருஷ்ணையர்:**—இவருடைய சமையல் முறையில் அமுதவல்லியம்பாளுடைய தாலிவகையருக் கோர்வை திருட்டுப் போயிற்று; இவர் திருட்டுப்போன அன்றைய தினம் மாலை 3½ மணி சுமாருக்கு கோவிலுக்குப்போய், பெரிய கோபுரம் குடவறையில் மெய்காவல் இராமலிங்கம் வைத்திருந்த திறவுகோல்களை எடுத்து 'கட்டைக்கோபுரங்கள், மகா மண்டபங்கள்' என்பவற்றின் கதவுகளைத்திறந்து வைத்து கெண்டாமணி யடித்துவிட்டு, சிறிது நேரங்கழித்து, வழியில் மெய்காவல் இராமலிங்கத்தைச் சந்தித்துக்கொண்டு, குருக்கள் வீட்டிற்குப்போய் சுப்பிரமணியக் குருக்களோடு

சிறிதுநேரம் பேசிக்கொண்டிருந்து, அவரையழைத்துக் கொண்டு கோவிலுக்கு வந்ததாகத் தெரிகிறது. மெய்காவல் அசாமி கோவிலை காலை $5\frac{1}{2}$ மணிக்கும், மாலை $4\frac{1}{2}$ மணிக்கும் திறந்துவைத்து மணியடிப்பதும், மணிச்சத்தங்கேட்டு 'உட்துறை மணியம், சுயம்பாகர், குருக்கள், மேளம் வகையரு' முதலானவர்கள் கோவிலுக்கு வருவதும், உச்சிக் காலமானவுடனும், அர்த்தயாமமானவுடனும் கோவிலைப் பூட்டிக்கொள்வதும் வழக்கம். மேற்படி மெய்காவல் அசாமி பார்க்கவேண்டிய வேலையை மேற்படி கிருஷ்ணையர் பார்த்திருப்பதால் இவரையன்னியில் தாலிவகையருக் கோர்வை திருட்டுப்போகவில்லை என்பது நிச்சயமேயாகும்; மேற்படி இராமலிங்கம் கிருஷ்ணையரைச் சந்தித்தபோது கோவிலைத் திறந்துவைத்து மணியடித்தது யாரென்று கேட்காமையாலும், பந்தோபஸ்தாய் வைத்துக்கொள்ளவேண்டிய திறவுகோல்களைக் குடவறையில் வைத்துவிட்டுப் போனதாய் ஒப்புக்கொள்வதினாலும், மேற்படி கிருஷ்ணையர் திறவுகோல்களை யெடுத்து கதவுகளைத் திறந்து வைத்துவிட்டு மணியடித்ததைப்பற்றி மானேசரிடத்தில் தெரிவிக்காமலிருந்ததினாலும், கிருஷ்ணையருக்கும் இராமலிங்கத்துக்கும் தாலிவகையருக் கோர்வை சம்பந்தமாக ஒருவிதப் பேச்சு நடந்திருக்கவேண்டு மென்பதும், இராமலிங்கத்துக்குத் தெரியாமல் திருட்டுப்போகவில்லை யென்பதும் திண்ணமேயாகும். இவர்களிடத்தில் அத்திவெட்டிப் பெரியாண்டவர் கோவிலில் சத்தியம் வாங்கியதும், சத்தியம் வாங்கிய பின்பு சொற்பத் தொகை வசூல் செய்ததும், இவர்களை வேலைக்கு வைத்துக்கொண்டிருப்பதும் அறிவீனமேயாகும். இதனல் கோவிலில் சில திருடர்களிருக்கின்றார்க ளென்பதும், அத்திருடர்கள் பஞ்சாயத்துப் பிரதிநிதியாகிய கிருஷ்ணசாமி

ஐயரை வழிபடு கடவுளாகக் கொண்டிருக்கின்றார்களென்பதும், அக்கடவுளுடைய கிருபாநோக்கத்தினாலே 'உருகிய வெள்ளி நாகாபரணம், வெள்ளிப்புதிலிகள், வெள்ளிப் புடுக்குகள், வெள்ளிமணிகள், வெள்ளிப்பதக்கங்கள், வெள்ளி நெற்றிப்பட்டம்' முதலியவற்றை நாளடைவிலே திருடிக் கொண்டு போய்விட்டாரென்பதும் உண்மையேயாகும். இதற்கு மேற்படி பிரதிநிதிக் கிருஷ்ணசாமி ஐயர் தாலி வகையறுக்கோர்வை திருட்டுப்போனதற்கு அத்திவெட்டிப் பெரியாண்டவர் கோவிலில் சத்தியம் வாங்கும்படிசெய்த தீர்ப்பே தக்க சான்றாகும்.

கோவிலினுடைய திருவாபரணப் பெட்டிகளின் திறவுகோல்கள் மானேசரிடத்திலும், 'திருவாபரண அறை வசந்த மண்டபம், உக்கிராணஅறை' என்பவற்றின் திறவுகோல்கள் உட்துறை மணியத்தினிடத்திலும், கற்பக்கிரகங்களின் திறவுகோல்கள் குருக்களினிடத்திலும், மடைப்பள்ளித் திறவுகோல் சுயம்பாகரிடத்திலும், மற்றைய திறவுகோல்கள் மேய்காவல் அசாமி யிடத்திலும் இருக்கவேண்டும். எக்காரணத்தை முன்னிட்டு பூட்டவில்ல யென்று சொன்னாலும், அஃது திருட்டுக்குற்றம் அல்லது நம்பிக்கைமோசம் என்னும் குற்றத்தினின்று தப்பித்துக்கோள்வதற்காகச் சோல்வதேயாகும்.

## உட்துறைமணியம்.

'அப்பாத்துரை பிள்ளை, சீநிவாச பிள்ளை, தம்பியா பிள்ளை, சுப்பையா பிள்ளை, சபாபதி பிள்ளை, முத்துசாமி பிள்ளை, பஞ்சநதம் பிள்ளை, கோவிந்தசாமி பிள்ளை. பரமசிவம் பிள்ளை, நடேச பிள்ளை, அண்ணாமலைப் பிள்ளை, சுப்பிரமணிய தேவர், சண்முகசுந்தரஞ் செட்டியார்' என்பவர்களில்

'தம்பியா பிள்ளை' என்பவர் 'மதுரையும், ஈழமும், கருவூரும், பாண்டியன் முடித்தலையும்' கொண்டருளிய குலோத்துங்க சோழதேவர் காலத்தில் ஏற்பட்ட 'செப்புப்பட்டயத்தில்' கண்ட 'திருவாபரணங்கள்' எல்லாவற்றையும் நாளடைவிலே திருடிச் சொந்த உபயோகப்படுத்திக் கொண்டுவிட்டார்; கடைசியாக ஒன்றும் வெளியாகவில்லை; மேற்படி தம்பியா பிள்ளை திருஞானதீர்த்தம் கீழ்க்கரையில் திருநந்தனவனம் போட்டுத் தான் நேரே தண்ணீர் இறைத்துப் புஷ்பங்களை யெடுத்து 'திருமாலைகள்' கட்டிக் கோவிலுக்கு இனமாகக் கொடுத்துக்கொண்டு வந்தார்; அக்காலத்தில் இவ்வூரிலிருந்த முருகமாதவராயர் என்னும் அடியவர் கனவில் 'தேவியார்' சிறு பிராமணப்பெண்போலத் தோன்றி என்னுடைய திருவாபரணங்களைத் திருடிய பாவந்தொலைய திருநந்தன வனம் போட்டுத் தண்ணீ ரிறைக்கின்றான். 'அவனுடைய வமிசத்தை நாசஞ்செய்யப் போகின்றேன்' என்று சொல்லிவிட்டு மறைந்தருளினாராம்; அம்முருகமாதவராயர் இவ்வூர் கோவிந்தக் கண்டியர்' என்பவரிடத்தில் கனவிற் கண்டதைத் தெரிவித்து, நான் இன்றைக்கு ஊருக்குப் போகின்றேன், நீ இருப்பாய் 'உண்மையைத் தெரிந்து கொள்' என்று சொல்லிவிட்டு விக்கிரமவருஷம் தைமீ பூர்வ பக்கம் பிரதமையும் ஞாயிற்றுக்கிழமையுங் கூடிய நாளில் சிவ சிதம்பரம், அருணசலம்' என்று உச்சரித்துக் கொண்டு, இருந்த விடத்தை விட்டெழுந்து, மற்றோரிடத்தை யடைந்து சிவசாரூபம் பெற்றருளினார். மேற்படி தம்பியா பிள்ளையி னுடைய குமாரர்களாகிய மேற்கண்ட 'சுப்பையா பிள்ளை, சபாபதி பிள்ளை' என்பவர்கள் சந்ததியின்றி இறந்தார்கள். வமிசம் நாசமாயிற்று. இவ்வாறே அமுதவல்லியம்பாளுடைய தாலிவளைகையருக் கோர்வை திருடியவர்களினுடைய வமிசங் கள் நாசமடையப் போகின்றன; இஃது 'சத்தியம், சத்தியம்'

மூக்காலும் சத்தியம். மேற்கண்ட 'அப்பாத்துரை பிள்ளை சீநிவாச பிள்ளை, முத்துசாமி பிள்ளை, பஞ்சநதம் பிள்ளை, கோவிந்தசாமி பிள்ளை, பரமசிவம் பிள்ளை' என்பவர்களுக்கு வமிசமில்லை.

## பஞ்சாயத்துப் பிரதிநிதிகள்.

இராகவையங்கார், சேஷப்பையர், வ. வைத்திநாதையர், வேலுப் பிள்ளை, இராமசாமி ஐயர், புஜங்கராயர், க. வைத்திநாதையர், பாலகிருஷ்ணையர், க. கிருஷ்ணையர், பழ. இராமசாமி ஐயர், பத்தராவி முதலியார், கிருஷ்ணசாமி ஐயர், கிருஷ்ண முதலியார், சுப்பிரமணிய ஐயர், கிருஷ்ணசாமி ஐயர் இவர்களில் "இராகவையங்கார், சேஷப்பையர், வ. வைத்திநாதையர், வேலுப் பிள்ளை, இராமசாமி ஐயர், புஜங்கராயர், பாலகிருஷ்ணையர் என்பவர்களுடைய வமிசங்கள் அழிந்தன. 'க. கிருஷ்ணையர், பத்தராவி முதலியார்' என்பவர்கள் காலத்தில் 'சாகுபடியின் அனுபோக முதிர்ச்சியினாலும், மிக்க பிரயாசையினாலும் பூமி நன்றாக விளைந்தது.

**கிருஷ்ணசாமி ஐயர்:**—இவர், முன்னாலே இக்கோவிலினின்றும், பின்னாலே கோவிலூர் மடாலயத்தினின்றும் விலக்கப்பெற்றவர்; 'திரும்ப இக்கோவிலுக்கே வந்து சேர்ந்திருக்கின்றார். இவர், திருட்டை மறைக்குந் திறமைவாய்ந்தவர்; கபட நாடகச் சூட்சி கற்றவர்; வாய்ப்பேச்சு வசியமறிந்தவர்; நஷ்ட முண்டு பண்ணும் நல்லறிவாளர்; சுப்பிரமணிய ஐயரைச் சூட்சியினால் விலக்கியவர்; 'யானைக் கூட்டத்தைச் சிங்கம் விருத்தி செய்வதுபோலவும், பசுக் கூட்டத்தைப் புலி விருத்தி செய்வதுபோலவும், கொக்குக் கூட்டத்தை இராசாளி விருத்தி செய்வதுபோலவும் இக்கோவிலை விருத்திசெய்தவர்; கோவிலூர் மடாலயத்துக் காகாதவர்

இக்கோவிலுக் காகுவரா? மடத்திலிருக்கும் மனிதத் தெய்வத்துக் காகாதவர் சிவன்கோயிற் றெய்வத்துக் காகுவரா?

## காரிய (விசாரிப்பு) க்காரர்கள்.

கோபால ஒளிராயர், சங்கர ஒளிராயர், கண்ணுசாமி விசயராயர், கைலாச ஒளிராயர், பக்கிரிக்கண்ட பிள்ளை, மாணிக்கத் தேவர், அமிர்தங்கண்ட பிள்ளை, முருகைய தொண்டைமான், இவர்களில் பக்கிரிக்கண்ட பிள்ளை வேலை பார்த்த காலத்தில் தன் தாயார் பெயரால் வைக்கோற் போர்க் கட்டளையில் ரூ. 423-க்குக் கிரயசாசனம் வாங்கியிருந்த சர்வே 35-ல் 7. ஏகர் 1 செண்ட் 41; இந்த ஒரு ஏகர் நாற்பத்தொரு செண்ட் நன்செய் நிலத்தையும் கோவில் அனுபோகத்தில் சேர்த்து விட்டு; கோவிலுக்குச் சொந்தமான ரூ. 1128 பெறுமானமுள்ள காரியந்தோப்படி நன்செய் சர்வே 284ல் 2. ஏகர் 1 செண்ட் 60; வண்ணான் குளத்தடி நன்செய் சர்வே 315-ல் 1. செண்ட் 28, ஆக ஏகர் 1 செண்ட் 88; இந்த ஒரு ஏகர் எண்பத்தெட்டு செண்ட் நிலத்தையும் தன் வகையரு அனுபோகத்தில் வைத்துக்கொண்டார்; மேற்படி சர்வே 35-ல் 7. ஏகர் 1 செண்ட் 41 நடேசகண்ட பிள்ளை வகையருப்பேரா லிருக்கிறது; சர்வே 284-ல் 2. ஏகர் 1 செண்ட் 60, சர்வே 315-ல் 1. செண்ட் 28 ஸ்ரீபாரிசாத வனேஸ்வர சுவாமிபேரா லிருக்கின்றன. மேற்படி சர்வே 284-ல் 2. ஏகர் 1 செண்ட் 60 நிலத்தில் குப்புச்சாமி காலிங்கராயரிடத்தில் ரூ. 660-க்கு ஏகர் 1 செண்ட் 10 கிரய சாசனம் செய்யப்பட்டிருக்கிறது இந்த சாசனத்தையும், மேற்கண்ட வைக்கோற்போர்க் கட்டளை சாசனத்தையும் பார்வையிட்டால் உண்மை தெரியவரும். மேற்படி பக்கிரிக்கண்ட பிள்ளையும் மேற்கண்ட அமிர்தங்கண்ட பிள்ளையும் சகோதரர்கள்

## திருமுகம்.

தெய்வீகமே திருவுருவாய் விளங்கிய ஸ்ரீ வீரசேகர மகாமுனிவருடைய பரம்பரையோர்கள் திருவுள்ளமும் அரனது தோழனுகிய குபேரனுடைய மரபோர்களாகிய நகரவணிகக் கனதனப் பிரபுக்கள் திருச்சித்தமும், இத்தலம், 'பிறந்தோர்க்குப் பிறவாப்பேறும், இறந்தோர்க்கு இறவாப் பேறும், தரிசித்தோர்க்குத் தவிராப் பேறும், நினைத்தோர்க்கு நீங்காப்பேறும்' அளிக்கா நின்ற தென்பதும், இதற்குச் சான்று தெய்வீகம் பெற்று விளங்காநின்ற 'துருவாச மகாமுனிவர், வீரசேகர மகாமுனிவர்' என்னும் இரு தபோநிதிகளென்பதும்; இத்தலம் இருபத்து மூன்று வருஷம் காடு மூடப்பெற்றிருந்த தென்பதும்; அக்காலத்திற் கவனிக்காதவர்கள் எக்காலத்திலுங் கவனிக்கார்களென்பதும்; ஸ்ரீவீரசேகர மகாமுனிவர் எழுந்தருளாத பட்சத்தில் இன்றுங் காடாகவே இருக்கு மென்பதும்; அம் மகாமுனிவர் திருநோக்கத்தினுலே 'திருநந்தனவனம், பசுமடம், இருக்குவேத பாடசாலை, எசுர்வேத பாடசாலை, சாமவேதபாராயணம், குருபூசைமடம் தேவாரபாராயணம்; விபூதிமடம்' முதலிய தருமங்கள் ஏற்பட்டன வென்பதும்; அம்மகாமுனிவர் இத்தலத்தை விருத்திசெய்யும் பொருட்டு திருக்கோயில் கொண்டு தமது 'பரம்பரையோர்களையும், மரபோர்களையும்' வரவழைக்கின்ருரென்பதும்; இத்தலம் கோவிலூர் பரம்பரைக்கும் மேற்கண்ட தரும கருத்தாக்களுக்கும் சொந்த மென்பதும் நன்குணராதிருக்கவில்லை. இத்தலம் மேன்மேலும் விருத்தியடைய வேண்டுமென்ற தோற்றம் மேற்கண்டவர்களைவிட்டு நீங்காவென்பதும்; கோவிலை விரைவில் ஒப்புக்கொள்வார்களென்பதும் உலகப் பிரசித்தம். மேற்கண்ட தருமகருத்தாக்களில் குருபூசை

மடத்துத் தருமகருத்தா பாகனேரி பெரி. அழ. மு. முத்துக்கருப்ப செட்டியாரவர்கள் (1), பசுமடம் திருநந்தன வனம் தருமகருத்தாக்கள் காரைக்குடி. ராம. ஆத. மெ. மெய்யப்ப செட்டியாரவர்கள் (2), ஆத. லெ. ஆத. சொக்கலிங்க செட்டியாரவர்கள் (3), எசுர்வேத பாடசாலை தருமகருத்தா காரைக்குடி ஆத. பழ. சிதம்பர செட்டியா ரவர்கள் (4), இந்நால்வரும் சமயகுரவர்களைப் போன்ற பக்தி மான்களெனவும்; இவர்கள் கோவிலில் நித்திய நைமித்திகங் களைப் பக்தி சிரத்தையோடு நடத்துவார்களெனவும்; ஸ்ரீமத் மகாதேவ ஞானதேசிக சுவாமிகளுடைய அனுமதி யில்லாமல் பஞ்சாயத்து ஒப்புக்கொள்ளார்களெனவும் மேற்படி சுவாமிகள் அனுமதிகொடுக்கும்பட்சத்தில் ஒப்புக் கொள்ளாமலிருக்கமாட்டார்களெனவும் மகாஜனங்கள் அபிப் பிராயப்படுகிறார்கள். சுவாமிகள் கிருபாநோக்கம் வைத்து மேற்படி நான்கு செட்டியார்களையும் சாசுவத பஞ்சாயத்தாக ஒப்புக்கொள்ளும்படி அனுமதி கொடுக்கவேண்டுமெனவும்; மேற்படி நான்கு செட்டியாரவர்களையும் தஞ்சாவூர் சர்க்கிள் தேவஸ்தானங்கமிட்டியாரவர்களுக்கும், சென்னை எண்டோ மெண்ட்போர்டாரவர்களுக்கும் தனித்தனி மனுப்போட்டு சாசுவத பஞ்சாயத்தாக ஒப்புக்கொள்ளும்படி மகாஜனங்கள் மன்றாடிக் கேட்டுக்கொள்கின்றார்கள்.

## விண்ணப்பம்.

தஞ்சாவூர் சர்க்கிள் தேவஸ்தானங்கமிட்டி மெம்பர்களி லொருவராகிய கோட்டூர் திருமிகு அருள்நிறை K. T. கிருஷ்ணசாமி முதலியாரவர்கள் திருமுன்னிலையில் செய்துகொள்ளும் விண்ணப்பம். தங்கள் அருந்தவத் தந்தையாரவர்கள் இக்கோவில் பஞ்சாயத்தை இராஜிநாமா கொடுத்துவிட்டு மேற்படி கமிட்டியில் மெம்பர் பதவி வகித் திருந்த காலத்தில் இத்தல புராணம் முதற் பதிப்பு

அச்சியற்றுவதற்கு வேண்டிய உதவிபுரிந்தும்; 'திருத்தொண்டராகிய அருள்மிகு இராசு முதலியாரவர்கள், திருவன்பராகிய பக்திமிகு S. இரங்கசாமி முதலியார் அவர்கள்' என்னும் இருவர்களையும் பெரும் முயற்சியினால் பஞ்சாயத்தார்களாக நியமித்தும்; திருப்பணி காலத்தில் இத்தலத்திலேயே இருந்து திருப்பணி முற்றுங் கவனித்து பிரகாரம் தளவரிசைபோட்டு முடித்துவிட்டு, 'ஒருச்சொல் அலங்காரமாக' 'எனக்குக் கொடுத்த வேலையை முடித்து விட்டேன், எனக்கு மரணம் வந்து விட்டது' என்னும் இரண்டுவித அருத்தத்தையும், ஒரே சொல்லில் அடக்கி 'இன்றோடு என் வேலை முடிந்துவிட்டது' என்று அருளிச் செய்து முத்தித்தலமாகிய இத்தலத்திலேயே முத்திபெற் றருளியது சித்தமறிந்ததே. அம்மகானுபவரைப் போலவே தாங்களும் இத்தலத்துப் பஞ்சாயத்துப் பதவியை இராஜிநாமா கொடுத்துவிட்டு தஞ்சாவூர் சர்க்கிள் தேவஸ் தானங் கமிட்டி மெம்பர் பதவி வகித்திருப்பதால் இத்தலத் துக்கு எவ்வித தீங்கும் நேரிடாவென்பது திண்ணமே. இத்தலத்தில் தரும சம்பந்த முடையவர்களுக்கே 'பஞ்சா யத்துக்' கொடுக்கும்படி எற்பாடு செய்யவேண்டுமாய்க் கோரப்படுகிறது. தரும சம்பந்த முடையவர்களைச் சாசுவத பஞ்சாயத்தாக நியமித்து விடுகிற பட்சத்தில் கோவில் எக்காலத்திலும் நன்னிலைமையி லிருக்குமென்பது நிச்சயமே. தருமசம்பந்தமில்லாத வீணர்களைப்பஞ்சாயத்தார் களாக நியமிப்பது கோவிலை வீணாக்குவதேயாகும். வீணர் கள் இடம்பத்திற்கு பஞ்சாயத்து ஒப்புக்கொள்ள வருவார்க ளென்பது சித்தமறியாத தல்ல. தரும சம்பந்தமுடையவர் களுக்கே பஞ்சாயத்துக் கொடுக்கும்படி கடவுள் அருள் புரிவாராக.

## மனு.

சென்னை எண்டோமெண்ட் போர்டாரவர்களும், தஞ்சாவூர் சர்க்கிள் தேவஸ்தானம் கமிட்டியாரவர்களும் தஞ்சாவூர் ஜில்லா மன்னார்குடி தாலூகா திருக்களர் ஸ்ரீபாரிசாதவனேஸ்வரசுவாமி கோவில் சம்பந்தமாக மேற்படி திருக்களர் மு. சுவாமிநாத உபாத்தியாயர் என்பவரால் 24—1—33-ல் எழுதிய மனுவையும் 6—6—33-ல் வெளிவந்த 'திருக்களர் விளக்கம்' என்னும் சிறு புத்தகத்தையும் பார்வையிட்டிருக்கலாம்.

மேற்படி கோவில், க வீ. சொ. வீ. அழகப்ப செட்டியாரவர்களுடைய விசாரணையிலிருக்கிறது. மேற்படி அழகப்ப செட்டியார் அவர்களால் கோவிலுக்கு எவ்வித 'தருமமும்' ஏற்படவில்லை. கோவிலைக் கவனித்துப் பார்ப்பதற்கேற்ற சுதந்தரமும் சாவகாசமுமில்லாதவர். மேற்படி கோவிலில் 6-3-32ல் திருட்டுப்போன ரூ. 500 பெறுமானமுள்ள தாலி வகையறாக் கோர்வையைப்பற்றி மேல் நடவடிக்கை நடத்தாமல் திருட்டை மறைத்துவிட்டு, திருடர்களிடத்தில் ரூ. 100 வசூல் செய்து ஒரு சிறிய தாலி பண்ணிவைத்து விட்டு, திருடர்களைக் கோவிலில் வேலைக்கு வைத்துக் கொண்டு சம்பளம் கொடுத்துவருகின்றார். கோவிலில் 29-4-33 முதல் 8-5-33 வரையில் நடைபெறவேண்டிய பிரமோற்சவத்தை நிறுத்திவிட்டார். ஏற்கனவே இக்கோவிலுக்கு பஞ்சாயத்தார்களுடைய பிரதிநிதியாக இருந்து பெருத்த நஷ்ட முண்டுபண்ணியவரும், மேற்கண்ட திருட்டைச் சூட்சியினாலே மறைத்தவரும் ஆகிய கிருஷ்ணசாமி ஐயர் என்பவரைப் பவர்கொடுத்து பிரதிநிதியாக நியமித்திருக்கிறார். மேற்படி கிருஷ்ணசாமி ஐயருக்கு வருஷச் சம்பளம் நெற்கலம் 300, அவரால் நியமிக்கப்

பெற்றிருக்கிற இரண்டு விசாரிப்புகளுக்கு வருஷச் சம்பளம் நெற்கலம் 108, இரண்டு தலையாரிகளுக்கு ஆறு மாதத்துக்குச் சம்பளம் நெற்கலம் 18; ஆக இனம் மூன்றுக்கு நெற்கலம் 426. கோவிலுக்குச் சொந்தமாக உள்ளது வேலி 14 மா 15 இந்தப்பதினாலு வேலி பதினைந்து மா நிலத்தின் வரும்படியில் நெற்கலம் 426 அசாமிக்களுக்குக் கொடுத்துவிட்டு, பாக்கி நெல்லைக் காலக்கிரயப்படி கலம் ஒன்றுக்கு ரூ. 1 வீதம் விற்று சர்க்கார் கிஸ்தி செலுத்தவும், சர்க்கார் கிஸ்திக்குப்போதாத பட்சத்தில் கடன் வாங்கிச் செலுத்தவும், தயாரான நிலைமையில் அசாமிகள் நியமித்திருக்கிறார். ஒரு பணியத்துக்கு நெற்கலம் 96, ஒரு விசாரிப்புக்கு நெற்கலம் 48, ஒரு தலையாரிக்கு நெற்கலம் 9 ஆக இனம் மூன்றுக்கு நெற்கலம் 153. இந்த நூற்று ஐம்பத்து மூன்று கலம் ஒரு வருஷத்திற்குக் கொடுக்கவேண்டியதற்குப் பதிலாக 426 கலம் நெல் கொடுப்பதாக அசாமிகள் நியமித்திருக்கிறார். மேற்படி அழகப்ப செட்டியாரவர்களுக்கு தென்னாற்காடு ஜில்லா சிதம்பரம் தாலூகா சிவபுரியில் நாற்பது காணி (8-வேலி) நிலமும், ஒரு ரொக்கக்கடையும், கோவில் விசாரணையுமிருக்கின்றன. அந்தக் கோவில், குருக்களுக்கும் மேற்படி அழகப்ப செட்டியாரவர்களுக்கும் கோர்ட்டில் வியாச்சியம் நடக்கிறது. அந்த வியாச்சியத்தை நடத்தவேண்டியதற்காக மேற்படி கிருஷ்ணசாமி ஐயருக்கு இந்தக் கோவிலில் நெற்கலம் 300 கொடுக்கிறார். இந்தக்கோவில் சம்பந்தமாக வருஷம் ஒன்றுக்கு நெற்கலம் 96-க்கு வேலைபார்க்க எத்தனையோ பெயர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். மேற்படி கிருஷ்ணசாமி ஐயர், கோவிலூர் மடத்திலிருந்து விலக்கப்பெற்றவர். கோவிலூர் மடாதிபதியாகிய ஸ்ரீமத் மகாதேவ ஞானதேசிக சுவாமிகளுடைய சம்மத மன்னியில் மேற்படி கிருஷ்ணசாமி ஐயரை நியமித்திருக்கிறார். மேற்படி

கிருஷ்ணசாமி ஐயர் பெரும்பாலும் சிவபுரியிலேயே இருக்கின்றார்.

"திருக்களர்க் கோவிலில், (1) 'வைரவக்கடவுள், நவக்கிரகங்கள், துற்கையம்பாள்" என்னும் திருவுருவங்களை முன்னிருந்த தானத்தில் பிரதிஷ்டை செய்தல், (2) 'வெள்ளியிடபங்கள், மயில், சந்திரப்பிரபை' முதலிய வாகனங்கள் பழுதுபார்த்தல், (3) வசந்தமண்டபத்துக் கெதிரில் கொட்டகை யமைத்தல், (4) உட்துறையிலிருக்கிற 'திருடர்களையும், மோசக்காரர்களையும்' விலக்கி வேறே அசாமிகள் நியமித்தல், (5) திருக்குளம் தென்கரையில் 'பூசகர், சுயம்பாகர்' முதலியோர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுத்தல், (6) 'தேர்நிலைகளையும், தேர்களையும்' பழுதுபார்த்து பந்தோபஸ்து செய்தல், (7) தேர் நிலைகளுக்கு தெற்கிலும் வடக்கிலும் இடிந்திருக்கிற கட்டிடங்களைப் புதுப்பித்தல், (8) ஏலத்தில்போன பரிவர்த்தனை நன்செய்களுக்குப் பரிகாரந்தேடல், (9) பழ. வெ. ராம. இராமநாதன் செட்டியாரவர்களால் ஏற்படுத்திய 'திருவனந்தல், உருத்திரசெபம், குழித்தளிகை, தேவியார் நேத்திரவிளக்கு, நித்தியப்படி அருச்சனை, தேர்மண்டபப்படி, சிவராத்திரி' என்னும் கட்டளைகள் நின்றுவிட்டதைப்பற்றி 'உயில்படி' நடவடிக்கை நடத்தல், (10) கப்பலடிக்காடு நன்செய்சர்வே 220-ல் 2. ஏகர் 2 செண்ட் 48, சர்வே 245ல் 2. ஏகர் 3, ஆக ஏகர் 5 செண்ட் 48 நிலத்தைப்பற்றி பழ. வெ. ராம. வெ. வெங்கடாசல செட்டியார் அவர்கள் பேரில் நடவடிக்கை நடத்தல், (11) காரியந்தோப்படி நன்செய் சர்வே 284ல் 2. ஏகர் 1 செண்ட் 60, வண்ணான்குளத்தடி நன்செய் சர்வே 315-ல் 1. செண்ட் 28 ஆக ஏகர் 1 செண்ட் 88 நிலத்தைப்பற்றி நடேசகண்ட பிள்ளை வகையருப்பேரில் நடவடிக்கை நடத்தல், (12) விளக்குடித் தென்னந்தோப்பைப்பற்றி

நடவடிக்கை நடத்தல், (13) கிராம வழக்கத்துக்கு விரோதமாக ஏர் 30 வைத்துச் சாகுபடி செய்வதை மாற்றி, கிராம வழக்கப்படி ஏர் 20 வைத்துச் சாகுபடி செய்தல் அல்லது பண்ணை வைத்துச் சாகுபடி செய்தல், (14) கிராமத்துக்கு ஒத்துபடி கிராம சம்பந்தமான எல்லா வேலைகளேயும் பார்ப்பதற்கு ஒரு வருஷத்துக்கு மணியத்துக்கு நெற்கலம் 96-ம், ஒரு விசாரிப்புக்கு நெற் கலம் 48-ம், ஒரு தலையாரிக்கு நெற் கலம் 9-ம் ஆக நெற்கலம் 153 கொடுப்பதாய் அசாமிகள் சேர்த்து சாகுபடி செய்தல், (15) நான்கு வீதிகளேயும் ஒழுங்கு செய்து இழந்துபோன தென்னம்பிள்ளைகள் வைத்துக் காப்பாற்றல், (16) 'திருக்களர், குமாரமங்கலம், கொறுக்கை' முதலிய கிராமங்களில் 15000 தென்னம் பிள்ளைகளுக்குக் குறையாமல் வைத்து விருத்தி செய்தல், (17) 'அத்தியடி நன்செய்க்குப் பக்கத்திலுள்ள தரிசு, பிள்ளையார் தோப்படித்தரிசு, வேளாகுடீட்டைக்குக் கீழ்கரைத் தரிசு, சீலத்தநல்லூர் தாண்டவன் தோப்படிப் புன்செய்' என்பவற்றை வெட்டிக் கரைகட்டித் தூர்த்துச் சாகுபடிக்குக் கொண்டுவருதல்,'' என்னும் பதினேழுவித சீர்திருத்தங்கள் ஏற்பட்டிருக்கின்றன. மேற்படி அழகப்ப செட்டியாரவர்கள் மேற்படி சீர்திருத்தங்களேயாவது, கோவிலுக்கு ஏற்படும் நஷ்டங்களேயாவது கவனிப்பவரல்ல. கவனிப்பவராயிருந்தால் இந்தக் கோவிலில் சம்பளங் கொடுத்து சிவபுரிக் குருக்கள் பேரில் விவகாரம் நடத்தச் சொல்லியிருக்க மாட்டார். இதுவே மேற்படி அழகப்ப செட்டியாரவர்களால் இக்கோவிலுக்கு பெருத்த நஷ்டம் ஏற்படுமென்பதற்குத் தக்க சாட்சியமாகும்.

இக் கோவிலுக்குத் தரும உரிமையுடையவர்களும்; திருநந்தனவனம், பசு மடம், இருக்குவேத பாடசாலை

எசுர்வேத பாடசாலை, சாமவேத பாராயணம், குருபூசை மடம், தேவார பாராயணம், விபூதி மடம், கங்காபிஷேகம், அகண்ட தீபம், சாம்பிராணித் தூபம், குழித்தளிகை, அருச்சனை, நேத்திர விளக்கு, திருவனந்தல், உருத்திர செபம், பிரமோற்சவ மண்டபப்படிகள்' என்னும் தருமங்கள் வைத்து 'ஆயிரம், ஆயிரமாகச்' செலவிட்டு நடத்துகின்றவர்களும்; மேற்படி தருமங்களுக்காக 'இலட்சக் கணக்காகவும், பதினாயிரக் கணக்காகவும்' செலவிட்டுப் பல கட்டிடங்கள் கட்டி வைத்திருக்கின்றவர்களும்; இன்னும் பல கட்டிடங்கள் கட்ட எத்தனப்பட்டுக் கொண்டிருக்கின்றவர்களும்; தங்கக் கவசம், வெள்ளிக் கவசம், வெள்ளி விமானம் முதலியன செய்து வைத்திருக்கின்றவர்களும் ஆகிய தருமகருத்தாக்களிடத்தில் கோவிலைச் சாசுவதமாக ஒப்புவிக்காத காரணத்தினால் கோவிலுக்குப் பெருத்த நஷ்டமும் சீர்கேடுமுண்டாயிற்று. இனிமேலாவது இக்கோவிலில் தருமசம்பந்தமான உரிமையில்லாதவர்களுக்குப் பஞ்சாயத்துக் கொடுப்பதை அறவே நிறுத்தி விடுவார்களாக.

இக் கோவிலில் தருமசம்பந்த உரிமையுடையவர்களும் ஸ்ரீ வீரசேகர மகாமுனிவராகிய ஆண்டவரிடத்தில் பெரும் பக்தியுடையவர்களும்; 'கண்ணப்ப நாயனார், கோச்செங்கட் சோழ நாயனார், ஐயடிகள் காடவர்கோனாயனார், பூசலார் நாயனார், அரிவாட்டாய நாயனார்' என்னும் திருத்தொண்டர்களைப் போன்றவர்களுமாகிய, குருபூசை மடத்து தருமகருத்தா **பாகனேரி** பெரி. அழ. மு. முத்துக்கருப்ப செட்டியாரவர்கள் (1), பசுமடம் திருநந்தனவனம் தரும கருத்தாக்கள் **காரைக்குடி** ராம. ஆத. மெ. மெய்யப்ப செட்டியாரவர்கள் (2), ஆத. லெ. ஆத. சொக்கலிங்க செட்டியாரவர்கள் (3), எசுர்வேத பாடசாலை தருமகருத்தா

காரைக்குடி ஆத. பழ. சிதம்பர செட்டியாரவர்கள் (4), தேவியார் வெள்ளிக்கவச தருமகருத்தா களப்பாள் S. இரங்கசாமி முதலியாரவர்கள் (5) இந்த ஐந்து தரும கருத்தாக்களையும் சாசுவத பஞ்சாயத்தார்களாக நியமித்துக் கொடுக்கும்படி சென்னை எண்டோமெண்ட் போர்டார் அவர்களுக்கும், தஞ்சாவூர் சர்க்கிள் தேவஸ்தானக் கமிட்டியாரவர்களுக்கும் பரமபதி அருள் புரிவாராக.

திருக்களர் விளக்கம்

(இரண்டாம் பாகம்)

முற்றிற்று.

68280

கருணாநிதி (பில்டிங்ஸ்) பிரஸ், விஜயபுரம் 33 gspm

மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும்
அவசியம் வாசிக்கவேண்டிய

# மாணிக்கப் புதையல்கள்

திருவாரூர்–மஹான் ஸ்ரீ குரு
## கருணையானந்த ஞானபூபதிகள்
திருவாய் மலர்ந்தருளிய

**வேதாந்த பாஸ்கரன்**
விளக்கமான (இரண்டாம் பதிப்பு) 3—0—0

**ஞானக் களஞ்சியம்**
திருத்தமான (இரண்டாம் பதிப்பு) 3—0—0

**ஞான யோக ரகசியம்**
(நூற்றுக்கணக்கான படங்களுடன்) 3—0—0

மேற்கூறிய மூன்று புத்தகங்களும் ஏராளமான அப்பியாச
ஆப்டோன் படங்களுடன் கண்வணக்கவரும் அழகான சீர்மை
பட்டுக் காலிக்கோ பைண்டு செய்யப்பெற்றுள்ளது

| | |
|---|---|
| அன்பே கடவுள் | 0—4—0 |
| சர்மவத சீவகாருண்யம் | 0—6—0 |
| அஷ்டாங்க யோகம் (படங்களுடன்) | 0—4—0 |
| நஹ்ஜல் இஸ்லாம் | 0—4—0 |
| ஞானசூரியன் 3-வது வால்யம் | 1—8—0 |
| மாணிக்க வாசகர் (வசனம்) | 0—8—0 |

இன்னும் பலவித கீர்த்தனைப் புத்தகங்களும் கிடைக்கும்.
முன்பணம் அனுப்புவோர்களுக்கு மாத்திரம் சில
புத்தகங்கள் இனாமாக அனுப்புவோம்.

**எம். ஏ. நாவலர் அண்டு சன்ஸ்,**
புத்தக வியாபாரிகள்,
விஜயபுரம்—திருவாரூர், S. I. R.
தஞ்சாவூர் ஜில்லா.

உ

சிவமயம்.

# திருக்களர் விளக்கம்.

## (மூன்றும் பாகம்.)

காப்பு.

மருமல ரணையில் வைகு மடந்தையு மூலக மீன்ற
அருமறைக் கிழவ ஞவி னமலையும் வணங்கும் பைம்பொற்
றிருமலை மகட்கு முக்கட் டேவற்கு மருமை யாகித்
தருவனத் துறையுந் தெய்வத் தந்தியைச் சிந்தை செய்வாம்.

## நிலம் வசப்படுத்தல்.

தஞ்சாவூர் சப்கோர்ட்டு அசல் நெம்பர் $\frac{75}{928}$ வாதி மன்னார்குடி சேஷாத்திரி ஐயங்கார் என்பவர் அமீனு சகிதமாய் 21-9-33-ல் திருக்களருக்கு வந்து கோவிலுக்குச் சொந்தமான நன்செய் வேலி 1, மா 11, தென்னைமரம் 10 என்பவற்றை கோட்டூர் இரேஞ்சு ரிவினியு இன்ஸ்பெக்டரவர்களுடையவும், வடபாதிமங்கலம் எஸ்டேட் பள்ளிச்சந்தம் வகையருக் கிராமங்களின் இன்ஸ் பெக்டர் சாமிநாத ஐயரவர்களுடையவும் உதவியின் பேரில் நிராக்ஷேபணையாக வசப்படுத்திக் கொண்டுபோய்விட்டார். மேற்படி நிலம் 'ஆத. பழ. சிதம்பர செட்டியாரவர்களு டைய பங்களா, குருபூசை மடத்துக் கீழவாரம், மேற்படி மடத்துக் கணக்கர் குடியிருப்பு மனைக்கட்டு, விபூதிமடத்து மனைக்கட்டு, முத்திமண்டபம் என்பவற்றின் புன்செய்க்காக பரிவர்த்தனைசெய்தது. மேற்படி நன்செயின்கிரயம் ரூ.3800

மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும்
அவசியம் வாசிக்கவேண்டிய

# மாணிக்கப் புதையல்கள்

திருவாரூர்-மஹான் ஸ்ரீ குரு

## கருணையானந்த ஞானபூபதிகள்

திருவாய் மலர்ந்தருளிய

**வேதாந்த பாஸ்கரன்**
விளக்கமான (இரண்டாம் பதிப்பு) **3—0—0**

**ஞானக் களஞ்சியம்**
திருத்தமான (இரண்டாம் பதிப்பு) **3—0—0**

**ஞான யோக ரகசியம்**
(நூற்றுக்கணக்கான படங்களுடன்) **3—0—0**

மேற்கூறிய மூன்று புத்தகங்களும் ஏராளமான அப்பியாச
ஆப்டோன் படங்களுடன் கண்வணக்கவரும் அழகான சீர்மை
பட்டுக் காலிக்கோ பைண்டு செய்யப்பெற்றுள்ளது

| | |
|---|---|
| அன்பே கடவுள் | **0—4—0** |
| சர்மவத சீவகாருண்யம் | **0—6—0** |
| அஷ்டாங்க யோகம் (படங்களுடன்) | **0—4—0** |
| நஹ்ஹால் இஸ்லாம் | **0—4—0** |
| ஞானசூரியன் 3-வது வால்யம் | **1—8—0** |
| மாணிக்க வாசகர் (வசனம்) | **0—8—0** |

இன்னும் பலவித கீர்த்தனைப் புத்தகங்களும் கிடைக்கும்.
முன்பணம் அனுப்புவோர்களுக்கு மாத்திரம் சில
புத்தகங்கள் இனமாக அனுப்புவோம்.

**எம். ஏ. நாவலர் அண்டு சன்ஸ்,**
புத்தக வியாபாரிகள்,
விஜயபுரம்—திருவாரூர், S. I. R.
தஞ்சாவூர் ஜில்லா.

உ

சிவமயம்.

# திருக்களர் விளக்கம்.

## (மூன்றும் பாகம்.)

காப்பு.

மருமல ரணையில் வைகு மடந்தையு முலக மீன்ற
அருமறைக் கிழவ னுவி னமலையும் வணங்கும் பைம்பொற்
றிருமலை மகட்கு முக்கட் டேவற்கு மருமை யாகித்
தருவனத் துறையுந் தெய்வத் தந்தியைச் சிந்தை செய்வாம்.

### நிலம் வசப்படுத்தல்.

தஞ்சாவூர் சப்கோர்ட்டு அசல் நெம்பர் $\frac{75}{928}$ வாதி மன்னார்குடி சேஷாத்திரி ஐயங்கார் என்பவர் அமீனு சகிதமாய் 21–9–33-ல் திருக்களருக்கு வந்து கோவிலுக்குச் சொந்தமான நன்செய் வேலி 1, மா 11, தென்னைமரம் 10 என்பவற்றை கோட்டூர் இரேஞ்சு ரிவினியு இன்ஸ்பெக்டரவர்களுடையவும், வடபாதிமங்கலம் எஸ்டேட் பள்ளிச்சந்தம் வகையரூக் கிராமங்களின் இன்ஸ் பெக்டர் சாமிநாத ஐயரவர்களுடையவும் உதவியின் பேரில் நிராக்ஷேபனையாக வசப்படுத்திக் கொண்டுபோய்விட்டார். மேற்படி நிலம் 'ஆத. பழ. சிதம்பர செட்டியாரவர்களு டைய பங்களா, குருபூசை மடத்துக் கீழவாரம், மேற்படி மடத்துக் கணக்கர் குடியிருப்பு மனைக்கட்டு, விபூதிமடத்து மனைக்கட்டு, முத்திமண்டபம் என்பவற்றின் புன்செய்க்காக பரிவர்த்தனைசெய்தது. மேற்படி நன்செயின்கிரயம் ரூ.3800

மேற்படி வியாச்சியத்தில் எதிர்வாதத்திற்கு ஸ்டேட்மெண்ட்கொடுத்த கோவில் பஞ்சாயத்தாராகிய சோமசுந்தர முதலியாரவர்கள் வியாச்சிய முடிவிற்குள் இறந்துபோய் விட்டார். அவரை எஸ்பார்ட்டியாக்கி, டிக்கிரியாகிபிருக்கிறது. மேற்படி ஸ்டேட்மெண்ட்படி எதிர்வியாச்சியம் செய்திருக்கும் பட்சத்தில் கோவிலுக்கு விரோதமாக டிக்ரியாகாது. வசப்படுத்த அமீனு கொண்டுவந்த கட்டளையில் இப்போதைய பஞ்சாயத்தாராகிய க. வீ. சொ. வீ. அழகப்ப செட்டியாரவர்களுடைய பெயர் காணப்படவில்லையாம்; மேற்படி அழகப்பசெட்டியாரவர்களுடைய பவர்ப்பிரதிநிதியாகிய கிருஷ்ணசாமி ஐயர் என்பவர் மேற்படி நிலம் வசப்படுத்துவதற்கு ஒரு வாரம் முன்னதாக மன்னார்குடிக்குப் போய் மேற்கண்ட வாதி சேஷாத்திரிஐயங்கார் என்பவரைக் கண்டு பேசிக்கொண்டு சிவபுரிக்குப் போனதாயும், வசப்படுத்திய இரண்டாம் நாள் திருக்களருக்கு வந்ததாயும் வதந்தி யுலாவுகிறது.

## அறிவிப்பு.

தஞ்சாவூர் சர்க்கிள் தேவஸ்தானம் கமிட்டி ஆபீஸிலிருந்து திருக்களர் மு. சுவாமிநாத உபாத்தியாயருக்கு தபால் மூலமாக 27—9—33ல் கிடைத்த கவர்க்குள்ளிருந்த அறிவிப்பு நகல்:—

நப்பர் உ கோட்டையூர்,

அடக்கம் சிவமயம். 18—9—1933.

திருக்களர் ஸ்ரீ பாரிசாதவனேஸ்வரஸ்வாமி கோவில் டிரஸ்டி K. V. S. V. அழகப்ப செட்டியாரவர்களிடமிருந்து,

தஞ்சாவூர் சர்க்கிள் தேவஸ்தானம் கமிட்டி மகா-ா-ஸ்ரீ பிரசிடெண்டு அவர்களுக்கு யாதாஸ்து.

அவ்விடம் நெம்பர் $\frac{490}{25\text{-}8\text{-}33}$

(1) திருக்களர் சுவாமிநாத உபாத்தியாயரால் போடப்பட்டிருக்கும் திருக்களர் விளக்கம் என்னும் புஸ்தகத்தை வாங்கிப் பார்த்ததில் ஷை ரிபரன்ஸில் 1-வது பாராவில் ஷை கோவிலும் அதனுடைய வாகனங்களும், குளங்களும், மிகவும் சீர்கேடாக இருப்பதாக திருக்களர் விளக்கத்தில் பிரசுரித்திருக்கிறார் என்று கண்டிருக்கிறது. கோவிலில் முன் விசாரணைதார்கள் காலங்களில் இருந்திருக்கலாம். இப்பொழுது நான் வந்த பிறகு அதிலுள்ள ரிப்பேர்களைச் செய்தும், சலதாரைகளை யெடுத்துக் கட்டியும், திருமதில்களுக்குச் சாந்து பதிந்தும், சுவாமிகளுக் கெல்லாம் மருந்து சாத்தியும் கும்பாபிஷேகஞ் செய்து நல்ல நிலைமையி லிருக்கிறது. கீழ்புறம் மதில் ரிப்பேர் வேலையைத் தவிர, இதர வேலைகளெல்லாம் ஆகியிருக்கிறது. மேல்புறம் மதிலுக்கும் மண் அணைத்தும் வேலை செய்து இருக்கிறது. கீழ்புறம் மதில் வேலை சாகுபடி காலம் கிரமித்தவுடன் செய்யச் சொல்லி யிருக்கிறது. சிப்பந்திகள் குடியிருப்பு வீடுகளை முதலில் சுமார் 25 வருஷங்களுக்கு முன், எங்கள் மடாலயத்தில்தொகைகொடுத்து அப்போதைய டிரஸ்டிகளைக்கொண்டு கட்டச்செய்ததில் கெட்டியாகக் கட்டாததினாலும் பிறகு வந்த டிரஸ்டிகள் மேற்படி கட்டிடங்களைச் சரிவர பராமரிக்காததினாலும், எனக்கு முந்திய டிரஸ்டிகள் காலத்தில் இடிந்து விழுந்துவிட்டது. கோவிலில் பண்டு இல்லாததினாலும், தற்சமய மிருக்கும் பொருளாதார நெருக்கடியில் அக்கிரகாரம் கட்ட சௌகரியமில்லாமலிருப்பதாலும் கோவில் சிப்பந்திகளை சுமார் ரூ. 7000 (ஏழாயிரம்)

செலவில் நாங்கள் கட்டிய நகரவிடுதியில் குடியிருந்துவரச் செய்திருக்கிறது. இன்னும் மற்ற விவரங்களையும் தாங்கள் எழுதியிருப்பதுபோல் தாங்கள் நேரில் வந்து விசாரித்தால் உண்மை தெரியவரு மென்பதையும்;

(2) ரூ. 68450 நஷ்டமென்று சொல்லுவதெல்லாம் எவ்வளவுவரை சரியென்பதற்கும் அவைகளுக்கு யாரார் சவாப்தாரி யென்பதற்கும் என்னுடைய காலங்களில் அப்படிப்பட்ட விஷயங்கள் இல்லை என்பதையும் தெரிய எழுதலான விஷயம்.

(3) ஷை ரிபரன்ஸில் கண்டபடி தாங்கள் திருக்களர் வரக்கூடிய சமயத்தையும் முன்னாடி எழுதியனுப்பச் செய்தால் நானும் அது சமயம் வருகிற விபரம் தெரிவிக்கிறேன்.

(4) சுவாமிநாத உபாத்தியாயரைப் பற்றி அவ்விடம் ஆபீசிலேயே பல கரஸ்பாண்டென்ஸுகள் இராமநாதன் செட்டியார் காலமுதல் இருப்பது தெரிந்திருக்கு மென்பது எழுதலான விஷயம்.

(ஒப்பம்) **அழகப்ப செட்டியார்.**

(சரிநகல்) திருக்களர் மகா-ா-ா-ஸ்ரீ சுவாமிநாதஉபாத்தியாயர் அவர்கள் அறிவிப்புக்கு அனுப்பப்பட்டது.

தேவஸ்தானம் கமிட்டி ஆபீஸ், தஞ்சாவூர். 22—9—33. } உத்தரவுப்படி (ஒப்பம்) **மானேஜர்.**

## அறிவிப்புக்குப் பதில்.

தஞ்சாவூர் சர்க்கிள் தேவஸ்தானம் மகா-ா-ா-ஸ்ரீ கமிட்டியார் அவர்கள் திவ்ய சமுகத்திற்கு;—

(1) திருக்குளப் படித்துறை தருமகர்த்தா காரைக்குடி சா. நா. அ. அழ. அழகப்ப செட்டியாரவர்கள் சென்ற வருஷத்தில் திருக்களருக்கு வந்து சுவாமி தரிசனஞ் செய்து கொண்டு கோவிலைப் பழுதுபார்க்கவும், திருக்குளத்துக்கு குழாய் போடவும், ஸ்ரீவீரசேகர மகாமுனிவருடைய திருக்கோபுரவாயிலிற் பதினாறுகால் மண்டபம் கட்டவும் பொருளுதவி செய்வதாய் வாக்களித்து காரைக்குடி சென்று தேகவியோக மடைந்தார். அவருடைய பொருளைக் கொண்டு ஸ்ரீ வீரசேகர மகா முனிவருடைய திருக்கோபுர வாயிலிற் பதினாறுகால் மண்டபங் கட்டப்படுகிறது.

(2) சித்திரைப் பிரமோற்சவத்துக்கு மடத்தில் ரூ.250, குருபூசை மடத்தில் ரூ.250, பசுமடத்தில் ரூ.250 எசுர்வேதபாடசாலையில் ரூ.250, இருக்குவேதபாடசாலையில் ரூ. 50, பட்டுக்கோட்டை ஆ. பழ. ஈ. வயி. நாடிமுத்துப் பிள்ளை அவர்கள் ரூ. 350, குசதாங்கி கோ. இராமாமிர்தத் தேவரவர்கள் வகையறு ரூ 50, காடுவாகுடி ஸ்ரீநிவாச நாயக்கரவர்கள் ரூ. 30, ஆக ரூ. 1480 கொடுத்து நடத்தி வருகின்றார்கள்.

(3) மேற்கண்ட இயாதாஸ்திற் கண்ட 'திருக்களர் விளக்கம்' என்னும் புத்தகமானது 29—4—33 முதல் 8—5—33 வரையில் நடைபெறும் ஸ்ரீமுக சித்திரைப் பிரமோற்சவத்தில் வெளியிடவேண்டியதற்காக அச்சியற்றப் பட்டது. மேற்படி புத்தகம் வெளிவரப்போவதை மேற்படி அழகப்ப செட்டியாரவர்கள் தெரிந்துகொண்டு மேற்படி புத்தகத்திற்கண்ட விஷயங்களைப்பற்றி தேவஸ்தானம் கமிட்டியாரவர்கள் கேள்வி கேட்கும் பட்சத்தில் பதில் சொல்லவேண்டி வருமே என்று நினைத்து மேற்கண்ட பிரமோற்சவ உபயக்காரர்களுடைய

அபிப்பிராயமன்னியில் பிரமோற்சவத்தை நிறுத்திவிட்டு, மேற்கண்ட மண்டபத் திருப்பணிக்கு வந்திருந்த சாந்து வகைடரூச் சாமான்களில் கொஞ்சம் எடுத்துக்கொண்டு வந்து சலதாரைகளையும், மதில்களில் ஒரு பகுதியையும், பழுது பார்த்து, மேற்படி பிரமோற்சவ மண்டபப்படி செய்வோர் களிடத்தில் பொருள் வசூல் செய்து மருந்துசாத்தி 12–6–33-ல் கும்பாபிஷேகஞ் செய்வித்தார். "திருக்களர் விளக்கம்" வெளிவராமலும், பதினாறுகான்மண்டபத் திருப்பணி நடவாமலும், பிரமோற்சவ உபயக்காரர்கள் பொருளுதவி செய்யாமலும் இருக்கிறபட்சத்தில் மேற்படி கும்பாபிஷேகம் நடந்திராவென்பது திண்ணமே. கோவில் காரியங்களெல்லாம் மேற்கண்டவர்களுடைய உதவியின் பேரிலேயே நடைபெறுகின்றன. எந்தப் பஞ்சாயத்தாரும் எந்தக் காரியத்தையும் மேற்கண்டவர்கள் உதவியன்னியில் செய்யவில்லை.

(4) மேற்கண்ட இயாதாஸ்தில் 1-வது பாராவில் கோவிலில் முன் விசாரணைதார்கள் காலங்களில் இருந்திருக்க லாம் எனவும், 2-வது பாராவில் என்னுடைய காலங்களில் அப்படிப்பட்ட விஷயங்கள் இல்லையெனவும் எழுதியிருப்ப தால் மேற்படி திருக்களர் விளக்கத்திற் கண்டபடி பெரிய வெள்ளி நாகாபரணக்குவளை 1, கைத்தீவட்டிகளுக்கு எண்ணெய் ஊற்றுகிற வெள்ளிப் புதுலிகள் 2, வெள்ளி இடபங்களினுடைய வெள்ளிப்புடுக்குகள் 2, வெள்ளி யிடபங்களினுடைய வெள்ளி மணிகள் 2, வெள்ளியிடபங் களினுடைய பதக்கங்கள் 8, சின்ன வெள்ளியிடபத்தி னுடைய நெற்றிப்பட்டம் 1, என்பன காணமற்போய் விட்டதும், சுவாமியம்பாள் சந்நிதிகளில் கட்டியிருந்த கொத்துமணிகள் 2, திருச்சின்னம் 1, சேகண்டி 1, உடல் 1,

சங்கு 1, தப்பட்டம் என்னும் நகரா 1, என்பனவாகிய வாத்தியத்தொனிகள் இல்லையென்பதும்; வசந்தமண்டபத்துக்கெதிரில் சுவாமிசந்நிதியிலிருந்த பெரிய கீத்துக்கொட்டகை, வாகன மண்டபம், விறகுவாடி, குருக்கள் பரிசாரகர் வகையரு ஐந்து வீடுகள், தேர்நிலைகளுக்குத் தெற்கிலும் வடக்கிலுமுள்ள இரண்டு பெரிய கட்டிடங்கள், மருதவனம் வீடு என்பன இடிந்துவிழுந்து நாசமடைந்து விட்டதும், பசுமடம், திருநந்தனவனம, இருக்குவேத பாடசாலை, எசுர்வேத பாடசாலை, சாமவேத பாராயணம், குருபூசை மடம், குருபூசை மடத்துக்கீழவாரம், குருபூசை மடத்துக் கணக்கர் குடியிருப்பு மனை, விபூதி மடத்து மனை, ஆத. பழ. சிதம்பர செட்டியாரவர்கள் பங்களா, முத்திமண்டபம், விளக்குடி தென்னந்தோப்பு என்பவற்றின் பரிவர்த்தனை நிலங்கள் ஏலத்திற்போய்விட்டதும் உண்மையென்று ஒப்புக்கொள்ளுகின்றார் என்பது நிச்சயமேயாகும். இதற்கு மேற்படி இயாதாஸ்தில் மேற்கண்ட விஷயங்களை மறுத்தெழுதாமலிருப்பதே தக்க சான்றாகும்.

(5) கோவில் சம்பந்தமான எல்லாத்திருப்பணிகளும் ஸ்ரீவீரசேகர மகாமுனிவர் பூவனூர் இராசு முதலியாரவர்களை உதவியாக வைத்துக்கொண்டு செய்தருளினர். அம்முனிவர் சிவசாரூபம் பெற்ற பின்பு எவ்விதமான திருப்பணியும் நடைபெறவில்லை. மேற்படி திருப்பணி சம்பந்தமான எல்லாவற்றையும் 1911-ம் வருஷத்தில் கும்பாபிஷேக காலத்தில் வெளிவந்த **திருக்களர் சாரசங்கிரகம்,** 1912-ம் வருஷத்தில் வெளிவந்த (இரண்டாம் பதிப்பு) **திருக்களர்ப் புராணம்,** 1915-ம் வருஷத்தில் ஸ்ரீவீரசேகர மகாமுனிவருடைய திருக்கோயிற் கும்பாபிஷேகத்தில் வெளிவந்த **வீரசேகர ஞானதேசிகர் சரித்திரம்,** 1933-ம் வருஷத்தில்

ஸ்ரீவீரசேகர மகாமுனிவருடைய குருபூசை மகோற்சவத்தில் வெளிவந்த **திருக்களர் விளக்கம்** என்பனவாகிய நான்கு புத்தகங்களிலும் விரிவாய்க் காணலாம். திருக்குளம் தென்கரை வீதியில் தென்சிறகாயிருந்த குருக்கள், பரிசாரகர் வகையரு ஐந்து வீடுகள் இடிந்து விழுந்து விட்டதைப் பற்றி மேற்படி இயர்தாஸ்தில் எங்கள் மடாலயத்திலிருந்து தொகை கொடுத்துக் கட்டியதெனவும், கட்டியவர்கள் கெட்டியாகக் கட்டாமையால் இடிந்து விழுந்து விட்டதெனவும், குருக்கள் பரிசாரகர் வகையருப் பேர்களை நாங்கள் ரூ 7000 செலவிட்டுக் கட்டிய நகர விடுதியில் குடிவைத்திருக்கிறதெனவும் எழுதியிருக்கிறது ஆச்சரியமேயாகும். இதனால் கோவில் இடிந்து விழுந்துவிடும் பட்சத்தில் எங்கள் மடாலயத்தில் தொகை கொடுத்துக் கட்டியதெனவும், கெட்டியாகக் கட்டாமையால் இடிந்து விழுந்துவிட்டதெனவும், சிவதிருவுருவங்களை யெல்லாம் நாங்கள் ரூ. 130000 செலவிட்டுக் கெட்டியாகக் கட்டிய ஆண்டவர் கோவிலில் வைத்திருக்கிறோமெனவும் சொல்லத் தயாராயிருக்கின்றாரென்பதும், 12—6—33ல் நடைபெற்ற கும்பாபிஷேகத்தில் துர்க்கையம்பாளை எடுத்துக் கொண்டுவந்து உத்திரம் கெட்டுப் போயிருக்கிற மண்டபத்தில் பிரதிஷ்டை செய்திருப்பதால் அம்மண்டபம் விழுந்து துர்க்கையம்பாளுக்கு சலனமுண்டாகிற பட்சத்தில் எங்கள் மடாலயத்தில் தொகை கொடுத்துக்கட்டியதெனவும், மண்டபத்தின் மேலே காங்கரெட்டுப் போட்டு துமிசுபோட்டவன் மெதுவாகப் போடாமையால் உத்திரம் கெட்டுப்போயிருந்து விழுந்து விட்டதெனவும், துர்க்கையம்பாளுக்குச் சொல்லியனுப்பியிருக்கிறோமெனவும் சொல்லத் தயாராயிருக்கின்றாரென்பதும் வெளிப்படுகின்றது. அன்றியும் எங்கள் மடாலயத்திலிருந்து தொகை கொடுத்ததென்று சுட்டுவதால் இடிந்து போனதைப்பற்றிச்

சொல்ல ஒருவருக்கும் பாத்தியமில்லையென்று நினைத்திருக்கிறாரென்பது நன்குபுலப்படுகின்றது.

(6) மேற்படி இயாதாஸ்தில் கோவிலில் பண்டு இல்லாமையால் ஆக்கிரகாரம் கட்ட சௌகரியமில்லையென்று எழுதியிருக்கிறார். வீரராகவ கண்டியரவர்கள் பஞ்சாயத்தில் கோவில் நிலம் பூராவும் 'மணியம் (1), விசாரிப்பு (1) தலையாரி நீராவரிக்கம் (1), ஏர் (20), என்பவர்களால் 'சாகுபடி, கண்டு முதல், முதலிய யாவும் நடந்துவந்தன; அக்காலத்தில் கோவில் உட்துறை குருக்கள் (1), பரிசாரகர் (1), அறைதிருமாலை (1), பெரியமேளம் ஜதை (1), சின்ன மேளம் ஜதை (1), உடல் (1), கிடுகொட்டி (1), சங்குதம் பட்டம் (1), திருச்சின்னம் சேகண்டி (1), திருவிளக்கு (1), மெய்காவல் மணியடித்தல் (1), கூட்டல் பத்துத்தேய்த்தல் (1) என்னும் அசாமிகளைக்கொண்டு தினம் ஐந்துகாலப் பூசை காலாகாலத்தில் சோடச உபசாரத்தோடு பக்தி சிரத்தை குறையாமல் நடந்துவந்தன. அக்காலத்தில் ரூ. 12000 (பன்னீராயிரம்) பண்டு சேர்ந்திருந்தது. 'குருக்கள், பரிசாரகர்களுக்கு இடிந்துபோனவீடுகளைக்கட்டிக்கொடுக்கக் கூட ஐவேஜியில்லாத நிலைமையில் 'குருக்கள் (2), பரிசாரகர் (2), மேளம் ஜதை (2), மானேசர் (1), விசாரிப்பு (2), தலையாரி (2), ஏர் (30)' எதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன? மேற்படி வீரராகவ கண்டியரவர்கள் காலத்தில் ஏற்பட்ட திட்டப்படி அசாமிகள் வைத்துக்கொள்ளுகிற பட்சத்தில் வருஷம் ஒன்றுக்கு குருக்கள் பரிசாரகர்கள் சம்பளத்தில் ரூ. 363, மானேசர் விசாரிப்பு தலையாரிவகையரு சம்பளத்தில் ரூ. 273, அதிக ஏர் பத்துக்கு மானியம் மாட்டு விலை வகையறுவில் ரூ. 365 ஆக ரூ. 1001 ஆதாயமாகும். மேற்படி அழகப்ப செட்டியாரவர்கள் மணியத்துக்கு நெற் கலம் 96, விசாரிப்புக்கு நெற்கலம் 48, தலையாரிக்கு நெற் கலம் 9 ஆக நெற்கலம் 153 கொடுக்க வேண்டியதற்குப் பதிலாக, சிதம்பரம் தாலூகா சிவபுரி கிராமத்திலுள்ள தமது ரொக்கக்கடையில் பற்று வரவு செய்தவர்கள் பேரிலும்

இராமையாக் குருக்கள் பேரிலும் கோர்ட்டில் நடவடிக்கை நடத்த வேண்டியதற்காக நியமித்திருக்கிற பவர் ஏஜண்டாகிய கிருஷ்ணசாமி ஐயருக்கு ரூ. 300-க்கு நெற்கலம் 300, அவருக்கு உதவியாக நியமித்திருக்கிற இரண்டு விசாரிப்புகளுக்கு நெற்கலம் 108, அவ்விசாரிப்புகளுக்கு உதவியாக நியமித்திருக்கிற இரண்டு தலையாரிகளுக்கு நெற்கலம் 18 ஆக நெற்கலம் 426 கொடுப்பதால் மேற்கண்டபடி திருத்தம் நடைபெறுவண்ணம் தக்க சூட்சிகள் நடக்குமென்பதிற் சந்தேகமில்லை.

(7) மேற்படி இயாதாஸ்து 4வது பாராவில் சுவாமிநாத உபாத்தியாயரைப் பற்றி இராமநாதன் செட்டியார் காலம் முதல் பல கரஸ்பாண்டென்ஸுகள் கமிட்டி ஆபீஸிலிருப்பதாக எழுதியிருக்கிறார். மேற்படி சுவாமிநாத உபாத்தியாயர் (1) சுயசாதி யபிமானமற்ற கள்வர்மரபிற் பிறந்தவராயிருந்தும் அக்கள்வர் மரபினர்களைப்போல் சிலம்பங் கற்றுக்கொள்ளுதல், படைக்குப்போதல், தலையாரிக்காவல்பார்த்தல், விசாரிப்புப்பார்த்தல், ரூ. 423-க்குக் கிரயசாசனம் வாங்கிய மா 4, குழி 23 நன்செய் நிலத்தை கோவிலுக்குச் சேர்த்துவிட்டு, கோவிலுக்குச் சொந்தமான ரூ. 1128 பெறுமானமுள்ள மா 5, குழி 64 நன்செய் நிலத்தை அனுபவித்துக்கொண்டு, அதில் மா 3, குழி 30, நிலத்தை ரூ. 660-க்கு விற்கிரயஞ்செய்துவிட்டு, பாக்கி மா 2, குழி 34, நிலத்தை வைத்துக்கொள்ளுதல்; கட்குடித்தல்' முதலியன செய்யாது சிறிது கல்விகற்று, கல்வெட்டுப் படிக்கத் தெரிந்துகொண்டு 'வேளிர், நாகர், சோழர், தொண்டையர், பல்லவர், காடவர், மழவர்' என்னும் சூரியகுலத்தரசர்களை 'கள்வர்' எனவும்; 'பாண்டியர், மாறர்' என்னும் சந்திரகுலத்தரசர்களை 'மறவர்' எனவும்; வன்னியர், பொறையர், கமிண்டர், படையாட்சியர் என்னும் பட்டமுடையவர்களை அக்கினி குலத்தரசர்களாகிய சேரர் மரபினர்களெனவும் எழுதுகின்றவர். (2) தேவாலயம், மடாலயம், சத்திரம்' முதலியவற்றில் 'காரியம், கணக்கு, மணியம், மானேசர், ஏஜண்டு' முதலியவற்றுள்

இயன்ற உத்தியோகத்தைப்பார்த்து தந்திரமாகப் பொருள் சம்பாதித்து 'ஆபரணம் நிலம்' முதலியன வாங்கிவைத்துக் கொள்ளாமல் பாடசாலைவைத்து; கொடுத்தாலும், கொடுக்காவிட்டாலும், கல்வி போதித்துவருகின்றவர்; (3) பாடசாலை வைத்து நடத்துகின்றவர்; தாலூகா போர்டு மெம்பர்களை சிநேகம் பண்ணிக்கொண்டு தாலூகா போர்டு பணத்தை வாங்கிக்கொண்டு படுத்துக்கிடக்காமல்-கடவுளுடைய எட்டுத் திருவுருவங்களில் 'ஆன்மா' என்னும் உயிர், கஉ-உயிரெழுத்துவடிவமாகவும்; உயிர்நின்று இயங்கும் கருவியாகிய 'உடல்' என்னும் மெய், கஅ-மெய்யெழுத்து வடிவமாகவும்; அவ்வுயிரும் உடலும் ஒன்றுபட்டு உலகவின்பங்களை நுகரும் உயிர்மெய்' என்னும் உயிருடல், உசசு உயிர்மெய்யெழுத்து வடிவமாகவும்; உயிருடலின் கையினின்று, பகைவர்வலியை வாங்கி வெல்லுங் கருவியாகிய 'கேடகம்' என்னும் ஆயுதம் இதர மொழிகளின் ஒலியைவாங்கி ஒலிப்பதற்கு, க-ஆய்தவெழுத்து வடிவமாகவும் விளங்காநின்ற இருநூற்று நாற்பத்தேழு எழுத்துக்களையுடையதும்; 'உயிரெழுத்து, உயிர்மெய்யெழுத்து' என்னும் உஉஅ-எழுத்துக்களில் கூரு-குற்றெழுத்துக்களையும், கஙங-நெட்டெழுத்துக்களையுமுடையதும்; 'மெய்யெழுத்து' உயிர்மெய்யெழுத்து' என்னும் உஙச-எழுத்துக்களில் எஅ-வல்லெழுத்துக்களையும் எஅ-மெல்லெழுத்துக்களையும், எஅ-இடையெழுத்துக்களையுமுடையதும்; 'உயிரெழுத்து, உயிர்மெய்யெழுத்து' என்பவற்றுள், ஈச-மொழிமுதலெழுத்துக்களையுடையதும்; 'உயிரெழுத்து, மெய்யெழுத்து' என்பவற்றுள், உஉ-மொழிக்கிறுதியெழுத்துக்களையுடையதும்; 'மெய்யெழுத்து, ஆய்தவெழுத்து' என்பவற்றிற்கு தனித்தனி அரைமாத்திரை உச்சரிப்பையும், 'குற்றெழுத்துக்கு' ஒருமாத்திரை உச்சரிப்பையும், 'நெட்டெழுத்துக்கு' இரண்டுமாத்திரை உச்சரிப்பையுமுடையதும், ஆகிய தமிழ்மொழியிலுள்ள ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை, உலகநீதி, நீதிவெண்பா, வாக்குண்டாம், நல்வழி, நன்னெறி, நீதிநெறிவிளக்கம், திரிகடுகம், நான்மணிக்கடிகை, அறநெறிச்சாரம்.

ஆசாரக்கோவை, குறள், நாலடியார்' முதலிய நீதி நூல்களையும், 'பிங்கலந்தை, சூடாமணிநிகண்டு, நைடதம்' முதலிய இலக்கிய நூல்களையும்; 'மகாலிங்கையர் இலக்கணம், நன்னூல்' முதலிய இலக்கண நூல்களையும்; 'மறைசையந்தாதி, திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி, மதுரைக்கலம்பகம், திருவரங்கக்கலம்பகம், அழகர்கலம்பகம், அருணைக்கலம்பகம், குமரேசசதகம், அறப்பளீசுரசதகம், மணவாளநாராயண சதகம், மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், முத்துக்குமரசுவாமி பிள்ளைத்தமிழ், சோணசைலமாலை' முதலிய பக்தி நூல்களையும்; நுட்பமான முறையில் பல்வகைக் கணக்குகளையும்; மாணுக்கர்களின் 'மனப்போக்கையும், அறிவையும்' நன்காராய்ந்து, 'கொள்வோன் கொள்வகையறிந்து' என்றபடி அவரவருக்கேற்றபடி போதித்து வருகின்றவர். (4) சம்பாதித்த பொருளை வட்டிக்குக்கொடுத்து விருத்தி செய்துகொண்டு கோவில் காடு மூடியிருப்பதைப் பார்த்து ஆனந்தப்பட்டுக் கொண்டு சுகமாயிராமல், கோவிலின் நிலைமையைப்பற்றி தஞ்சாவூர்சர்க்கிள்தேவஸ்தானங்கமிட்டியாரவர்களுக்கு "மகஜர்மனுக்களெழுதல்; 'நீலலோசனி, ஜனானுகூலன், யதார்த்தவசனி, ஆரியமித்திரன்' முதலிய பத்திரிகைகளின் வாயிலாய் வெளிப்படுத்தல்; 'கோட்டூர் திருவேங்கட முதலியாரவர்கள், களப்பாள் ஸ்ரீநிவாச முதலியாரவர்கள், நெடும்புலம் அருணாசல முதலியாரவர்கள், வடபாதிமங்கலம் சோமசுந்தர முதலியாரவர்கள், ஆலங்காடு சிதம்பர செட்டியாரவர்கள், பூவனூர் இராசு முதலியாரவர்கள், ஈசனக்குடி தியாகராச பிள்ளை அவர்கள், தென்பாதி சுப்பையா நாயக்கரவர்கள், மருதவனம் நாராயணசாமித் தேவரவர்கள். மேற்படியூர் செல்லப்ப தேவரவர்கள், வங்கநகர் கோட்டகம் வெங்கடாசல தேவரவர்கள், சோலைக்குளம் பொன்னம்பலவாண்டையாரவர்கள், மாங்குடி கி. மு. நடராச தேவரவர்கள், குசதாங்கி கோபாலசாமி தேவரவர்கள், மேற்படியூர் கந்தசாமி தேவரவர்கள், நறுவிலிகளப்பாள் சி. வபி. அருணாசல செட்டியாரவர்கள், அப்பையாதிருவாசல் மலையப்ப

இருங்கள்ரவர்கள், மண்ணுமிகொண்டான் சிதம்பரசபாபதி பிள்ளையவர்கள், மேற்படியூர் வெங்கடாசலம் பிள்ளையவர்கள், மேற்படியூர் கிருஷ்ணசாமி பிள்ளையவர்கள், நட்டுவன் கோவில்பற்று பச்சைய மூலைப்பிட்டாரவர்கள், உறத்தூர் சிங்காரவேல் செட்டியாரவர்கள், தெற்குவாட்டாறு வைத்திலிங்க தேவரவர்கள், கீழப்புத்தூர் இராமசாமி தேவரவர்கள், மேற்படியூர் தனுக்கோடி தேவரவர்கள், கருப்புக்களர் வெங்கடாசல தேவரவர்கள், மேற்படியூர் ஸ்ரீநிவாச செட்டியாரவர்கள், மறவக்காடு இராமலிங்க தேவரவர்கள், தம்பிக்கோட்டை இரங்கசாமி தேவரவர்கள், முதலிய எண்ணிறந்த கனதனவான்களிடத்தில் அடிக்கடி முறையிடல்; தலபுராணத்தைத்தேடிக் கண்டுபிடித்து அச்சிட்டுக்கொடுத்தல்; கால் நடையாகப் பலநடை செட்டி நாட்டுக்குச்சென்று தொண்ணூற்ருறு நகரங்களிலுமுள்ள கனதனவான்களிடத்தில் ‘தலபுராணம் தனிப்பத்திரிகைகள்’ கொடுத்து முறையிடுதல்; அமராபதி புதூரில் வயி. நாக. ராம. முத்தையா செட்டியாரவர்களும், காரைக்குடி பழ. வெ. ராம. இராமநாதன் செட்டியாரவர்களும் இருந்தபோது ‘தலபுராணம் தனிப்பத்திரிகைகள்’ கொடுத்து முறையிட்டும், மேற்படி இராமநாதன் செட்டியாரவர்களோடு காரைக்குடி சென்று அவருடைய தாயாதிகளை ஓரிடத்தில் கூட்டிவைத்து ‘தலபுராணம் தனிப்பத்திரிகைகள்’ கொடுத்து முறையிட்டும், கோவிலூர் மடாலயத்தில் ஐந்தாங் குருமூர்த்தியா யெழுந்தருளியிருந்த ஸ்ரீவீரசேகர ஞானதேசிக மகாமுனிவர் திருச்சந்நிதானத்தில் ‘தலபுராணம் தனிப்பத்திரிகைகள்’ வைத்து விண்ணப்பஞ்செய்தும் வரவழைத்தல்; திருப்பணி நடக்கும்போது துருவாச முனிவருடைய திருவுருவத்துக்குச் செம்பு தயார்செய்து கொடுத்தல்; கும்பாபிஷேக காலத்தில் ‘திருக்களர் சாரசங்கிரகம்’ என்னும் புத்தகத்தை வெளிப்படுத்தி இனமாகக் கொடுத்தல்; கோவில் நிலத்திலிருந்த இரண்டு சொந்தக்கட்டிடங்களைப் பிரித்து காலி செய்து திருப்பணிக்கு விட்டதற்குப் பதிலாக ஸ்ரீவீரசேகர மகாமுனிவர் மண்டப வீடுகட்டிக்கொடுக்க எத்தனப்பட்ட

போது வேண்டாமென்று மறுத்தல்; 'ஸ்ரீசுப்பைய ஞான தேசிக சுவாமிகள், ஸ்ரீ நாராயண சுவாமி ஞானதேசிக சுவாமிகள், பழ. வெ. ராம. இராமநாதன் செட்டியாரவர்கள் ராம. ஆத. மெ. இராமசாமி செட்டியாரவர்கள் என்பவர்கள் கோவிலுக்கு நிலம் வாங்கும் பொருட்டு, பினங்கு முதலிய தீவுகளுக்கு யாசகத்துக்குச் சென்றபோது 'திருக்களர் சாரசங்கிரகம்' என்னும் புத்தகம் 800 கொடுத்தனுப்பித்தல்; ஸ்ரீவீரசேகர மகாமுனிவர் கோவிலுக்கு திருநந்தனவனம் போடவேண்டியதற்காக புதிதாக வீடுகட்டிக் குடியிருந்த இடத்தை, களப்பாள் S. இரங்கசாமி முதலியாரவர்களுடைய நன்செய் நிலத்தில் பரிவர்த்தனை செய்துகொண்டு கொடுத்து விட்டு, கோவிலுக்குச் சொந்தமான பள்ளப் புன்செய்க்கு வருஷம் ஒன்றுக்கு ரூ 3 வீதம் பகுதி கொடுப்பதாக வருஷம் 45-க்கு பகுதிப்பத்திரம் எழுதி ரிஜிஸ்டர் செய்து கொடுத்து விட்டு, ரூ 200 செலவிட்டு தூர்த்து வீடுகட்டிக் குடியிருந்துவருதல்; தனக்கிருந்த நன்செய் நிலத்தை அசலுக்கு ரூ 100 தள்ளுபடிசெய்து மடத்துக்குக் கிரய சாசனஞ் செய்து கொடுத்தல்; 'திருக்களர்ப் புராணம் (இரண்டாம் பதிப்பு) திருக்கோட்டூர்ப் புராணம், களப்பாள் கஜேந்திரவரதர் புராணம், களப்பாள் சிவக்ஷேத்திர விளக்கம் திருச்சிற்றேமம் சிவக்ஷேத்திர விளக்கம், திருவிடும்பாவனம் சிவக்ஷேத்திர விளக்கம், வீரசேகர ஞானதேசிகர் சரித்திரம், குழந்தைவேற் சுவாமிகள் சரித்திரம், சூரியகுலக் கள்ளர் சரித்திரம், திருவிடைவாய்த் தேவாரம் (கல்வெட்டிலிருந்து கண்டு பிடித்தது), முப்பொருள் விளக்கம், சைவசமயமும் தமிழ்ப்பாடையும், என்னும் புத்தகங்களை அச்சிட்டு இனமாகக் கொடுத்தல் முதலிய அநீதங்களைச் செய்தவர். (5) புறத்துறவுபூண்டு, யாசகஞ் செய்து மடங்கட்டிக்கொண்டு, கோவில் பெயரைச் சொல்லி பொருள் வசூல் செய்து மடத்துப் பெயரால் நிலம் வாங்கி வைத்துக்கொண்டு, தங்க நகையீட்டின்பேரில் வட்டிக்குக் கொடுத்துவாங்கல், நன்செய்ச் சாகுபடி செய்தல், புன்செய்ச் சாகுபடிசெய்தல் முதலியன செய்துகொண்டும்; (களப்பாள் S. இரங்கசாமி முதலியார்

அவர்கள் விசாரணைக்குப் பிறகு) கோவில் கட்டிடம், உற்சவம், கும்பாபிஷேகம்' என்பவற்றிற்கென்று (க. உ. கு. கணக்கு ஏற்படுத்தி) பொருள் வசூல்செய்து தன் பெயரால் நிலம் வாங்கிவைத்தல், வார்சுதாரர் அந்நிலத்திற் கேற்பட்ட தருமங்களை நிறுத்திவிட்டிருத்தல், அந்நிலத்தில் ரூ 1300 பெறுமானமுள்ள மா 12 குழி 24 நன்செய் நிலத்தை கோவில் அனுபோகத்தில் சேர்த்துவிட்டு, கோவிலுக்குச் சொந்தமான ரூ. 3300 பெறுமானமுள்ள மா 16 குழி 44 நன்செய்நிலத்தை அந்நிலத்தோடு சேர்த்து அனுபவித்துக் கொண்டிருந்ததால், 'வைரவர் நவக்கிரகங்கள்' என்பவற்றை யிடமாறுதல் செய்திருத்தல்; (பழ. வெ. ராம. இராமநாதன் செட்டியாரவர்கள் விசாரணைக்குப் பிறகு) நவராத்திரியில் 'அம்பாள்' தீக்குளித்தல் நாகாபரணக்குவளை வெள்ளிச் சாமான்கள் வெளியிற்போதல், கட்டிடங்கள் குட்டிச் சுவராதல், பரிவர்த்தனை நிலங்கள் பாழாய்ப்போதல்; (சோமசுந்தர முதலியாரவர்கள் விசாரணைக்குப் பின்பு) அம்பாள் தாலிக்கோர்வை அந்நியாயமாய்த்திருட்டுப் போதல், அத்திவெட்டியில் திருடர்களிடத்தில் சத்தியம் வாங்குதல், திருட்டை மறைத்துச்சிறுதாலிசெய்துவைத்தல், திருடர்களுக்குக் கோவில் சம்பளம் சிரத்தையாய்க் கொடுத்தல், பாக்கிக்கட்டிடங்கள் பாழாய்ப்போதல் முதலியவற்றை பார்த்துக்கொண்டும் சும்மாயிராமல் 'திருக்களர் விளக்கம்' என்னும் சிறுபுத்தகத்தை வெளியிட்டவர். மேற்கண்ட காரணங்களினால் மேற்படி சுவாமிநாத உபாத்தியாயரைப் பற்றி இராமநாதன் செட்டியாரவர்கள் காலமுதல் பல கரஸ்பாண்டென்ஸுகள் கமிட்டி ஆபீஸிலிருக்கிறதென்று மேற்படி அழகப்ப செட்டியாரவர்கள் எழுதியிருப்பது உண்மையாயிருக்கலாம். 1898-ம் வருஷ முதல், 1933-ம் வருஷம் வரையில் மேற்படி சுவாமிநாத உபாத்தியாயரைப்பற்றி கமிட்டியாரவர்களுக்கு எவ்விதமான ரிப்போர்ட்டுகள் கிடைத்திருந்தாலும் அவற்றிற்கு நகல் தயார்செய்து மேற்படி சுவாமிநாத உபாத்தியாயருக்கு அனுப்பும்படி தஞ்சாவூர் சர்க்கிள் தேவஸ்தானம் கமிட்டியாரவர்களை மேற்படி

சுவாமிநாத உபாத்தியாயர் மிகுந்த வணக்கத்துடன் மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகின்றார்.

(8) கோவிலுக்குச்சொந்தமாக திருக்களர் கிராமத்தில் நன்செய் ஏகர் 113 சென்ட் 33, புன்செய் ஏகர் 4 சென்ட் 85 தென்னைமரம் 375, பனைமரம் 600, இருப்பைமரம் 32; குமாரமங்கலம் கிராமத்தில் நன்செய் ஏகர் 16 சென்ட் 67, புன்செய் ஏகர் 36 சென்ட் 66, தென்னைமரம் 750, பனைமரம் 1200, இருப்பைமரம் 15; வேளைக்கார்நல்லூர் கிராமத்தில் புன்செய் சென்ட் 20, தென்னைமரம் 50; சீலத்தநல்லூர் கிராமத்தில் புன்செய் சென்ட் 24; சோலைக்குளம் கிராமத்தில் புன்செய் சென்ட் 15, மாமரம் 1; குறுக்கை கிராமத்தில் புன்செய் ஏகர் 10 சென்ட் 32, பனைமரம் 11, இருப்பைமரம் 68; விளக்குடி கிராமத்தில் புன்செய் சென்ட் 67, தென்னைமரம் 88, மாமரம் 1; நரிக்குடி கிராமத்தில் புன்செய் ஏகர் 2 சென்ட் 30, பனைமரம் 93, இருப்பைமரம் 55, மாமரம் 1; மண்ணுகொண்டான் கிராமத்தில் மார்கழித் திருவாதிரை உபயத்துக்காக 'சாமிநாத ஞானியார், சிதம்பரசபாபதி பிள்ளை' என்பவர்களால் ஏற்படுத்தப்பட்டது நன்செய் ஏகர் 3 சென்ட் 34; அழகிரிகோட்டகம் கிராமத்தில் சுக்கிரவார உபயத்துக்காக 'முத்துசாமிபிள்ளை' என்பவரால் ஏற்படுத்தியது நன்செய் ஏகர் 3 சென்ட் 27; மருதவனம் கிராமத்தில் கோவிலுக்காக 'ஸ்ரீசுப்பையஞானதேசிக சுவாமிகள், ஸ்ரீநாராயணசாமி ஞானதேசிக சுவாமிகள், பழ. வெ. ராம. இராமநாதன் செட்டியாரவர்கள். ராம. ஆத. மெ. இராமசாமி செட்டியாரவர்கள், என்பவர்கள் 'பினங்கு, சிங்கப்பூர்' முதலிய தீவாந்திரங்களில் யாசகமாக வசூல் செய்துகொண்டு வந்த ரூ. (80000) எண்பதினாயிரத்தினின்று திருக்களர் மடத்தின்பெயரால் கோவிலுக்குக்கிரயசாசனம் வாங்கிவைத்திருப்பது நன்செய் ஏகர் 113 சென்ட் 33, புன்செய் ஏகர் 5 சென்ட் 33, தென்னைமரம் 250 ஆக நன்செய் ஏகர் 249 சென்ட் 94; (வேலி 37 மா 9 குழி 82) புன்செய் ஏகர் 60 சென்ட் 72; (வேலி 9 மா 2

குழி 16;) தென்னைமரம் 1513; பனைமரம் 1904; இருப்பை மரம் 170; மாமரம் 3 முதலியவைகள் இருக்கின்றன. மேற்படி நன்செய் நிலங்களை இரண்டு பிரிவாகப் பண்ணை வைத்து சரியான முறையில் காலாகாலத்தில் சாகுபடி செய்யும் பட்சத்தில் வருஷம் ஒன்றுக்கு நெற்கலம் 6000 (ஆறாயிரம்) கண்டு முதலாகும். இதிற் சிறிதும் சந்தேகமில்லை. 'அசாமிச் சம்பளம், தரிசுகூலி, விதைக்கோட்டை, கோவிற்பூசை' முதலியவற்றிற்காக நெற்கலம் 2500 நீக்கி பாக்கி நெற்கலம் 3500 விற்று முதலுக்கு வரும். மேற்படி புன்செய் நிலங்களில் தென்னை மரங்கள் வைத்துப் பயிர் செய்வதாயிருந்தால் 15000 தென்னம்பிள்ளைகள் வைத்துப் பயிர் செய்யலாம்; புளியமரங்கள் வைப்பதாயிருந்தால் 3000 புளியங்கன்றுகள் வைத்துப் பயிராக்கலாம்; இருப்பை மரங்கள் வைப்பதாயிருந்தால் 5000 இருப்பைக்கன்றுகள் வைத்து விருத்தி செய்யலாம்; சவுக்குமரங்கள் வைப்பதாயிருந்தால் 1000000, சவுக்குக் கன்றுகள் வைத்து விருத்தி பண்ணி விற்றுப் பண்டு வைக்கலாம்.

(9) கோவிலுக்குச் சொந்தமாக திருக்களர் கிராமத்திலுள்ள நிலங்களில் பரிவர்த்தனை செய்த நன்செய் நிலம் வேலி 2, மா 2, குழி 50, முன் பாத்தியக்காரர்கள் எலமெடுத்து வசப்படுத்திக்கொண்டு விட்டார்கள். கோவில் விசாரிப்பு அமிர்தங்கண்ட பிள்ளை வகையறாப்பேர்கள் ரூ. 423-க்கு கிரயசாசனம் வாங்கிய நன்செய் மா 4, குழி 23, நிலத்தைக் கோவில் அனுபோகத்தில் சேர்த்து விட்டு, கோவிலுக்குச் சொந்தமான ரூ. 1128 பெறுமானமுள்ள நன்செய் மா 5, குழி 64, நிலத்தைக் கைப்பற்றிக் கொண்டு இதில் மா 3, குழி 30, நிலத்தை ரூ. 660-க்கு கிரயஞ் செய்துவிட்டு பாக்கி மா 2, குழி 34, நிலத்தை தங்கள் அனுபோகத்தில் வைத்துக்கொண்டிருக்கின்றார்கள். பழ. வெ. ராம. வெ. வெங்கடாசல செட்டியாரவர்கள் ரூ. 1300 பெறுமானமுள்ள நன்செய் மா 12, குழி 24, நிலத்தைக் கோவில் அனுபோகத்தில் சேர்த்து விட்டு, கோவிலுக்குச் சொந்தமான ரூ. 3300 பெறுமானமுள்ள

நன்செய் மா 16, குழி 44, நிலத்தைக் கைப்பற்றிக்கொண்டு அனுபவிக்கின்ருர். பிள்ளையார் தோப்படியில் வெட்டிய நன்செய் மா 5, திரும்பப் புன்செயாகின்றது. வேளா குட்டையின் கீழ்கரையி லிருக்கின்ற நன்செய் குழி 50, நிலத்தை மேற்படி வேளாகுட்டை தன்னேடு சேர்த்துக் கொள்கின்றது. புன்செய்த் திடல்களெல்லாம் பாழாய்கிடக்கின்றன. சீலத்தநல்லூர் கிராமத்திலிருக்கின்ற புன்செய் குழி 72, நிலத்தை அதன் பக்கத்திலுள்ள குளம் சேர்த்துக் கொள்கின்றது. சோலைக் குளம் கிராமத்திலிருக்கின்ற புன்செய் குழி 45, நிலம் பாழாய்ப் போகின்றது; அதிலிருக்கின்ற மாமரத்தை ஆடும், ஆடுமாடு மேய்க்கின்ற பையன்களும், அனுபவிக்கின்ருர்கள். குமாரமங்கலம் கிராமத்திலிருக்கின்ற புன்செய் நிலங்களில் பெரும்பகுதி பாழாய்க் கிடக்கின்றன. விளக்குடி கிராமத்திலிருக்கின்ற "புன்செய் மா 2, குழி 1, தென்னைமரம் 88, மாமரம் 1, என்பன மேற்படியூர் க. சிவசாமி நாடார் அனுபோகத்திலிருக்கின்றன. மேற்படி தென்னைமரச் சாத்துக் குத்தகையினுல் வருஷம் ஒன்றுக்கு ரூ. 200 மேற்படி சிவசாமி நாடார் அடைகின்ருர். நரிக்குடி கிராமத்திலிருக்கின்ற புன்செய் மா 6, குழி 60. பாழாயிருக்கின்றது; இருப்பை மரங்கள் ஆடுகளுக்கு உதவி செய்கின்றன; பனைமரங்களின் மட்டைகள் பலபேர்களுக்கும் உதவியாகின்றன; மாமரத்துக்காக பலர் மற்போர் புரிகின்ருர்கள். குறுக்கை கிராமத்திலிருக்கின்ற சர்வே 296, 303, 304, 305, 307, நெம்பர்களின் புன்செய் வேலி 1, மா 11, நிலங்கள் வெறுந்திடலாகவே கிடக்கின்றன; எங்கேயோ ஒரு மூலையில் இருப்பைமரம் 68, பனைமரம் 11 இருக்கின்றன; மேற்படி புன்செய்களை வெட்டித் திருத்துகிற பட்சத்தில் மானுவரி நன்செயாக வேலி 1, மானுவரிப் புன்செயாக மா 11, தேறக்கூடியதாயிருக்கின்றன. மண்ணுகொண்டான் கிராமத்தில் மார்கழித் திருவாதிரைக்காக ஏற்பட்டிருக்கின்ற நன்செய் மா 10, நிலத்தை மேற்படி திருவாதிரை உபயத்தை நிறுத்திவிட்டு, இராமகிருஷ்ண பிள்ளை என்பவர் அனுபவித்துக் கொள்கின்ருர். மருதவனம் கிராமத்திலிருக்கின்ற "நன்செய்

வேலி 17, புன்செய் மா 16, தென்னைமரம் 250" என்பன மடத்தினுடைய அனுபோகத்திலிருக்கின்றன. காரைக்குடி பழ. வெ. ராம. இராமநாதன் செட்டியார் அவர்களால் 28-4-27-ல் எழுதிவைத்த உயிலில் கண்ட "திருவனந்தல் கட்டளை, குழித்தளிகைக் கட்டளை, உருத்திர செபக் கட்டளை, அப்பாள் சந்நிதி நேத்திர விளக்குக் கட்டளை, சுவாமி நித்தியப்படி அருச்சனைக் கட்டளை, தேர்மண்டபப் படிக் கட்டளை, மகா சிவராத்திரி ஒரு கால அபிஷேகக் கட்டளை" என்பவற்றிற்காக திருக்களர் கிராமத்திலும் ஓவர்குடி கிராமத்திலும் வாங்கி வைத்திருக்கிற நன்செய் வேலி 34, நிலங்களை வெ. ராம. வெ. வெங்கடாசல செட்டியார் அவர்கள் அநுபவித்துக் கொண்டு மேற்படி கட்டளைகளை யெல்லாம் நிறுத்தி விட்டார்.

(10) நித்தியப்படி பூசனைக்காக மடத்திலிருந்து வருஷம் ஒன்றுக்கு "அரிசி கலம் 130, சூடம் வீசை 12, ரொக்கம் ரூ. 1000" கொடுத்து வருகின்றார்கள். பிரமோற்சவத்துக்காக "மூன்றாந் திருவிழாவுக்கு காடுவாகுடி ஸ்ரீநிவாச நாயக்கரவர்கள் ரூ. 30-ம் நான்காந் திருவிழாவுக்கு எசுர்வேத பாடசாலையில் ரூ. 250-ம் ஐந்தாந் திருவிழாவுக்கு மடத்தில் ரூ. 250-ம், ஆறாந் திருவிழாவுக்கு குருபூசை மடத்தில் ரூ. 250-ம், எழாந் திருவிழாவுக்கு பட்டுக்கோட்டை ஆ. பழ. நா. வயி. நாடிமுத்துப் பிள்ளை அவர்கள் ரூ. 350-ம், எட்டாந் திருவிழாவுக்கு பசுமடத்தில் ரூ. 250-ம், விடாயாத்தி விழாவுக்கு குசதாங்கி கோ. இராமாமிர்தமேதவர் அவர்கள், க. கோபாலகிருஷ்ணதேவர் அவர்கள் வகையறா ரூ. 50-ம்' கொடுத்து நடத்தி வருகின்றார்கள்; மேற்படி உற்சவத்தில் "கொடியேற்று விழா, இரண்டாந் திருவிழா, ஒன்பதாந் திருவிழா, பத்தாந் திருவிழா, கொடியிறக்கு விழா" என்பவற்றிற் கேற்பட்டிருந்த மண்டபப் படிகள் நின்று விட்டன. மேற்படி மண்டபப் படிகள் நடத்தக் கூடியவர்களைத் திட்டஞ்செய்யக் கூடியவர்கள் தற்காலத்தில் கோவிலிலிருப்பதாகத் தெரியவில்லை. மேற்படி பிரமோற்சவத்திற்கு பிரத்தியேகமாக வரவழைக்கும் மேளத்திற்கு

ரூ. 400-ம், தாசிக்கு ரூ. 100-ம் ஆக ரூ. 500 செலவிடுகின்றார்கள்; எளிய கோவிலானதால் மேற்படி செலவு மிகையே யாகும்; உள்ளூரிலேயே நன்றாக வாசிக்கக்கூடிய இரண்டு ஜதை மேளங்கள் பிரத்தியேகமாக விருப்பதால் அவற்றிற்கு ரூ. 100-ம், சாமான்யமான ஒரு தாசிக்கு ரூ. 50-ம் ஆக ரூ. 150 கொடுத்துச் சிறப்பாக நடத்தலாம்; இப்படி நடத்துகிற பட்சத்தில் ரூ. 350 மீதியாகும்; மேற்படி மண்டபப்படிகளுக்காக ரூ. 150 செலவு செய்து விட்டு, பாக்கி ரூ. 200-யும் கோவிலுக்கு ஆதாயஞ் செய்து கொள்ளலாம். சித்திரை மாசம் முதல் பங்குனி மாசம் இறுதியாக பன்னிரண்டு மாதங்களிலும் நடைபெறும் சில்லறை உற்சவங்கள் எல்லாவற்றிற்கும், பலபேர்கள் சுமார் ரூ. 500 வரையில் கொடுத்து நடத்தி வருகின்றார்கள். தினப்படி உச்சிக் காலத்தில் "சுவாமி, அம்பாள், சபாநாயகர்" என்னும் மூர்த்திகளுக்கு குழித்தளிகை (அறுசுவை) நிவேதனம் தனித்தனி நடந்துவந்தன; இப்போது சுவாமிக்கும், அம்பாளுக்கும், தனித்தனி நடக்கின்றன. சபாநாயகருக்கு நடைபெறவில்லை. மேற்படி குழித்தளிகைகளிரண்டுக்கும் வருஷம் ஒன்றுக்கு காரைக்குடி ரா. ப. மெ. சொக்கலிங்க செட்டியார் அவர்கள் ரூ. 142—8—0-ம் பசுமடத்தில் ரூ. 142—8—0-ம் கொடுத்து வருகின்றார்கள். காரைக்குடி பழ. வெ. ராம. இராமநாதன் செட்டியார் அவர்களால் 28-4-27-ல் எழுதிவைத்த உயிலில் கண்டபடி "திருவனந்தல், உருத்திரசெபம், சுவாமி நித்தியப்படி அருச்சனை, அம்பாள் நேத்திரவிளக்கு, குழித்தளிகை, தேர்மண்டபப்படி, மகா சிவராத்திரி ஒரு கால அபிஷேகம்" என்பவற்றிற்கு வருஷம் ஒன்றுக்கு ரூ. 874—8—0 கொடுக்கக் கடமைப்பட்ட வெ. ராம. வெ. வெங்கடாசல செட்டியார் அவர்கள் மேற்படி தொகை கொடுக்காமலிருப்பதைப் பற்றி நடவடிக்கை நடத்தப்படவில்லை.

(11) கோவிலுக்கு வருஷம் ஒன்றுக்கு திருக்களர், குமாரமங்கலம் "கிராமங்களில்" வரவு நெற்கலம் 1500-க்கு கிராம சம்பந்தமான "மணியம், விசாரிப்பு, தலையாரி"

என்னும் அசாமிகள் சம்பளம் வருஷம் மூன்றுக்கு நெற்கலம் 153 நீக்கி பாக்கி நெற்கலம் 1347 இந்த ஆயிரத்து முந்நூற்று நாற்பத்தேழு கல நெல்லுக்கும் கலம் ஒன்றுக்கு ரூ. 1-விதம் வரவு ரூ. 1347, திருக்களர் கிராமத்தில் "மனைக்கட்டுப் பகுதி, கட்டிட வாடகை" என்பவற்றினால் வரவு ரூ. 250, தென்னைமரக் குத்தகையினால் வரவு ரூ. 200, தென்னைமரச் சாத்துக் குத்தகையினால் வரவு ரூ. 250; குமாரமங்கலம் கிராமத்தில் "தென்னைமரம், பனைமரம், குளத்துப்பாசி, புன்னைமரம்" என்பவற்றின் குத்தகையினால் வரவு ரூ. 230, மனைக்கட்டுப் பகுதியினால் வரவு ரூ. 60, மரப்பாதித் தென்னை மரச்சாத்துக் குத்தகையினால் வரவு ரூ. 200, சேவு நாடார், கருப்ப நாடார் பாதி வாரக்கொல்லையினால் வரவு ரூ. 100; வேளைக்கார நல்லூர் கிராமத்தில் தென்னை மரக் குத்தகையினால் வரவு ரூ. 12—8—0; "திருக்களர், குமாரமங்கலம், நரிக்குடி, குறுக்கை என்னும் கிராமங்களி லிருக்கின்ற இருப்பைமரம் 170-க்கு மரம் ஒன்றுக்கு இருப்பைக் கொட்டை கலம் 2-வீதம் சராசரி வரவு இருப்பைக் கொட்டை கலம் 340-க்கு எண்ணெய் ஆடம் 170. இந்த நூற்றெழுபது ஆடத்துக்கும் ஆடம் ஒன்றுக்கு ரூ. 4-வீதம் வரவு ரூ. 680 ஆக இனம் பத்துக்கு வரவு ரூ. 3329—8—0 சர்க்கார் மோகனி வரவு ரூ. 109—6—0 ஆக வரவு ரூ. 3438—14—0 வரும்படி வருகின்றது. சில வருஷங்களில் சிறிது குறைவும், சில வருஷங்களில் சிறிது கூடுதலு முண்டாகும். தொன்று தொட்டு கிராம வழக்கப் படி "விதைக்கோட்டை, தரிசுகூலி, உழவுமாட்டுப் விலைப் பணம்" என்பன குடியானவர்களிடத்திலேயே நிறுத்தி வைக்கப்பட்டிருந்து வருகின்றன. இருப்பைக்கொட்டை பொறுக்குக் கூலியும், இருப்பை யெண்ணெய் ஆட்டுக் கூலியும், இருப்பைப் புண்ணாக்கு விலையிலிருக்கின்றன.

(12) கோவிலின் சொந்த வரும்படியில் சர்க்கார் கிஸ்தி திருக்களர் கிராமத்துக்கு ரூ 750, குமாரமங்கலம் கிராமத் துக்கு ரூ. 200, குறுக்கை கிராமத்துக்கு ரூ. 2—4—0, நரிக்குடி கிராமத்துக்கு ரூ. 0—9—0, சோலைக்குளம்

கிராமத்துக்கு ரூ. 0—2—3, வேளைக்காரநல்லூர் கிராமத்துக்கு ரூ. 0-6-0, சீலத்தநல்லூர் கிராமத்துக்கு ரூ. 0-0-5, ஆக சர்க்கார் கிஸ்தி ரூ. 953—5—8; குருக்களிருவருக்கும் சம்பளம் ரூ. 210—0—0, பரிசாரகரிருவருக்கும் சம்பளம் ரூ. 336—0—0, அறை திருமாலை அசாமிச் சம்பளம் ரூ. 81-0-0, மெய்காவல் திருவிளக்கு அசாமிச் சம்பளம் ரூ. 81-0-0, கூட்டல் பத்துத்தேய்த்தல், அசாமிச் சம்பளம் ரூ. 15—0—0, ஆக உட்துறை அசாமிகளின் வருஷச் சம்பளம் ரூ. 723—0—0; தீபாவளிச் செலவு ரூ. 90-0-0, சங்கராந்திச் செலவு ரூ. 15—0—0; எண்டோமெண்ட் போர்டுபீஸ் ரூ. 37—8—0; தேவஸ்தானம் கமிட்டி ஆபீஸ் பீஸ் ரூ. 22—8—0, ஆக இனம் ஆறுக்குச் செலவு ரூ. 1841—5—8.

(13) பதினொராவது பாராவில் கண்ட வரும்படி ரூ. 3438-14-0; இந்த மூவாயிரத்து நானூற்று முப்பத்தெட்டு ரூபாய், பதினாலு அணாவில், பன்னிரண்டாவது பாராவில் கண்ட செலவு ரூ. 1841-5-8; இந்த ஆயிரத்து எண்ணூற்று நாற்பத்தொரு ரூபாய், ஐந்து அணா எட்டுப் பைசா நீக்கி பாக்கி ரூ. 1597-8-4; இந்த ஆயிரத்து ஐந்நூற்றுத் தொண்ணூற்றேழு ரூபாய், எட்டு அணா, நாலு பைசா கோவிலில் பிரதி வருஷத்திலும மீதமிருக்க வேண்டும். மேலே ஆறாவது பாராவில் கண்ட வீரராகவ கண்டியரவர்கள் காலத்தில் ஏற்பட்ட திட்டப்படி அசாமிகள் வைத்துக் கொள்ளுகிற பட்சத்தில் வருஷம் ஒன்றுக்கு குருக்கள் பரிசாரகர்கள் சம்பளத்தில் ரூ. 363-0-0; அதிகஏர் பத்துக்கு மானியம் மாட்டுவிலை வகையறுவில் ரூ. 365-0-0; ஆக இனம் இரண்டுக்கு ரூ. 728-0-0 இந்த எழுநூற்று இருபத்தெட்டு ரூபாயு மீதமேயாகும். மேலே பத்தாவது பாராவில் கண்டபடி அடுத்த ஊரிலிருந்து பிரத்தியேகமாக மேளம் வரவழைப்பதையும், அதிகத் தொகைக்கு தாசி வரவழைப்பதையும், நிறுத்திவிடுகிற பட்சத்தில் ஆதாயமாகும். ரூ. 200-0-0, இந்த இருநூறு ரூபாயும், கோவிலுக்கு மீதமாகும். ஆக இனம் மூன்றுக்கு

ரூ. 2525-8-4. இந்த ரூபாய் இரண்டாயிரத்து ஐந்நூற்று இருபத்தைந்து, அணா எட்டு, பைசா நாலுக்கும் பிரதி வருஷத்திலும், கோவில் சம்பந்தமான கிராமங்களிலுள்ள புன்செய் நிலங்களில் மண்ணின் தரத்துக்கு ஏற்றபடி "தென்னம் பிள்ளை, புளியங்கன்று, மாங்கன்று, இருப்பைக் கன்று, சவுக்குக்கன்று" என்பவற்றுள் இயன்றதை வைத்து விருத்திசெய்கிற பட்சத்தில் நாளடைவிலே வருவாய் மிகுதிப்பட்டு கோவில் நன்னிலைமைக்கு வந்து விடும். மேற்படி தொகைக்கு செலவுபோட்டுக் கணக்கும் எழுதலாம்; வருவாயைக் குறைத்தும் எழுதலாம்; வருவாயைக் கவனிக்காமல் பலபேர்களையும் சாப்பிடவுஞ் செய்யலாம்.

(14) மேற்கண்ட இயாதாஸ்தில் சுமார் 25 வருஷங்களுக்கு முன் எங்கள் மடாலயத்தில் தொகை கொடுத்துக் கட்டியதெனவும், பிறகு வந்த டிரஸ்டிகள் கட்டிடங்களை சரிவரப் பராமரிக்காததினால் இடிந்து விழுந்துவிட்டதெனவும், எழுதியிருப்பதால் மேற்படி அழகப்ப செட்டியாரவர்கள் ஸ்ரீவீரசேகர மகாமுனிவர் திருப்பணி செய்த விபரங்களும்; பழ. வெ. ராம. இராமநாதன் செட்டியார் அவர்கள் விசாரணைக்குப் பின் வந்த "கோபாலசாமி முதலியாரவர்கள், சோமசுந்தர முதலியாரவர்கள்" என்பவர்கள் விசாரணையில் மானேசராயிருந்த கிருஷ்ணசாமி ஐயர் காலத்தில் நாகாபரணப் பெரிய வெள்ளிக்குவளை வகையரு வெள்ளிச் சாமான்கள் திருட்டுப்போன விபரங்களும், மேற்படி ஐயர் காலத்தில் பரிவர்த்தனை நிலங்கள் ஏலத்தில்போன விபரங்களும், கட்டிடங்கள் இடிந்து விழுந்து பாழாய்க் கிடக்கிற விபரங்களும், நன்றாகத்தெரிந்து கொண்டிருக்கின்றாரென்பது நன்கு புலப்படுகின்றது. மேற்படி அழகப்ப செட்டியார் அவர்கள் பஞ்சாயத்து ஒப்புக் கொண்டு மூன்றாவது ஆண்டு நடக்கின்றது. இதுவரையில் கோவிலைக் கவனித்துச் சீர்திருத்தஞ் செய்திருந்தால் எவ்வளவோ சீர்திருத்தஞ் செய்திருக்கலாம். பணச்செலவில்லாத சீர்திருத்தங்கள் அநேகமிருக்கின்றன; அவற்றைக் கூட கவனிக்கவில்லை. பிரசோற்பத்தி-ளு மாசி-மீ 23உ

அமுதவல்லியம்பாளுடைய ரூ. 500 பெறுமானமுள்ள தாலி வகையறுக்கோர்வை திருட்டுப்போனதை மறைத்துவிட்டு, திருடர்களிடத்தில் அத்திவெட்டிப் பெரியாண்டவர் கோவிலில் சத்தியம் வாங்கிக்கொண்டு, திருடர்களிடத்திலும், திருடாதவர்களிடத்திலும், ரூ. 100 மாத்திரம் வசூல் செய்து ஒரு சிறிய தாலி செய்து வைத்துவிட்டு, வழக்கம்போல் திருடர்களைக் கோவிலில் வேலைக்கு வைத்துக் கொண்டு, சம்பளம் கொடுத்து வருவது கோவிலுக்கு இலாபமாகுமா? இக்கோவிலில் முன்னாலே மானேசராயிருந்து அளவிறந்த நஷ்டமுண்டுபண்ணிய காரணத்தினால் விலக்கப்பட்டவரும், பின்னாலே கோவிலூர் மடாலயத்தில் தாசில்தாரராயிருந்து நஷ்டமுண்டுபண்ண எத்தனப் பட்டதைத் தெரிந்துகொண்டு அம்மடாலயத்தினின்று விலக்கப்பட்டவருமாகிய மேற்படி கிருஷ்ணசாமி ஐயரை திரும்ப இக்கோவிலில் மாசம் ஒன்றுக்கு ரூ. 17½ சம்பளத்தில் மானேசராயிருந்த சுப்பிரமணிய ஐயருக்குப் பதிலாக ரூ. 25, அதாவது நெற்கலம் 25 கொடுப்பதாக பவர்பெற்ற மானேசராக நியமித்து "சிவபுரி" இராமையாக் குருக்கள் வகையறுப்பேரில் கோர்ட்டில் நடவடிக்கை நடத்தச் செய்திருப்பதும்; அவர் இவ்வூரில் பலவித விவகாரங்களை உண்டுபண்ணுவதும்; கோவில் பொருளை பலருக்கும் பங்கிட்டுக் கொடுப்பதும் கோவிலுக்கு இலாபமாகுமா? அமிர்தங்கண்ட பிள்ளை வகையறு, தங்கள் தாயார் பேருக்கு ரூ. 423-க்கு கிரயசாசனம் வாங்கியிருந்த நன்செய் மா 4, குழி 23, நிலத்தை கோவில் அனுபோகத்தில் சேர்த்து விட்டு, கோவிலுக்குச் சொந்தமான ரூ. 1128 பெறுமான முள்ள நன்செய் மா 5 குழி 64 நிலத்தைக் கைப்பற்றிக் கொண்டு அதில் மா 3 குழி 30 நிலத்தை ரூ. 660-க்கு கிரய சாசனம் பண்ணிக் கொடுத்துவிட்டு, பாக்கி மா 2, குழி 34, நிலத்தை அனுபவித்துக் கொண்டிருப்பது தெரிந்திருந்தும், மேற்படி அமிர்தங்கண்ட பிள்ளைக்கு கோவிலில் விசாரிப்பு வேலைகொடுத்து ஒரு மா நிலம் மானியமும் மாசம் ஒன்றுக்கு சம்பளம் நெற்கலம் 5-ம் கொடுத்து வருவது கோவிலுக்கு இலாபமாகுமா? முருகைய தொண்டைமான்

என்பவர் மடத்தில் விசாரிப்பு வேலைபார்த்த பொழுது "வெற்றிலை, வாழையிலை, வாழைக்காய், தேங்காய், விறகு" என்பவைகள் திருடிய குற்றத்திற்காக பசுக்கார சுவாமிகள் என்னும் அருணசல சுவாமிகளால் விசாரிப்பு வேலையி னின்று விலக்கப்பட்டவராயிருக்க, அவரை கோவிலில் அதிக விசாரிப்பாக நியமித்து மாசம் ஒன்றுக்கு நெற்கலம் 4 சம்பளம் கொடுப்பது கோவிலுக்கு இலாபமாகுமா? மேற்படி அழகப்ப செட்டியாரவர்கள் முன் விசாரணைதாரர் கள் காலங்களில் கோவிலுக்கு நஷ்ட முண்டாயிற்றென்பதை தஞ்சாவூர் சர்க்கிள் தேவஸ்தானம் கமிட்டியாரவர்களுக் கெழுதிய இயாதாஸ்து மூலமாக ஒப்புக் கொண்டவரா யிருந்தும்; இப்போது கோவிலில் வேலைபார்க்கின்ற எல்லா அசாமிகளும், முன் விசாரணைதாரர்கள் காலங்களில் வேலை பார்த்தவர்களென்பது நன்றாகத் தெரிந்தவராயிருந்தும், மேற்படி அசாமிகளில் பல திருடர்களும், சூட்சியினால் பொருளைக் கவர்கின்றவர்களும், கோவில் நிலங்களைக் கட்டிக்கொண்டு அனுபவிக்கின்றவர்களும், இருக்கின்றார்க ளென்பது தெரிந்து கொண்டவராயிருந்தும் இந்த அசாமி கள் உள்ளவரையில் கோவில் நன்னிலைமைக்கு வராதென் பதை அறியாதவரைப்போல் மேற்படி அசாமிகளை விலக்கி வேறு அசாமிகள் நியமிக்காதிருப்பதால் இவர் காலத்தில் கோவில் சீர்திருத்தமடையா தென்பது நிச்சயமே யாகும். அன்றியும் மடத்தில் மருதவனம் கிராமம் நன்செய் வேலி 17-க்கு ஏர் 17, ஆள் 21, வைத்து சாகுபடி கண்டு முதல் செய்து அசாமிச் சம்பளம் நெற்கலம் 120, ரூ. 12 கொடுத்து வருவதையும், திருக்களர் மடத்து நிலம் வேலி $6\frac{1}{4}$-க்கு ஏர் 6, ஆள் 7 வைத்து சாகுபடி கண்டு முதல் செய்து அசாமிச் சம்பளம் நெற்கலம் 48 கொடுப்பதையும், அறியாதவரைப் போல் கோவில் நன்செய் வேலி 14, மா 15-க்கு ஏர் 30 வைத்து சாகுபடி கண்டு முதல் செய்து அசாமிச் சம்பளம் நெற்கலம் 426 கொடுக்கின்றார். கோவில் எப்படி நன்னிலைமைக்குவரும், கமிட்டியார் அவர்கள் கவனிக்காத பட்சத்தில் கோவில் நன்னிலைமைக்கு வராதென்பது திண்ணமே.

காரைக்குடி ராம. ஆத. மெ. மெய்யப்ப செட்டியாரவர்களும், ஆத. லெ. ஆத. சொக்கலிங்க செட்டியாரவர்களும், கூட்டாக "பசுமடம், திருநந்தனவனம், நித்தியப்படி குழித்தளிகை, பிரமோற்சவம் எட்டாந் திருவிழா" என்னும் தருமங்களுக்காக வருஷம் ஒன்றுக்கு ரூ. 4000 செலவிடுகின்றார்கள்; பசுமடம் கட்டவேண்டியதற்காக ரூ. 50000 பண்டு வைத்திருக்கின்றார்கள். மேற்படி மெய்யப்ப செட்டியாரவர்களுடைய தகப்பனாராகிய ராம. ஆத. மெ. இராமசாமி செட்டியாரவர்கள் கோவிலுக்கு நித்தியப்படி பூசனைக்காக நிலம் வாங்கி வைக்கவேண்டியதற்காக "ஸ்ரீசுப்பைய ஞானதேசிக சுவாமிகள், ஸ்ரீ நாராயணசாமி ஞானதேசிக சுவாமிகள், பழ. வெ. ராம. இராமநாதன் செட்டியாரவர்கள்" என்பவர்களோடு 'பினாங்கு, சிங்கப்பூர்' முதலிய தீவுகளுக்குச் சென்று பொருள் வசூல் செய்து கொண்டுவந்தார்.

காரைக்குடி ஆத. பழ. சிதம்பர செட்டியாரவர்கள், "எசுர்வேத பாடசாலை; பிரமோற்சவம் நாலாந் திருவிழா, வெள்ளிக்கிழமை சுவாமி அம்பாள் அருச்சனை" என்னும் தருமங்களுக்காக வருஷம் ஒன்றுக்கு ரூ. 3000, செலவிடுகின்றார். நன்செய் நிலம்வேலி $3\frac{3}{4}$ கிரய சாசனம் வாங்கி வைத்திருக்கிறார். பங்களா ரூ. 10000, செலவிட்டுக் கட்டிவைத்திருக்கின்றார்.

பாகனேரி பெரி. அழ. மு. முத்துக்கருப்ப செட்டியாரவர்களும், காரைக்குடி மைனர் முத்து. அரு. சா. அரு. சோமசுந்தர செட்டியாரவர்கள் தாயாராகிய சீதை ஆய்ச்சி அவர்களும், கூட்டாக "தேவார பாராயணம், வலம்புரி விநாயகர், சிவபராக்ரம படம், திருவிளையாடற் படம், திருத்தொண்டர் படம், நித்தியப்படி பூசனை, அறுபத்து மூவராதியோர் குருபூசை, பிரமோற்சவம் ஆறாந் திருவிழா, சோமவாரம் சுவாமி அருச்சனை, சுக்கிரவாரம் தேவி அருச்சனை" என்னும் தருமங்களுக்காக வருஷம் ஒன்றுக்கு ரூ. 2500, செலவிடுகின்றார்கள். நன்செய் நிலம் ரூ. 14000-க்கு கிரய

சாசனம் வாங்கி வைத்திருக்கிறார்கள். குருபூசை மடம் ரூ. 50000, செலவிட்டுக் கட்டி வைத்திருக்கிறார்கள்.

மேற்படி "ராம. ஆத மெ. மெய்யப்ப செட்டியார் அவர்கள், ஆத. லெ. ஆத. சொக்கலிங்க செட்டியாரவர்கள், ஆத. பழ. சிதம்பர செட்டியாரவர்கள், பெரி. அழ. மு. முத்துக்கருப்ப செட்டியாரவர்கள்" என்பவர்களாகிய இந் நான்கு மகானுபாவர்களும், சைவசமயத்தை நிலைநிறுத்த வந்த சமய குரவர்களைப்போலத் திருக்களரைச் சிறப்பிக்க வந்த திருச்செல்வர்களானதால் இவர்களையே சாசுவத பஞ்சாயத்தார்களாக நியமிக்கும்படி எல்லாம் வல்ல இறைவன் கமிட்டியாரவர்களுக்கும், எண்டோமெண்ட் போர்டாரவர்களுக்கும், அருள் புரிவாராக.

## திருக்களர் விளக்கம்

### மூன்றும் பாகம்.

### முற்றிற்று.

கருணாநிதி (பில்டிங்ஸ்) பிரஸ்—விஜயபுரம் 33 gspm

மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும்
அவசியம் வாசிக்கவேண்டிய

# மாணிக்கப் புதையல்கள்

திருவாரூர்-மஹான் ஸ்ரீ குரு

## கருணையானந்த ஞானபூபதிகள்

திருவாய் மலர்ந்தருளிய

**வேதாந்த பாஸ்கரன்**

விளக்கமான (இரண்டாம் பதிப்பு) **3—0—0**

**ஞானக் களஞ்சியம்**

திருத்தமான (இரண்டாம் பதிப்பு) **3—0—0**

**ஞான யோக ரகசியம்**

(நூற்றுக்கணக்கான படங்களுடன்) **3—0—0**

மேற்கூறிய மூன்று புத்தகங்களும் ஏராளமான அப்பியாச
ஆப்டோன் படங்களுடன் கண்வணக்கவரும் அழகான சீர்மை
பட்டுக் காலிக்கோ பைண்டு செய்யப்பெற்றுள்ளது.

| | |
|---|---|
| அன்பே கடவுள் | **0—4—0** |
| சர்வமத சீவகாருண்யம் | **0—6—0** |
| அஷ்டாங்க யோகம் (படங்களுடன்) | **0—4—0** |
| நஹ்ஜுல் இஸ்லாம் | **0—4—0** |
| ஞானசூரியன் 3-வது வால்யம் | **1—8—0** |
| மாணிக்க வாசகர் (வசனம்) | **0—8—0** |

இன்னும் பலவித கீர்த்தனைப் புத்தகங்களும் கிடைக்கும்.
முன்பணம் அனுப்புவோர்களுக்கு மாத்திரம் சில
புத்தகங்கள் இனமாக அனுப்புவோம்.

**எம். ஏ. நாவலர் அண்டு சன்ஸ்,**
புத்தக வியாபாரிகள்,
விஜயபுரம் – திருவாரூர், S. I. R.
தஞ்சாவூர் ஜில்லா.

உ

சிவமயம்.

# திருக்களர் விளக்கம்.

## (நான்காம் பாகம்)

### காப்பு.

இந்தினிளம் பிறைமானுந் தனக்கோடு மிருமதமு
மிலங்கா நின்ற
தந்திவத னப்பெருமான் றண்கமல மலர்ப்பாதந்
தலைவ ழுத்திச்
சந்தமுற நெஞ்சிருத்தித் தலைச்சூடி நல்லறிவாஞ்
சவியைப் பெற்று
முந்தறிவோர் மொழிபொருளு மநுபவமுந் தலைப்பெய்து
மொழிகு வேமால்.

6828

## சிலாசாதனம் - கல்வெட்டு.

குலோத்துங்கசோழ தேவர், இராசராச தேவர், இராசேந்திர சோழ தேவர், குலசேகர தேவர், வல்லப தேவர், வீரவிருப்பண்ண உடையார், வீரபூபதி உடையார், விருப்பண்ண உடையார் என்னும் அரசர்பெருமக்கள் காலங்களில், கோவிலுக்குச் சொந்தமாகத் 'திருக்களர், வேங்கூர், திருச்சிற்றம்பலநல்லூர் (சீலத்தநல்லூர்), பெரும்பலமருதூர் (பெருவடமருதூர்), பஞ்சநதவாணநல்லூர் (சந்தணநல்லூர்),

பண்ணியூர், பரம்பைக்குடி (கரம்பைக்குடி), பள்ளிச்சந்தம், (மேலைப்பள்ளிச்சந்தம்—கீழைப்பள்ளிச்சந்தம்), செல்வப் பிள்ளையார் கோட்டகம் (செல்லப் பிள்ளையார் கோட்டகம்), என்னும் கிராமங்களில் சுமார் 300 வேலி நிலங்க ளிருந்த தாகச் சிலாசாதனங்களினுல் தெரியவருகின்றன. முற்காலத்திய திருப்பணியில் சில சிலாசாதனங்கள் மாறு பட்டும் சிதைவுற்று மிருந்தபடியால் 'குமாரமங்கலம்' குறுக்கை, சோழனுக்குநல்லூர் (சோலைக்குளம்), வேழைக்கார்நல்லூர், விளக்குடி' முதலிய கிராமங்களி லுள்ள நிலங்களின் விபரம் விளங்காமற் போயிற்று. மேற்கண்ட நிலங்களை எவ்வாருகவோ பலபேர்கள் கைப் பற்றிக்கொண்டுவிட்டார்கள். கவர்ன்மெண்டார் 1879-ம் வருஷத்தில் நடத்திய சர்வே கணக்கினுல் திருக்களர் கிராமத்தில் ஏகர் 118 செண்ட் 48-ம், திருச்சிற்றம்பல (சீலத்த) நல்லூர் கிராமத்தில் செண்ட் 24-ம், சோழனுக்கு நல்லூர் (சோலைக்குளம்) கிராமத்தில் செண்ட் 15-ம், வேழைக்கார்நல்லூர் கிராமத்தில் செண்ட் 20-ம், குமார மங்கலம் கிராமத்தில் ஏகர் 53 செண்ட் 33-ம், விளக்குடி கிராமத்தில் செண்ட் 67-ம், குறுக்கை கிராமத்தில் ஏகர் 10 செண்ட் 32-ம், இனும் கீழப்புத்தூர் கிராமத்தில் ஏகர் 1 செண்ட் 67-ம் ஆக நன்செய் புன்செய் ஏகர் 185 செண்ட் 6 மாத்திர மிருந்ததாகத் தெரியவருகின்றது.

## செப்பேட்டுச் சாதனம்—செப்புப்பட்டயம்.

மதுரையும், ஈழமுங், கருவூரும், பாண்டியன் முடித் தலையுங் கொண்டருளிய குலோத்துங்க சோழதேவர் காலத் தில் 'சிவலிங்கப்பெருமானுக்குத், திருக்கோளகை (கவசம்)க, திருவொதாரமாலை (பதினறு பொற்பூமாலை) க, திரு

வுத்தரியம் (போர்வை) க, திருப்பிறை க, திருவாசிகை க, திருவாசிகைப்புரி மத்தியில் பாம்பு க; அம்பாளுக்கு திருக்கன்ன புஷ்பம் ௲, திருப்பட்டிகைப் பலகை (மூலைக்கச்சு) க, பொற்பூ க, திருப்பட்டம் க, திருமங்கலநாண் சமதாலி கொக்குவாய் க, பள்ளியறை நாச்சியாருக்கு சிவதாலி சமமணி க, உற்சவருக்கு அபிஷேகம் (முழுக்கவசம்) க, திருவாரம் க, திருத்தோடு உ, உற்சவ அம்பாளுக்கு அபிஷேகம் (முழுக்கவசம்) க, திருவாரம் க, திருத்தோடு உ, திருவட்டமணிவடம் (உச மணிக்கோவை) க, திருவட்டமணிவடம் (௲ய மணிக்கோவை) க, திருவட்டமணிவடம் (சய மணிக்கோவை) உ, திருச்சிலம்பு உ; நிறைதவஞ் செய்த நாச்சியாராகிய தனி அம்பாளுக்கு அபிஷேகம் (முழுக்கவசம்) க, திருத்தாவடம் (சக மணிக்கோவை) க, திருநெற்றித்திரணை க, திருக்கைச்சரி (கைவளை) ச, திருத்தாலி (வெள்ளிக்காறையில் கோர்த்தது) க. திருத்தோடு உ, திருவாரம் க, சிரச்சக்கரம் க, திருக்கண்டாவளி உ, வெள்ளிமணி (௲௫) கோவை க, உடையார்க்குத் திருமஞ்சனத்துக்குச் சாத்துகிற திருவுத்தரியம் (போர்வை) க, என்பனவாகிய இலட்சம் பொன் பெறுமானமுடைய தங்கத் திருவாபரணங்களிருந்ததாகச் செப்பேட்டுச் சாதனத்தினால் தெரியவருகின்றது. அவையாவும் பராதீனமாகி அம்பாளுடைய திருமங்கலநாண் சமதாலி கொக்குவாய் வகையறுக் கோர்வைமாத்திர மிருந்தது; அதுவும் சென்ற 6—3—32-ல் திருட்டுப்போயிற்று.

## திருப்பணி—பாலாலயம்.

1884-ம் வருஷத்தில் திருப்பணி செய்யப்போவதாக பாலாலயம் செய்து, கோவிலின் சில பகுதிகளை இடித்துக் காடுமூடப் போட்டிருந்ததும்; இடித்துப்போடா

திருந்த பகுதிகள் வெடித்துச்சரிந்து விழுந்து கொண்டிருந்ததும்; தினம் காலை மாலை இரண்டு காலத்திற்கும் ஒருபடி அரிசி பொங்கிவைத்து மணி அடித்ததும்; பெரிய மேளம், சின்ன மேளம் வகையறு ஓய்ந்திருந்ததும்; தொன்றுதொட்டு நடந்துவந்த வழக்கப்படி 'சூரியோதயம், சூரியாஸ்தம்' என்னும் இரண்டு காலங்களிலும் மும்மூன்று தரம் சங்கத்தொனி செய்து 'நகரா முழக்கியதும்; கோவிலிற் பட்டைச்சாதமென்பதே இல்லாமற் போனதும்; 1898-ம்வருஷம் முதல் 1906-ம் வருஷம் வரையில் 'மு. சுவாமிநாத உபாத்தியாயர்' என்பவரால் தஞ்சாவூர் சர்க்கிள் தேவஸ்தானங் கமிட்டியாரவர்களுக்கு எண்ணிறந்த 'மகஜர், மனுக்கள்' எழுதியதும்; கோவிலின் நிலைமையை 'ஜனனுகூலன்' யதார்த்தவசனி, நீலலோசனி' முதலிய பத்திரிகைகளின் வாயிலாய் வெளிப்படுத்தியதும்; 1902-ம் வருஷத்தில் தலபுராணம், தேவாரம், செப்பேட்டுச்சாதனம், சிலாசாதனம், என்பவற்றைக் கண்டுபிடித்து புத்தகமாக்கி அச்சியற்றி வெளிப்படுத்தியதும்; அப் புத்தகங்களைக் கோவிலூரில் ஐந்தாங் குருமூர்த்தமா யெழுந்தருளியிருந்த ஸ்ரீ வீரசேகர மகாமுனிவரிடத்திலும், நகரம் வணிகக் கனதனச் செட்டிப்பிள்ளைகளிடத்திலும் கொடுத்து உலகமெங்கும் பரவச் செய்ததும்; மேற்கண்ட கமிட்டி மெம்பர்களாகிய P. R. நடேசஐயரவர்கள், V. A. வாண்டையாரவர்கள் K. திருவேங்கட முதலியாரவர்கள், சாம்பமூர்த்திராயரவர்கள் இந்த நான்கு மகானுபவர்களும் கிருபைகூர்ந்து, பூவனூர் இராசு முதலியாரவர்கள், களப்பாள் S. இரங்கசாமி முதலியாரவர்கள் என்பவர்களைப் பஞ்சாயத்தார்களாக நியமித்ததும்; முற்கூறிய ஸ்ரீ வீரசேகர மகாமுனிவர் இத்தலத்திற் கெழுந்தருளி வந்ததும்; மேற்படி இரண்டு பஞ்சாயத்தார்களையும் உதவியாக வைத்துக்கொண்டு

மேற்படி வீரசேகர மகாமுனிவர் திருப்பணி செய்து 1911-ம் வருஷம் மகா கும்பாபிஷேகஞ் செய்வித்து பிரமோற்சவம் நடத்தி, மகாரதத்தன்று சிவசாரூபம் பெற்றுத் திருக்கோயில் கொண்டு விளங்குவதும், சில வருஷங்கள் பிரமோற்சவம் முதலிய யாவும் சிறப்பாக நடந்துவந்ததும் யாவரு மறிவர்.

## சாசுவத பஞ்சாயத்தார்கள் அவசியம்.

1920-ம் வருஷம் முதல் 1933-ம் வருஷமாகிய இன்று வரையில் கோவிலைக் கவனித்துப் பரிபாலிப்பவர்கள் ஏற்படாமையால், மூன்று பிரமோற்சவங்கள் நடைபெறவில்லை. 'பெரிய வெள்ளி நாகாபரணக்குவளை, கைத்தீவட்டிகளுக்கு எண்ணெய் ஊற்றுகிற இரண்டு வெள்ளிப் புதுலிகள், வெள்ளி யிடபங்களினுடைய இரண்டு வெள்ளிப் புடுக்குகள், மேற்படி இடபங்களினுடைய இரண்டு வெள்ளி மணிகள், மேற்படி இடபங்களினுடைய எட்டுப் பதக்கங்கள், சின்ன வெள்ளி யிடபத்தினுடைய நெற்றிப்பட்டம், தேவியாருடைய 'திருமங்கலநாண் சமதாலி கொக்குவாய்' வகையறுக் கோர்வை' முதலியன காணுமற் போய்விட்டன; 'பசுமடம். திருநந்தனவனம், இருக்குவேத பாடசாலை, எசுர்வேத பாடசாலை, சாமவேத பாராயணம், குருபூசை மடம், குருபூசை மடத்துக் கீழவாரம், குருபூசை மடத்துக் கணக்கர் குடியிருப்பு மனைக்கட்டு, விபூதிமடத்து மனைக்கட்டு, ஆத. பழ. சித. பங்களா, முத்திமண்டபம்' என்பவற்றின் கீழ் நிலங்களுக்காகவும், விளக்குடித் தொன்னந் தோப்புக்காகவும் பரிவர்த்தனை செய்திருந்த நன்செய் நிலங்கள் பூராவும் முன் பாத்தியக்காரர்கள் பறிமுதல் செய்துகொண்டார்கள்; 'வசந்த மண்டபத்திற் கெதிரில் போட்டிருந்த பெரிய கீத்துக்கொட்டகை, பெரிய கோபுர வாயிலுக்கு

வெளியில் வடபுறமிருக்கின்ற வாகன மண்டபம், மேற்படி கோபுர வாயிலுக்குத் தென்புறமிருந்த விறகுவாடி ஓட்டுக் கொட்டகை, திருக்குளத்துத் தென்கரை வீதியில் தென் சிறகாயிருந்த குருக்கள் பரிசாரகர் வகையறு ஐந்து வீடுகள், தேர் நிலைகளுக்குத் தெற்கிலும் வடக்கிலுமிருக்கின்ற இரண்டு அலங்காரக் கட்டிடங்கள், மருதவனம் வீடு என்பன இடிந்து விழுந்தும், இடிந்து விழுந்துகொண்டுமிருக் கின்றன; அம்பாள் சந்நிதி வெளிமண்டபத்தில் ஒரு உத்திரம் வெடித்திருக்கின்றது; கோபுரத்திலும் மதில் களிலும் விருக்ஷங்கள் விருத்தியாகின்றன; மேற்படி விருக்ஷங்களை வேரோடு களைந்தெறியாத பட்சத்தில் வெடிப்பு உண்டாகுமென்பதிற் சந்தேகமில்லை; தெற்கு மதிலோரத் தில் வெளியிலிருக்கின்ற புளியமரம், மதிலை இடிக்க எத்தனப் படுகின்றது; தெற்கு மதிலுக்கும் 'பிரம தீர்த்தம்' என்னும் சிந்தாமணிக்கும் இடையில் படுகை 8 கெஜ அகலமும், மேலை மதிலுக்கும் 'உருத்திர தீர்த்தம்' என்னும் தாமரைக் குளத்துக்கும் இடையில் படுகை 4 கெஜ அகலமும், வடக்கு மதிலுக்கும் ஞான தீர்த்தத்துக்கும் இடையில் படுகை 3 கெஜ அகலமு மிருக்கின்றன; தெற்கு மதிலுக்கும் பிரம தீர்த்தத்துக்கும் இடையில் படுகை 8 கெஜம் அகலமிருப்பது போல, மேலை மதிலுக்கும் உருத்திர தீர்த்தத்துக்கும் இடை யில் 8 கெஜ அகலமும், வடக்கு மதிலுக்கும் ஞான தீர்த்தத்துக்கும் இடையில் 8 கெஜ அகலமும், படுகை ஏற் படுத்தாத பட்சத்தில் மேலை மதில், வடக்கு மதில் என்ப வற்றிற்கு அபாய நேரிடுமென்பதிற் சந்தேகமில்லை; தெற்கு, மேற்கு, வடக்கு' மூன்று மதில்களிலு மிருக்கின்ற 6 சல தாரைகளும் படுகைகளை யிடித்துக்கொண்டுபோய் மேற்படி தீர்த்தங்களிற் சேர்க்கின்றன; மேற்படி சலதாரைகளுக்குக் குழாய்கள்போட்டுக் கொண்டுபோய் மேற்படி தீர்த்தங்

களில் விடாதபட்சத்தில், மதில்களுக்கு அபாயமுண்டாகும் என்பதிற் சந்தேகமில்லை; சுற்றிலும் 8 கெஜத்துக்குக் குறையாமல் படுகைகளை உண்டுபண்ணித், தீர்த்தங்களின் ஓரமாகச் சுற்றிலும் ஒருபத்தி தென்னம்பிள்ளைகள் வைத்து விருத்திசெய்யும்பட்சத்தில், படுகைகள் கரைந்துபோகாமலும் மதில்களுக்குக் கெடுதியுண்டாகாமலும் அழகாயிருக்கும்; சந்நிதியிலிருக்கிற 'துருவாச தீர்த்தம்' பாய்வாய்க்காலும், வடிவாய்க்காலு மில்லாமையால் பச்சிலைச்சாறுபோல் இருக்கிறது; 'பிரம தீர்த்தம்' உமிபோன்ற பாசியால் மூடப்பெற்றிருக்கிறது; 'உருத்திர தீர்த்தம், ஞான தீர்த்தம்' என்பன 'சாணி, மூத்திரம்' முதலிய அசுத்த வஸ்துக்களால் நிரப்பப்படுகின்றன; தேர் நிலைகளில் அநேகம் பழுதுகளுண்டாகி யிருக்கின்றன; தேர்களின் பெரும் பகுதிகளை மழையும் வெய்யிலும் பாதுகாக்கின்றன. தேர் நிலைகளுக்கும் தேர்களுக்கும் இடையிலுள்ள வெளிகளெல்லாம் கக்கூஸ்களாக உபயோகப்படுகின்றன; கீழ வீதியில் ஒழுங்கீனமாகப் பல குடிசை குச்சுகளும், ஒரு குட்டிச்சுவரும் உண்டாகியிருக்கின்றன; மற்றைய வீதிகளில் ஒழுங்கீனமாகப் பல வீடுகள் முன் வந்திருக்கின்றன; 'பிரம தீர்த்தம், உருத்திர தீர்த்தம், ஞான தீர்த்தம்' இம்மூன்றும் வீதிகளை யிடிக்கின்றன; வீதிகளில் இரண்டு பக்கங்களிலும் தென்னம்பிள்ளைகள் இழந்துபோனவிடங்கள் பாழாயிருக்கின்றன; 20 ஏரைக்கொண்டு சாகுபடி செய்யவேண்டிய நன்செய் நிலங்கள் கிராம வழக்கத்துக்கு விரோதமாக 30 ஏரைக்கொண்டு சாகுபடி செய்யப்படுகின்றன; புன்செய் நிலங்களெல்லாம் பாழாய்க் கிடக்கின்றன; கா. சிவகாமி நாடார் பரிவர்த்தனை நிலம் முன் பாத்தியத்திற் போய்விட்ட பிறகும் கோவிலுக்குச் சொந்தமான ரூ. 1000 பெறுமானமுள்ள விளக்குடித் தென்னந் தோப்பை

அகாரணமாக அனுபவித்துக்கொள்கின்றார்; இருக்குவேத பாடசாலை தருமகருத்தா வெ. ராம. வெ. வெங்கடாசலஞ் செட்டியார் என்பவர், தன்னுடைய ரூ 1300 பெறுமானமுள்ள நன்செய் ஏகர் 4 செண்ட் 8-க்குப் பதிலாகக் கோவிலுக்குச் சொந்தமான ரூ 4005 பெறுமானமுள்ள நன்செய் ஏகர் 5 செண்ட் 48 நிலத்தை அகாரணமாக அனுபவித்துக் கொள்கின்றார்; கோவில் விசாரிப்பு அமிர்தங் கண்ட பிள்ளை வகையறாப் பேர்கள் எவ்வித காரணமுமில்லாமல் தங்களுக்குச்சொந்தமான ரூ. 423-க்குக் கிரையம் வாங்கிய நன்செய் ஏகர் 1 செண்ட் 41-க்குப் பதிலாக கோவிலுக்குச் சொந்தமான ரூ. 1692 பெறுமானமுள்ள நன்செய் ஏகர் 1 செண்ட் 88 நிலத்தைக் கைப்பற்றிக் கொண்டு அதில் ஏகர் 1 செண்ட் 10 நிலத்தை ரூ. 660-க்கு குப்புசாமிக் காலிங்கராயரிடத்தில் கிரயசாசனஞ் செய்து கொடுத்துவிட்டு பாக்கி செண்ட் 78 நிலத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்; மார்கழித் திருவாதிரை அபிஷேகத்திற்காக மண்ணுகொண்டான் கிராமத்தில் 'சாமிநாத ஞானியார், சிதம்பர சபாபதிபிள்ளை' என்பவர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற நன்செய் ஏகர் 3 செண்ட் 34 நிலத்தை பென்ஷன் சப்ரிஜிஸ்டரார் இராமகிருஷ்ண பிள்ளை என்பவர் மேற்படி அபிஷேகத்தை நிறுத்திவிட்டு அனுபவித்துக் கொள்கின்றார்.

கோவில் விசாரணை பார்க்க வருகின்ற பஞ்சாயத்தார்கள் மூன்றுவருஷ முடிவில் பஞ்சாயத்து மாறுதலடைவதை யுத்தேசித்து, மேற்கண்ட நஷ்டங்களையும் திருத்தங்களையும் கவனிக்காமல், மனம்போல் விசாரணையை நடத்தி மூன்றாவது வருஷ முடிவில் கணக்குகளைக்கூட ஒப்புவிக்காமல் மௌனஞ்சாதித்து விடுகின்றார்கள். இக்கோவிலில்

தருமசம்பந்தமில்லாதவர்களைப் பஞ்சாயத்தார்களாக நியமித்த காரணத்தினால் மேற்கண்ட நஷ்டங்களும் திருத்த வேண்டியவைகளும் ஏற்பட்டன. இக்கோவில் பஞ்சாயத்துக்கு வருகின்றவர்களுக்குப் 'பெரியோர்களுடைய சிநேகம், பிரபுக்களுடைய சிநேகம்' என்னும் பெருமைகளும்; 'பொருள் வசூல் செய்துகொள்ளுதல், கடன் வாங்குதல்,' என்னும் சுயநலங்களு மிருக்கின்றன. இக்கோவிலில் தருமசம்பந்தமில்லாதவர்கள் 'பெருமையையும், சுயநலத்தையுங்' கருதிப் பஞ்சாயத்துக்குவர முயற்சிசெய்கின்றார்கள். பஞ்சாயத்துக் கிடைத்தவுடன் கோவில் சம்பளத்தில் தமக்கு பிரதிநிதி நியமித்து விட்டு, வந்த காரியத்தைப் பார்ப்பதோடு மேற்படி பிரதிநிதியைக்கொண்டு தம் சொந்தக்காரியத்தையும் பூர்த்திசெய்து கொள்ளுகின்றார்கள். மேற்படி பிரதிநிதியோ தேவேந்திரபதவி வகித்திருப்பதாக நினைத்து 'கண்டதே காட்சி, கொண்டதே கோலமாக' மேற்கண்டபடி நாளடைவிலே பலவித நஷ்டங்களையும் உண்டுபண்ணுகின்றார். இக்கோவிலில் தருமசம்பந்தமில்லாதவர்களைப் பஞ்சாயத்தார்களாக நியமிப்பதைவிட இக்கோவிலுக்கு விரோதம் வேறொன்றுமில்லை. இக்கோவிலில் தருமசம்பந்தமில்லாதவர்களைப் பஞ்சாயத்தார்களாக நியமித்து, அவர்களிடத்தில் கோவிலை ஒப்புவிப்பதானது, அருமையாகப் பெற்றுவளர்த்த அருந்தவப் புதல்வனை, மகப்பேறென்பதே யறியாத 'மலடி' கையிற்கொடுத்து வளர்க்கச்சொன்னதுபோலாகும். இக்கோவிலினிடத்தில் அபிமானமில்லாத கனவான்களுக்குப் பஞ்சாயத்துக்கொடுத்து கோவிலை ஒப்புவிப்பது, வளர்த்த கிளியைப் பூனையினிடத்தில் ஒப்புவிப்பது போலவும்; தருமம்வைத்து நடத்தாத பிரபுக்களுக்குப் பஞ்சாயத்துக்கொடுத்து கோவிலை ஒப்புவிப்பது, அழகாகக் கட்டிய பூமாலையை குரங்கினிடத்தில் ஒப்புவிப்பது

போலவும் ஆகும். கோவில் விசாரணையை நேரேபார்க்காமல் பவர்ப்பிரதிநிதியைக்கொண்டு பார்க்கச்செய்வது, ஆட்டு மந்தையை இடையன் நேரேபார்க்காமல் நரியைப் பார்க்கச்செய்ததுபோலாகும். ஆனதால் இக்கோவிலினிடத்தில் மிக்க அபிமானமும், பெரிய அன்புமுடையவர்களாய் "பசுமடம், திருநந்தனவனம், குழித்தளிகைக் கட்டளை, பிரமோற்சவம் எட்டாந் திருவிழா 'கைலாச பர்வதம், குதிரைவாகனம்' 'மண்டபப்படி' முதலிய தருமங்களும்; 'குருபூசைமடம், தேவாரபாராயணம், பிரமோற்சவம் ஆறாந் திருவிழா 'கற்பகவிருட்சம், காமதேனு மண்டபப்படி" முதலிய தருமங்களும்; "எசுர்வேத பாடசாலை, பிரமோற்சவம் நான்காந் திருவிழா "நந்தி, அன்னம்" மண்டபப்படி முதலிய தருமங்களும் வைத்துப் 'பக்தி, சிரத்தை' நிரம்ப ஆரம்ப காலமுதல் இன்றுவரையில் 'இலட்சம், இலட்சம், இலட்சமாக' செலவிட்டு நடத்தி வருகின்றவர்களும்; உலகமுள்ளளவும் பரம்பரையாக எத்தனையோ இலட்சம் செலவிட்டு நடத்தப்போகின்றவர்களும் ஆகியகுருபூசைமடம் வகையறு தருமகர்த்தா பாகனேரி பெரி. அழ. மு. முத்துக்கருப்ப செட்டியாரவர்கள் (1), பசுமடம் வகையறு தருமகர்த்தாக்கள் காரைக்குடி ராம. ஆத. மெ. மெய்யப்ப செட்டியாரவர்கள் (2), மேற்படி காரைக்குடி ஆத. லெ. ஆத. சொக்கலிங்க செட்டியாரவர்கள் (3), எசுர்வேத பாடசாலை வகையறு தருமகர்த்தா காரைக்குடி ஆத. பழ. சிதம்பர செட்டியாரவர்கள் (4), இம்மகானுபவர்களை சாசுவத பஞ்சாயத்தார்களாக நியமிக்கவேண்டுமென்று 'டைப்' அடித்து 24-1-33-ல் எண்டோமெண்ட் போர்டார் அவர்களுக்கும், தஞ்சாவூர் ஜில்லா எண்டோமெண்ட் போர்டு கமிஷனர் அவர்களுக்கும், தஞ்சாவூர் சர்க்கிள் தேவஸ்தானம் கமிட்டியாரவர்களுக்கும் அனுப்பப்பட்

டிருக்கின்றன. அன்றியும் 'திருக்களர் விளக்கம்' என்னும் புத்தகத்தில் 49-ம் பக்கத்திலும் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இதனுடன் முன்னே இருக்கின்ற "திருக்களர் விளக்கம் இரண்டாம்பாகம், திருக்களர் விளக்கம் மூன்றாம்பாகம்" என்பவற்றிலும் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. ஒரு சமயத்தில் மேற்படி முத்துக்கருப்ப செட்டியாரவர்களிடத்தில் இரண்டு செட்டிப் பிள்ளைகள்போய் பஞ்சாயத்து ஒப்புக்கொள்ளும்படி சொன்னதாயும், அதற்கு அவர் மூவருஞ் சேர்ந்து ஒரு பண்டுவைத்து நடத்துவதாயிருந்தால் ஒப்புக்கொள்வதாகச் சொன்னதாயும், அதற்கு இரண்டு செட்டிப் பிள்ளைகளும் பதில் சொல்லாமல் வந்து விட்டதாயும் ஏற்கனவே ஒரு வதந்தியுண்டாயிற்று. வேறொரு சமயத்தில் மேற்படி மெய்யப்ப செட்டியாரவர்களைப் பஞ்சாயத்து ஒப்புக்கொள்ளச் சொன்னதாயும், அதற்கு அவர் தம்முடைய தகப்பனார் 'பினாங்கு, சிங்கப்பூர்' வகையறாத் தீவுகளுக்குப் போய்ச் சம்பாதித்த பணத்துக்கு வாங்கியிருக்கும் நிலத்தைத் தம்மிடத்தில் ஒப்புவித்து விடுகிறபட்சத்தில் பஞ்சாயத்து ஒப்புக்கொண்டு கோவிலை விமரிசையாக நடத்துவதாயும் சொன்னதாகக் கேள்வி. மேற்படி நான்கு தரும கர்த்தாக்களும் இக்கோவிலினிடத்தில் மிக்க அபிமானமும், பேரன்பும், பெரும்பக்தியும், அளவுகடந்த சிரத்தையுமுடையவர்களா யிருத்தலினால் இவர்களையே பஞ்சாயத்தார்களாக நியமிப்பது இக்கோவிலுக்கு எக்காலமும் நற்காலமேயாகும். இவர்களைவிடப் பக்திசிரத்தையோடு இக்கோவிலைக் கவனிப்பவர்கள் இல்லவேயில்லை. இக்கோவிலை ஒப்புக்கொண்டு சரியான முறையில் நடத்தும்பட்சத்தில் கைப்பொறுப்பு வரவே வராது; மிகுதியான வரும்படி வரக்கூடும்; அவ்வரும்படியில் ஒரு பண்டும் வைக்க மார்க்கமுண்டு; இதனை இதனடுத்த முற்பகுதியிலிருக்கும் திருக்களர்

விளக்கம் மூன்றாம்பாகத்தில் விரிவாய்க்காணலாம். மேற்படி நான்கு தருமகர்த்தா அவர்களும், தஞ்சாவூர் சர்க்கிள் தேவஸ்தானம் கமிட்டியாரவர்களும், எண்டோமென்ட் போர்டாரவர்களும் திருக்களர்க் கோவிலின் நிலைமையை நன்குணர்ந்து சீர்திருத்தஞ் செய்யும் பொருட்டு 'திருக்களர் விளக்கம் முதற்பாகம், திருக்களர் விளக்கம் இரண்டாம் பாகம், திருக்களர் விளக்கம் மூன்றாம்பாகம், திருக்களர் விளக்கம் நான்காம்பாகம்' என்பன அச்சியற்றி வெளிப் படுத்தியதே யன்றி, வேறு எக்காரணத்தை முன்னிட்டும் வெளிப்படுத்தியதல்ல. இந்த நிலைமையில் 'பஞ்சாயத்தா ரவர்களுடைய பிரதிநிதியும், மேற்கண்ட நஷ்டங்களுக் கெல்லாம் காரணகர்த்தாவுமாகிய கிருஷ்ணசாமி ஐயர் (1), அவருடைய மந்திரத் தலைவரும் சேனைத்தலைவருமாகிய கோவில் விசாரிப்பு அமிர்தங்கண்ட பிள்ளை (2), அறிவிற் சிறந்தவராகத் தன்னைத்தானே மதித்திருக்கின்ற சுப்பிரமணியபிள்ளை (3), தந்திரத்திற் சிறந்தவராகத்தன்னைத் தானே மதித்திருக்கின்ற சண்முகசுந்தரஞ் செட்டியார் (4), இந்நான்கு போர்வீரர்களும் சுயலாபங்கருதி, கோவில் நன்னிலைமைக்கு வாராமலிருக்கும்பொருட்டு, பெருங்கிளர்ச்சி யும், கலகமுஞ்செய்கின்றார்கள். இவர்களில் இருவர் கோவில் அன்னத்தையும், ஒருவர் "கோவில், திருநந்தனவனம்" என்பவற்றின் அன்னத்தையும், மற்றொருவர் குருபூசை நடத்து அன்னத்தையும் புசிக்கின்றவர்கள். மேற்கண்ட நான்கு தருமகர்த்தாக்களையும், பஞ்சாயத்து ஒப்புக் கொள்ளும்படி மன்றாடிக் கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டவர்களாயிருந்தும், அங்ஙனம் செய்யாமல் தடைசெய்யக் கிளர்ச்சிசெய்வதால், இவர்களிடத்தில் பெருஞ்சூட்சிக ளிருக்கின்றன வென்பதும், அச்சூட்சிகள் வெளிப்படா திருக்கும் பொருட்டு கிளர்ச்சி செய்கின்றார்களென்பதும்

அறிவாளிகளுக்கு விளங்காமற்போகாது. இவர்களுடைய பொறுமைக்கு ஆண்டவராகிய வீரசேகர மகாமுனிவரும், தபோநிதியாகிய துருவாச மகாமுனிவரும், அடியார்களுக்கு அமுதளிக்கும் அமுதவல்லியம்பாளும், சச்சிதானந்த தாண்டவமூர்த்தியாகிய சபாநாயகப் பெருமானும் இன்னருள் பாலிப்பார்களாக.

## தற்கால பஞ்சாயத்தார்.

க. வீ. சொ. வீ. அழகப்ப செட்டியார் அவர்கள் பஞ்சாயத்தில் அகப்பட்ட 'மடாலயம், சிவாலயம், என்பவற்றின் சம்பந்தமாக 'மெய்வேடம்பூண்ட ஞானசிரியர், ஆதிசைவராகிய சிவபூசகர், திருத்தொண்டராகிய சிவனடியார்' என்பவர்களோடு விவகாரமாடி வெற்றிபெறவேண்டுமென்ற திருநோக்கம் பெரிதுமுடைய பேரறிவும், பெரும் புகழு முடையவர்.

'பஞ்சநதிக்குளம்' என்னும் ஊரிலே, வழிவழி அகம்படித் தொண்டு பூண்டொழுகும் ஒழுக்கத்திற் சிறந்த பரம்பரைச்சைவ அகம்படியர் மரபிலே திருவருளே திருமேனியாகத் திருவவதாரஞ்செய்து; (தாய் தந்தையர்களிடத்தில் கோபித்துக் கொண்டு துறவடைதல், மனைவிமைந்தர்களிடத்தில் கோபித்துக்கொண்டு துறவியாதல், ஐவேஜியின்மையால் துறவு பூண்டுகொள்ளுதல், பொருள் சம்பாதிக்கச் சக்தியின்மையால் துறவெய்தல், கடனை மோசஞ்செய்யும்பொருட்டுத் துறவியாகுதல், செய்யத்தகாத காரியஞ்செய்துவிட்டுத் துறவியாய் வருதல் முதலிய பொய்த்துற வடையாமல்) மெய்த்தவ வேடமாகிய 'புறத்துறவு, அகத்துறவு' என்னும் இருவகைத் துறவினையும் ஏக காலத்திலடைந்து, கோவிலூர்ப் பரம்பரையில்

ஞானசாஸ்திரங்களை ஓதியுணர்ந்து, சிதம்பரம் ஸ்ரீமத் பொன்னம்பல ஞானதேசிக சுவாமிகளுடைய மடாலயத்தில் குருமூர்த்தமா யெழுந்தருளியிருந்து, ஞா ன சிரியராய் விளங்கிய **ஸ்ரீமத் பரஞ்சோதி ஞானதேசிக சுவாமிகளோடு** முற்கூறிய க. வீ. சொ. வீ. அழகப்ப செட்டியாரவர்கள் அம்மடாலயத்தின் பஞ்சாயத்து வகித்து பெருத்த விவகார மாடினார். அவ்விவகார முடிவிற்குள் மேற்படி பரஞ்சோதி ஞானதேசிக சுவாமிகள் பரிபூரணமடைந்துவிட்டார்கள். செட்டியாரவர்களுக்கு வெற்றியுண்டாயிற்று. சுவாமிகளுக்கு உதவிசெய்த தவசிப்பிள்ளைக்கு சபாநாயகப்பெருமான் அருள்புரிவாராக.

திருநெல்வாயில் (சிவபுரி) சிவதலமானது நீண்ட காலமாக ஆதிசைவர்களாகிய பூசகர்களுக்குப் பரம்பரை ஸ்தானீகப்பாத்திய முடையது. 1907-ம் ஹு ஜனவரி-மீ 9உ ஒரு செட்டில்மெண்டு பத்திரம் பிறந்திருக்கிறது. அந்தப் பத்திரத்தில் காரைக்குடி பெரி. க. பழனியப்ப செட்டியார் அவர்கள் குமாரர் சுப்பிரமணிய செட்டியார் அவர்கள் (1), மேற்படியூர் சின்னையா செட்டியாரவர்கள் குமாரர் பழனியப்ப செட்டியாரவர்கள் (2), கோட்டையூர் க. வீ. சொ. வீரப்ப செட்டியாரவர்கள் (3), மேற்படியூர் க. வீ. மு. ப. கதிரேசன் செட்டியாரவர்கள் (4), இவர்கள் மேற்படி கோவிலுக்குச் சொந்தமான சொத்துக்களில் A. அடையாளமிட்ட சொத்துக்களை அனுபவித்துக் கொண்டு 'திருப்பணி, நித்திய நைமித்திகங்கள்' முதலிய வற்றை பரம்பரையாய் நடத்திவரவேண்டியதெனவும்; மேற்படி கோவிற் பூசகர்கள், அண்ணுக் குருக்கள் குமாரர் சாமிக் குருக்கள் (1), நாகசாமிக் குருக்கள் குமாரர் ஏகாம்பரக் குருக்கள் (2), இவர்கள் மேற்படி கோவிலுக்குச் சொந்தமான சொத்துக்களில் B. அடையாள மிட்ட

சொத்துக்களை அனுபவித்துக்கொண்டு 'நித்திய நைமித்திகங்கள்' முதலியவற்றை காலாகாலத்தில் தவறாமல் பரம்பரையாய் சப்பளம் பெறாமல் நடத்திவரவேண்டிய தெனவும் கண்டிருக்கிறது. B. அடையாளமிட்ட சொத்துக்கள் தற்காலம் பரம்பரை ஸ்தானீகப் பாத்தியமும், டிரஸ்டி பாத்தியமு முடையவராயிருக்கும் சி. க. ராம. இராமசுவாமிக் குருக்கள் அவர்களுடைய முன்னோர்களி லொருவராகிய முத்துசுவாமிக் குருக்கள் அவர்களால் ஸ்ரீ உச்சிநாதசுவாமி பெயருக்கு எழுதிவைக்கப்பட்டதாம். மேற்கண்ட க. வீ. சொ. வீ. அழகப்ப செட்டியாரவர்கள் மேற்படி இராம சுவாமிக் குருக்கள் அவர்கள் தகப்பனார் கந்தசுவாமிக் குருக்கள் அவர்கள்பேரில் கோர்ட்டில் நடவடிக்கை நடத்தி வாபீஸ் வாங்கிக்கொண்டாராம். மேற்படி க. வீ. சொ. வீ. அழகப்ப செட்டியாரவர்கள் (1), மேற்படி க. வீ. மு. ப. கதிரேசன் செட்டியாரவர்கள் (2), காரைக்குடி முத்து. கரு. அருணாசலஞ் செட்டியாரவர்கள் (3) இவர்கள் தலா ரூ. 25000 வீதம் சேர்த்து ரூ. 75000ம் பண்டுவைத்து, அந்தப் பண்டின் வட்டி முதல் தொகையைக்கொண்டு 1922-ம் வருஷ முதல் 1928-ம்வருஷ வரையில் திருப்பணிசெய்து, விபவவருஷ வைகாசி-மீ 11உ குருவாரம் பூசநட்சத்திரங்கூடிய சுபதினத்தில் அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேகம் செய்வித்தார்கள். இந்த நிலையில் மேற்படி க. வீ. சொ. வீ. அழகப்ப செட்டியாரவர்கள் தான் ஏகதேசத்தில் மூன்று லட்சம் ரூபாய் செலவுசெய்து திருப்பணி செய்திருப்பதாகவும்; தனக்குச் சாசுவத டிரஸ்டி பாத்தியம் தரவேண்டுமெனவும் எண்டோமெண்ட் போர்டாரவர்களைக் கேட்டிருப்பதாகத் தெரியவருகிறது. ஆனால் கோவிலைப் பார்ப்பவர்களுக்கு உண்மை நன்கு புலப்படாமற்போகாது. இது ஒருபுறமிருக்க மேற்படி சி. க. ராம. இராமசாமிக் குருக்கள் அவர்களை

பரம்பரை ஸ்தானீக பாத்தியம், டிரஸ்டிபாத்தியம் என்பவற்றினின்று அகாரணமாக விலக்கவேண்டியதற்காக நடவடிக்கைகள் நடத்துகின்றதாகத் தெரியவருகிறது. இது நிற்க, மேற்படி அழகப்ப செட்டியாரவர்களுக்கு இவ்வூரில் ஒரு ரொக்கக்கடை யிருக்கிறது. அந்தக்கடையில் பற்று வரவு செய்தவர்கள்பேரிலும் பல நடவடிக்கைகள் நடக்கின்றன. மேற்படி நடவடிக்கைகள் எல்லாவற்றையும் நடத்த வேண்டியதற்கு ஒரு பிரதிநிதி அவசியம்.

மேற்படி க. வீ. சொ. வீ. அழகப்பசெட்டியாரவர்கள் திருக்களர் கோவில் பஞ்சாயத்துப்பதவியை ஏற்றுக்கொண்ட பின்பு குமாரமங்கலம் கிராமத்திலிருந்த கோவிலுக்குச் சொந்தமான பனைமரங்கள் வெட்டுதல்; திருக்களரில் சுவாமியம்பாள் தேர்முட்டிகளினிடையில் அத்தேர்முட்டிகளுக்கு அபாயம் நேரிடும்படி 'அறுப்புக்குழி' வெட்டி வைத்தல்; இடிந்துபோன கட்டிடங்களின் மரங்களை கோவிலுக்குச் சம்பந்தமில்லாத வேறோரிடத்தில் 'ஓட்டுக் கொட்டகை' அமைப்பித்தல்; அத்திவெட்டிப் பெரியாண்டவர் கோவிலில் 'சத்தியம்' வாங்குதல்; அமுதவல்லியம்பாளுடைய 'தாலி' அறுத்தல்; கீழவீதியில் 'குட்டிச்சுவர்' அமைப்பித்தல்; அமுதவல்லியம்பாளுக்கு 'சிறுதாலி' சாத்துதல்; ஸ்ரீமுக சித்திரை 'பிரமோற்சவம்' நிறுத்தல்; சுவாமி சந்நிதிக்குள்ளிருந்த 'துற்கையம்பாள்' அம்பாள் சந்நிதி ஓட்டைமண்டபத்திற் குடிபுகுதல்; பிளீடர்களிடத்தில் 'திருக்களர் விளக்கம்' காண்பித்தல்; திருக்களர், திருநெல்வாயில் என்பவற்றிற்குப் 'பஞ்சாயத்துப் பவர்ப்பிரதிநிதி' சிதம்பரம் சப்ரிஜிஸ்டரார் அவர்கள் திருமுன்னிலையில் நியமித்தல்; திருநெல்வாயிலுக்கும், திருக்களருக்கும் 'பஞ்சாயத்துப் பவர்ப்பிரதிநிதி' பவனி போய்வருதல்; பரிசாரகர் கிருஷ்ணையர் வீட்டு வாயிற்படியில் 'மலமுட்டி'

சமர்ப்பித்தல்; மேற்படி மலமுட்டி போட்டதற்குப் பரிகாரமாக நான்கு வீதிகளிலும் 'அமிர்தங்கண்ட பிள்ளை முருகைய தொண்டைமான்' என்பவர்கள் அதிரதர்களாய் முன்னே தலையாகவும்; பொன்னன்சாம்பான் அர்த்தரதனைப் பின்னே வாலாகவும்; பள்ளர்கள் சமரதர்களாய் "இடம், வலம்" என்னும் இரண்டு சிறகுகளாகவும்; இடக்கையிற் சாணிச் சட்டியாகிய கேடயமும், வலக்கையில் விளக்கு மாறாகிய தண்டாயுதமு முடையவளாய் தன்னுயகனாகிய காக்கையன் சாம்பானோடு மகாரதர்களாய் மத்தியில் உடலாகவும் விளங்க 'கருடயூகமாக' அணிவகுத்து, சூரபன்மாதியர்கள் சுப்பிரமணியக் கடவுளோடு போர்புரிந்தது போலவும்; இராவணாதியர்கள் இராமபிரானோடு போர்புரிந்ததுபோலவும்; 'காமாதுரவாய்ப் போர்ப்பறை' நிகழ்த்திப் போர்செய்தல்; தெற்குமதிலுக்குத் தென்புறமிருக்கும் 8-கெஜ அகலப் படுகையைப்போல் மேலை மதிலுக்கு மேல்புறமும், வடக்கு மதிலுக்கு வடபுறமும், படுகை உண்டுபண்ணவேண்டியதற்காக, மேல்புறம் 4-கெஜ அகலமும் வடபுறம் 5-கெஜ அகலமும் அணைக்கவேண்டியதற்கு எற்ற வசதியாயிருந்த பிரம தீர்த்தம் பொருக்குமண்ணை, அவ்விதம் அணைக்காமலும், மேற்படி தீர்த்தத்தின் தென்கரையில் வீதியிலிருக்கின்ற தென்னைமரங்கள் அத்தீர்த்தத்தில் விழாமலிருப்பதற்கேற்றபடி உதாரமாக மண் அணைக்காமலும், மேற்படி தீர்த்தத்தின் வடகிழக்கிலிருக்கின்ற அறுத்தோடிப் பழுதுக்குத்தக்கபடி மண் அணைக்காமலும், மேற்படி தீர்த்தத்தை வெட்டுவதற்கு திருநந்தனவனம் தருமகர்த்தாக்கள் அவர்களும், முத்தி மண்டபம் தருமகர்த்தா அவர்களும் கொடுத்துதவிய ரூபாய் ஐம்பதையும் உபயோகப்படுத்திக் கோவில் நிலமல்லாத வேற்று நிலங்களில் சுமார் 5000 வண்டிப் பொருக்கு வரையில் அள்ளிக்கொண்டுபோய்ப் போடுவித்தல்; கோவிலுக்குச் சொந்தமான பரிவர்த்தனை நிலத்தை

சேஷாத்திரி ஐயங்கார் வசப்படுத்திக் கொள்வதற்கு ஒற்றுமையாயிருத்தல்; மு. சுவாமிநாத உபாத்தியாயர் என்பவர் 'திருக்களர் விளக்கம்'' என்னும் புத்தகத்தை வெளிப்படுத்தியதற்காகவும்; 'திருக்களர் விக்கம் இரண்டாம் பாகம், திருக்களர் விளக்கம் மூன்றும்பாகம், திருக்களர் விளக்கம் நான்காம்பாகம்' என்பவற்றை வெளிப்படுத்துவதற்காகவும், தெற்குமதிலுக்குத் தெற்கில் 8-கெஜம் தூரத்தில் மேற்படி சுவாமிநாத உபாத்தியாயருக்குச் சொந்தமாயிருந்த 'வேலியை'ப் பஞ்சாயத்துப் பவர்ப்பிரதிநிதியாகிய கோவிற் சக்கரவர்த்தி கிருஷ்ணசாமி ஐயருடைய ஆர்டரின் பேரில் சேனாதிபதிகளாகிய 'அமிர்தங்கண்ட பிள்ளை, முருகைய தொண்டைமான்' என்பவர்கள், தங்களுடைய காலாட் படைகளாகிய பயனீர்ப்பட்டாளத்தை 'அர்த்த சந்திரயூகங்களாக' அணிவகுத்து, இராமபிரானைக்கொல்லும் பொருட்டு, போர்க்களத்திற்குச் சென்ற இராவணனுடைய மூலபலங்கள் அவ்விராமபிரானுடைய மோகனாஸ்திரம் பட்டமாத்திரத்தில் "அந்தா வந்தான் ராமன்! இந்தா வந்தான் ராமன்!! என்று ஒருவரையொருவர் வெட்டி வீழ்த்தியதுபோல வெட்டிவீழ்த்தல்; மேற்படி வேலியை வெட்டியதற்குப் பரிகாரமாக (வீதிகளில் குழிகள் வெட்டித் தென்னம் பிள்ளைகள் வைத்து, கூண்டுகள் கட்டி, முந்நூறு பிள்ளைகள் வரையில் விருத்தி செய்யக்கூடியதைக் கவனிக்காமல்) பிரமதீர்த்தக்கரையில் ஓரமாகப் பத்துத் தென்னம் பிள்ளைகள் வைக்கக்கூடிய விடத்தில் குழி 15-ம், தென்னம் பிள்ளைகள் வைக்கக் கூடாத களர்மண்ணும் கருங்கற் செங்கற் சல்லிகளும் நிறைந்த விடத்தில் தெற்குமதிலுக் கிடையூறுண்டாகும்படி குழி 35-ம் ஆகக் குழி 50 வெட்டி வேலியடைத்தல்; வாகனமண்டபம் இடித்தல் என்னும் அற்புதத் திருவிழாக்கள் நடந்தன. அவற்றுள்,

அமுதவல்லியம்பாளுடைய ரூ. 500 பெறுமானமுள்ள பெருந்தாலிக் கோர்வை வகையரு திருட்டுப்போனதற்குப் பதிலாகத் திருடர்களிடத்தில் அத்திவெட்டிப் பெரியாண்டவர் கோவிலில் சத்தியம்வாங்கிய பின்பு அத்திருடர்கள் கொடுத்த ரூ. 100-க்குச் சிறுதாலி செய்துவைத்த வகையில் ரூ. 400, ஸ்ரீமுக சித்திரைப் பிரமோற்சவத்தை நிறுத்திய வகையில் ரூ. 1480, பரிவர்த்தனை நிலங்களைச் சேஷாத்திரி ஐயங்கார் நிராக்ஷேபனையாக வசப்படுத்திக்கொண்டு போன வகையில் ரூ. 3800 ஆக இனம் மூன்றுக்கு ரூ. 5680 கோவிலுக்கு நஷ்டம்.

இவ்வூரில் வேற்றாராெருவன் தொழில் நிமித்தம் சில மாதங்கள் தங்குவன்; அவன் பெயர் ஐந்தெழுத்தை யுடையது; அப்பெயரைப் 'பகுதி, விகுதி' யாகப் பகுத்தால் பகுதி- நவரத்தினங்களில் மூன்றெழுத்துப் பெயருடைய விரத்தினமாகவும், விகுதி-மரங்களில் முதன்மையான மூன்றெழுத்துப் பெயருடைய மரமாகவும் விளங்கும். அவனுக்கும், பரிசாரகர் கிருஷ்ணையருக்கும் முதல் நாள் நிகழ்ந்த சொற்ப மனஸ்தாபத்தை முன்னிட்டு, மறுநாளிராத்திரியில் அப்பரிசாரகர் வீட்டு வாயிற்படியில் 'மலமுட்டி' போட்டுடைத்துவிட்டு ஓடிப்போய்விட்டான். அவருக்கு மலமுட்டி போட்டுடைத்தவன் இன்னானென்று புலப்படவில்லை. அவருடைய 'நண்பரும்' 'பந்துவும்' ஆகிய பஞ்சாயத்துப் 'பவர்ப்பிரதிநிதி' கிருஷ்ணசாமிஐயர் கோவில் விசாரிப்புக் காரர்களையும் ஆட்களையும் வரவழைத்து, பள்ளர் பறையர்களுக்குக் கள்ளுவாங்கிக்கொடுத்து, 'சாணிச்சட்டி, விளக்குமாறு, தடிக்கம்பு' சகிதமாய் நான்குவீதிகளிலும் ஒவ்வொரு வீட்டிற்கும் எதிரில் நின்று, வாயில்வந்தபடி காமாதுரமாக வையச்செய்தார். நான்கு வீதிகளிலும் மிகுதியாகக்

கோட்டூர் இரங்கசாமி முதலியாரவர்களுடைய எஸ்டேட்டு 'மணியம், விசாரிப்பு, குடிகள்' என்பவர்களும், சில சில்லரை மிராசுதார்களும், சில கோவில் குடிகளுமிருக்கின்றார்கள். இவர்கள் அவர்கள் திட்டிய சகிக்கமுடியாத வார்த்தைகளைச் சகித்துக்கொண்டிருக்க நேர்ந்தது கடவுள் செயல்தான். அன்றையதினம் ஊர் இருந்த கொந்தளிப்புக்கு சில அறிவாளிகள் இல்லாதிருக்கிறபட்சத்தில் எத்தனையோ கொலைகளும் எவ்வளவோ கஷ்ட நஷ்டங்களும் ஏற்பட்டிருக்கும். குற்றஞ்செய்தவனைக் கண்டுபிடிக்கச் சக்தியில்லாதவரும்; சில்லரைக் கலகங்கள் விளைவிப்பதிற் சிறந்த சூரரும் ஆகிய மேற்படி கிருஷ்ணசாமி ஐயரைப் பஞ்சாயத்துப் பவர்ப் பிரதிநிதியாக நியமித்திருப்பது புத்திசாதுர்யமேயாகும்.

கோவிலுக்குச் சமீபத்தில் எந்தமரங்களு மிருத்தலாகாது. ஏற்கனவே கோவிலுக்குள் பல தென்னைமரங்களும், சில வில்வமரங்களு மிருந்த காரணத்தினல் பல பெருங் கெடுதிகளுண்டாயிற்று. கோவிலுக்கு வெளியில் மதில்களைச் சுற்றிலும் எட்டு கெஜ தூரத்தில் ஒரே வரிசையாக பல தென்னைமரங்களும், சில பனைமரங்களும் முற்காலத்திலிருந்தன. அம்மரங்கள் 'பிரம்ம தீர்த்தம், உருத்திர தீர்த்தம், திருஞான தீர்த்தம்' என்பவற்றைக் கோவிலுக்குச் சமீபத்தில் நெருங்கவிடாமல் மதில்களைப் பாதுகாத்தன. அவைகள் விழுந்துபோன பின்பு, மேற்படி தீர்த்தங்கள் மதில்களைத் தீண்ட ஆரம்பித்தன. முற்காலம்போல் தற்காலத்திலும் மேற்படி மதில்களைப் பாதுகாக்க வேண்டியது அவசியமாயிருத்தலினல் மேலை மதிலுக்கு மேல்புறமிருக்கும் 4 கெஜம் படுகையோடு பின்னும் 4 கெஜம் படுகையையும், வடக்கு மதிலுக்கு வடபுறமிருக்கும் 3 கெஜம் படுகையோடு

பின்னும் 5 கெஜம் படுகையையும் உண்டுபண்ணி, மேற்படி தீர்த்தங்களின் ஓரமாக ஒருபத்தி தென்னம் பிள்ளைகளை வைத்து, விருத்திசெய்து மேற்படி மதில்களைப் பாது காப்பது பெரும் புண்ணியமாகும். கோவிலுக்கு வெளி யில் 8 கெஜ தூரத்துக்கு அப்புறம் தென்னைமரம் பனை மரங்க ளிருக்கலாமெனவும், 100 கெஜ தூரத்துக்கப்புறம் பெருவேருள்ள மரங்க ளிருக்கலாமெனவும், இதற்கு மாறுக விருத்தல் கூடாதெனவும் ஆன்றோர்கள் கூறியிருக்கின்றார் கள். தென்புறம் மதிலோரத்தில் ஒரு புளியமரம் விருத்தி யாகிக்கொண்டிருக்கிறது. அதனால் கோவிலுக்கு இலாப முண்டாகுமென்று நினைத்து வெட்டாமல் வைத்திருக்கின் றார்கள். அந்த மரம் கூடிய சீக்கிரத்தில் மதிலை யிடித்து விடுமென்பதிற் சிறிதும் சந்தேகமில்லை. கருணை தங்கிய கமிட்டியாரவர்கள் அப் புளியமரத்தை வெட்டிவிடும்படி உத்திரவு செய்வார்களாக. மேற்கண்ட மு. சுவாமிநாத உபாத்தியாயருடைய வேலியை அகாரணமாக வெட்டிய தற்குப் பரிகாரமாக 8 கெஜ அகலமுள்ள தென்புறம் படுகையில் கோவிலுக்கு இலாப முண்டுபண்ணுவதுபோல இரண்டு பத்தியாக தென்னம்பிள்ளைகள் போடுவதற்காக ஒரு பத்தி 35 குழிகளும், மற்றொருபத்தி 15 குழிகளும் ஆக 50 குழிகள் வெட்டித் தாறுமாறுக வேலிகள் அடைக்கப் பட்டிருக்கின்றன. 15 குழிகள் வெட்டியிருக்குந் தானத் தில்தென்னம்பிள்ளைகள் போடவேண்டியது அவசியமே. ஏனெனில், பிரமதீர்த்தம் மேற்படி படுகையை யிடிக்காமல் பாதுகாத்துக்கொள்ளும். ஏற்கனவே தென்னைமரங்கள் வரிசையாக இருந்து விழுந்துவிட்ட இடமானதால் தென்னம்பிள்ளைகள் போடவேண்டியது அவசியமே யாகும். அதுவும் 10 பிள்ளைகள்தான் போடலாம். 15 பிள்ளைகள் போடுவது நாற்றுநடுவதுபோலாகும். 35 பிள்ளை

களுக்குக் குழிவெட்டியிருக்குந் தானம் பூராவும் மதிலுக்குக் கெடுதியை யுண்டுபண்ணக் கூடியதாயும், கருங்கற் சல்லி செங்கற் சல்லிகள் நிறைந்த களர்மண்ணாயு மிருக்கின்றது. தென்னம் பிள்ளைகள் விருத்தியாகவே யாகாது. ஒரு சமயம் விருத்தியானாலும் காய்க்கவே காய்க்காது. காய்த்தாலும் மதிலை வீழ்த்தாமற் போகாது. இதிற் செலவிடும் பொருளானது விழலுக்கிறைத்த சலமேயாகும். இந்த உண்மை மேற்படி மதிலோரத்தைப் பார்ப்பவர்களுக்கு நன்கு விளங்கும்.

பஞ்சாயத்தாரவர்களுடைய பவர்ப் பிரதிநிதியாகிய கிருஷ்ணசாமி ஐயர் என்பவர் பழ. வெ. ராம. இராமநாதன் செட்டியார் அவர்கள் கோவில் விசாரணைபார்த்த காலத்திற்கும், தற்காலம் கோவில் விசாரணை வகித்திருக்கின்ற க. வீ. சொ. வீ. அழகப்ப செட்டியாரவர்களுடைய காலத்திற்கும் இடையில், கோவில் விசாரணை வகித்திருந்த பஞ்சாயத்தார்களுடைய காலங்களில் சுமார் 10-வருஷ காலம் அப்பஞ்சாயத்தார்களுடைய பிரதிநிதியாகக் கோவில் விசாரணை பார்த்துவந்தார். இவருடைய உத்தரவன்னியில் கோவிலில் எந்தக் காரியமும் நடைபெறவில்லை. இவர் காலத்தில் தேவியார் தீயிற் சிறப்பாக மூழ்கினர்; நாகாபரணம் வகையரு வெள்ளிச் சாமான்கள் நாசமாயின; பரிவர்த்தனை நிலங்கள் பாழாய்ப்போயின; கட்டிடங்களெல்லாம் குட்டிச்சுவர்களாயின. இவற்றைப்பற்றி தஞ்சாவூர் சர்க்கிள் தேவஸ்தானம் கமிட்டியாரவர்கள் எழுத்து மூலமாகக் கேட்ட கேள்விகளுக்கு மேற்படி அழகப்ப செட்டியாரவர்கள் 'முன் விசாரணைதார்கள் காலங்களில் இருந்திருக்கலாம்' எனவும், 'என்னுடைய காலங்களில் அப்படிப்பட்ட விஷயங்கள் இல்லை' எனவும் பதில்

எழுதி இருப்பதால், மேற்படி கிருஷ்ணசாமி ஐயர் காலங்களில் நஷ்டம் ஏற்பட்டது உண்மையென்று, பெயரைக் குறிப்பிடாமல் எழுதியிருக்கின்முரென்பது நன்கு புலப்படுகின்றது. மேற்படி கிருஷ்ணசாமி ஐயர் கோவிலை விட்டு நீங்கிக் கோவிலூர் மடத்துக்குத் தாசில்தாரரகப்போனதும்; அங்கே உத்தியோகத்தி லிருக்கும்போது திருக்களருக்கு வந்து அமுதவல்லியம்பாளுடைய தாலித் திருட்டை மறைத்து, அத்திவெட்டிப் பெரியாண்டவர் கோவிலில் திருடர்களிடத்தில் சத்தியம் வாங்கச் சொல்லியதும்; அப்படிச் சத்தியம்வாங்கச் சொல்லியதற்குக் காரணமும், மேற்படி தாசில் உத்தியோகத்தினின்று விலக்கப்பட்ட காரணமும், மேற்படி அழகப்ப செட்டியார் அவர்கள் மறந்திருக்கமாட்டா ரென்பது உண்மையே. ஆனல் அவற்றை மறந்துவிட்டு திருநெல்வாயில் என்னும் 'சிவபுரிக்கும், திருக்களருக்கும்' தமக்குப் பதிலாக 'பவர்ப்பிரதிநிதியாக நியமிப்பதற்குச் சில காரணங்களுண்டு; அதாவது மேற்படி அழகப்ப செட்டியாரவர்களுக்குச் சொந்தமாக மேற்படி சிவபுரியிலிருக்கும் கடையில் 'புகையிலை சம்பந்தமாகவும், லேவாதேவி சம்பந்தமாகவும்' பற்று வரவு செய்தவர்கள் பேரில் கோர்ட்டில் நடவடிக்கைகள் நடத்தல்; மேற்படி சிவபுரிக்கோவிற் பூசகராகிய பரம்பரை ஸ்னீகபாத்தியமும், டிரஸ்டி பாத்தியமுமுடைய சி. க. ராம. இராமசாமிக் குருக்கள்பேரில் பல நடவடிக்கைகள் நடத்தல்; திருக்களர்க் கோவில் சம்பந்தமாக 'திருக்களர் விளக்கம்' முதலிய புத்தகங்கள் எழுதுகின்ற மு. சுவாமிநாத உபாத்தியாயரை எப்படியாவது அடக்குதல் முதலியன. மேற்படி கிருஷ்ணசாமி ஐயருக்கு மாசம் ஒன்றுக்கு சம்பளம் திருக்களர்க் கோவிலில் ரூ. 25-ம் சிவபுரியில் ரூ. 10-ம் ஆக ரூ. 35 ஏற்பட்டிருக்கின்றன. மேற்படி கிருஷ்ணசாமி ஐயருக்கு

சிவபுரியில் மேற்படி அழகப்ப செட்டியாரவர்களுடைய கட்டிடம் ஒரு சாகையாகவும், திருக்களரில் இருக்குவேத பாடசாலைக் கட்டிடத்தில் ஒரு பகுதி ஒரு சாகையாகவும், இரண்டு சாகைகள் ஏற்பட்டிருக்கின்றன. மேற்படி கிருஷ்ணசாமி ஐயர் ஒவ்வொரு மாசத்திலும் சிவபுரியில் நாள் 20-ம், திருக்களரில் நாள் 10-ம் தங்கியிருக்கின்றார். சிவபுரியில் இருக்கின்ற நாட்களில் 'சிதம்பரம் டி. முன்சீப் கோர்ட்டு, மஞ்சக்குப்பம் சப்கோர்ட்டு, சென்னை' முதலிய இடங்களுக்குப் போய்வருகின்றாராம். திருக்களரில் இருக்கின்ற நாட்களில் 'தஞ்சாவூர், கும்பகோணம், மன்னார்குடி' முதலிய விடங்களுக்குப் போய்வருகின்றார். 'திருக்களருக்கும், சிவபுரிக்கும்' மாசம் மூன்று நடைக்குக் குறையாமல் தாயாருள்படக் குடும்ப சகிதமாய்ப் போய்வந்து கொண்டிருக்கின்றார். போய் வருவதற்கு மாசம் ஒன்றுக்கு வண்டிச் சத்தம், கார் சார்ஜ், ரெயில் சார்ஜ் வகையறுவில் ரூ. 25-க்குக் குறையாமல் செலவாகலாம். இந்த ரூபாய் எந்த ஐவேஜியிலிருந்து செலவாகிறதோ தெரியவில்லை. சிவபுரிக் கடையிலிருந்து செலவாக நியாயமில்லை. சிவபுரிக் கோயில் ஏழைக்கோயிலானதால் அக்கோயிற் பணத்திலிருந்து செலவாகவு மார்க்கமில்லை. அருடைய சம்பளம் சொந்தச் செலவுக்கே போதாது. இந்த நிலைமையில் திருக்களர்க் கோவிலில் செலவு போட்டுக் கணக்கெழுதுவதைவிட வேறு மார்க்க மிருப்பதாகத் தெரியவில்லை. மேற்படி அழகப்ப செட்டியாரவர்கள் மேற்படி செலவை ஒத்துக் கொள்பவராயிருந்தால், மேற்படி கிருஷ்ணசாமி ஐயருக்கு கோவில் பணத்திலிருந்து சம்பளம் கொடுத்து, 'பஞ்சாயத்துப் பவர்ப்பிரதிநிதி'யாக நியமிக்கவாவது, இரண்டு கோவிலுக்கும் ஒருவரையே 'பஞ்சாயத்துப் பவர்ப்பிரதிநிதி'யாக நியமிக்கவாவது காரணமில்லை. கோவிற் பஞ்சாயத்தார்கள் தங்களுக்குப் பதிலாக வேறொருவருக்குப் பவர்

கொடுத்துக் கோவிலைப் பரிபாலிக்கச் செய்யலாமென்று சட்டமிருக்கிறதோ, இல்லையோ, அது தெரியவில்லை. ஒரு பஞ்சாயத்தார் சம்பந்தமில்லாத ஒருவருக்குப் 'பவர்' கொடுப்பாரேயானால் அப்பஞ்சாயத்தார் அப்பஞ்சாயத்துப் பார்க்கத் தகுதியில்லாதவரேயாவர். பஞ்சாயத்துப் பார்க்கச் சாவகாசமில்லாதவர், வேறொருவருக்குப் 'பவர்' கொடுப்பதைவிட இராஜிநாமா கொடுத்துவிடுவது மிக்க விசேஷமாகும். தொலையையும் செலவையும் உத்தேசிக்கிறவர்கள் பஞ்சாயத்தை ஒப்புக்கொள்ள வேண்டியதேயில்லை. கோவிற் பஞ்சாயத்து உத்தியோகமானது மதசம்பந்தமுடையது; சம்பளமில்லாதது, இவ்வுத்தியோகம் அன்புடையோருக்குப் 'புகழ், புண்ணியம்' என்பவற்றையும், அன்பில்லாதவருக்கு 'இகழ்வு, பாவம்' என்பவற்றையுங் கொடுக்கத்தக்கது. கோவிற் பஞ்சாயத்து, சம்பளமில்லாத உத்தியோகமானதால் அவ்வுத்தியோகம் வகித்தவர், கோவிவிற் சம்பளம் பெறும் ஒருவருக்குப் 'பவர்' கொடுப்பாரேயானால் அப்பஞ்சாயத்தாரே அச்சம்பளத்தைப் பெற்றுக் கொள்பவராவர். இதுவரையில் எந்தப் பஞ்சாயத்தார்களும் 'பவர்ப்பிரதிநிதி' நியமித்து, கோவிலைப் பரிபாலிக்கச் செய்ததைப் பார்த்ததுமில்லை, கேட்டதுமில்லை. இதன் மூலமாக இனிமேல் எல்லாப் பஞ்சாயத்தார்களும் 'பவர்ப் பிரதிநிதி' நியமித்துக் கோவிலைப் பரிபாலிக்கச் செய்யலாமென்றேற்படுகிறது. ஆனால் பஞ்சாயத்தார்கள் 'பவர்ப்பிரதிநிதி' நியமித்துக் கோவிலைப் பரிபாலிக்கச் செய்வதைவிட, கமிட்டியாரவர்களே ஒரு இன்ஸ்பெக்டரை நியமித்து, அவரைக்கொண்டு கோவிலைப் பரிபாலிக்கச்செய்வது மிக்க விசேடமாகும்; அவரும் கடவுளுக்குப் பயப்படுவதோடு கமிட்டியாரவர்களுக்கும் பயந்து சரியாக நடத்துவார். மேற்படி கிருஷ்ணசாமி ஐயருக்குக் கோவிலைக் கவனிப்

பதற்குப் போதிய சாவகாசமின்மையால் ஒரு விசாரிப்புக்குப் பதிலாக இரண்டு விசாரிப்புகள் நியமிக்கப் பட்டிருக்கின்றன.

கோவிலுக்குள் தொன்றுதொட்டு ஓட்டுக்கட்டிடமே கிடையாது. கோவில் மகாவிலட்சணம் பொருந்தியது; இலட்சுமி விலாசம் நிறைந்தது. இப்போது அவலட்சணத்தை உண்டுபண்ணும் பொருட்டுப் பதினாறுகால் மண்டபத்துக்கு வடக்கு, இரண்டாவது மதிலுக்குக் கிழக்கு, தேவியார் சந்நிதிக்குத் தெற்கு, வசந்தமண்டபத்துக்கு மேற்கு இந்த இடைவெளியில் இடிந்துபோன கட்டிடங்களின், செங்கல்,ஓடு,மரம்' என்பவற்றையும் மண்சாந்தையும் கொண்டு ஒரு கட்டிடங் கட்டப்படுகிறது. அந்தக் கட்டிடம் முடிவு பெறுமேயானால் கோவிலுக்குள் மூத்தாள் குடிவந்து விட்டாளென்பதற்குச் சந்தேகமேயில்லை. அமுதவல்லியம்பாளுடைய ரூ 500 பெறுமானமுள்ள தாலிவகையறுக் கோர்வைக்குப் பதிலாக ரூ. 100-க்கு ஒரு சிறுதாலி பண்ணிவைத்திருப்பது போலவும்; பிரமோற்சவத்தை நிறுத்திவிட்டு, அவ்வுற்சவ மண்டபப்படி செய்வோர்களிடத்தில் பணம் வசூல் செய்து கும்பாபிஷேகஞ் செய்ததுபோலவும்; வாகனமண்டபத்தைப் புதுக்கி வேலைசெய்வதற்கு ரூ. 1000 செலவாகுமே என்று நினைத்துக் கோவிலைச் சுற்றிலும் ஒரு பிராகாரம் உண்டு பண்ணுவதாக பிரஸ்தாபஞ்செய்து, அவ்வாகன மண்டபத்தை யிடிப்பதுபோலவும்; கட்டவேண்டிய முக்கியமான கட்டிடங்களைக் கட்டாமல், கட்டத்தகாத கட்டிடத்தை 'வெல்லத்தினாலே பிள்ளையார்பண்ணி அதன் அபானத்தைக் கிள்ளி முன்னே வைத்து நிவேதனஞ் செய்வதுபோல' இடிந்துபோன கட்டிடங்களின் 'செங்கல், ஓடு, மரம்' என்பவற்றைக்கொண்டு அனுவசியமான கட்டிடங் கட்டுவது

ஆச்சரியமேயாகும். 'நவக்கிரகங்கள், வைரவர், துர்க்கையம்பாள்' என்னும் மூர்த்தங்கள் இடமாறுதல் பெற்றவுடன் 'இளையாள்' விலகியதும்; இந்தக் கட்டிடங் கட்ட ஆரம்பித்தவுடன் மூத்தாள் குடிவந்ததும் கடவுள் செயல்தான். கோவிலுக்குத் தென்புறம் 8-கெஜ அகலமும், மேல்புறம் 4-கெஜ அகலமும், வடபுறம் 3-கெஜ அகலத்தோடு 7-தென்னைமரங்களுமிருக்கின்றன; மேற்படி தென்புறத்தில் 8-கெஜ அகலத்துக்குள் இரண்டு பத்தி தென்னம்பிள்ளைகள் வைக்கவேண்டியதற்காகக் குழிகளும் வெட்டப்பட்டிருக்கின்றன. இந்த நிலைமையில் கோவிலைச் சுற்றிலும் ஒரு பிரகாரத்திற்காகக் கல்நிறுத்தி முட்கம்பி போடப்போகின்றார்களாம்; இஃதென்ன அநியாயம், இப்படியுமுண்டா? இதனாலே கோவிலுக்கு என்ன பிரயோசனம்? இந்தச்சூட்சிகளெல்லாம் 'தாலிசெய்து வைத்துவிட்டேன், கும்பாபிஷேகஞ் செய்தேன், கட்டிடங் கட்டிவைத்தேன், பிரகாரம் உண்டுபண்ணியிருக்கிறேன்' என்று சொல்ல வேண்டியதற்காகவும்; பணங்கொடுத்தவர்களுக்கு ஒருவாறு திருப்தியுண்டாக வேண்டியதற்காகவும்; 'குருபூசைமடம், பசுமடம், திருநந்தனவனம், எசுர்வேத பாடசாலை' என்பவற்றின் தருமகருத்தாக்களிடம் கோவிலை ஒப்பிவிக்காதிருக்கவேண்டியதற்காகவும்; கடவுளை ஏமாற்றும் பொருட்டும் நடக்கின்றன. மேற்படி தருமகருத்தாக்கள் கோவிலை ஒப்புக்கொள்ளும் பட்சத்தில் சில இரகசியங்கள் வெளிப்படுமென்பது சிலருடைய அபிப்பிராயம்.

## உயில் நகல்.

1927-ம்௵ எப்ரல்-மீ 28௨க்குச் சரியான பிரபவ-௵ சித்திரை-மீ 16௨ மன்னார்குடித்தாலூகா திருக்களரிலிருக்கும், காரைக்குடி வெங்கடாசலஞ் செட்டியார்

அவர்கள் குமாரர், நாட்டுக்கோட்டைச்செட்டியார் ஜாதி சிவ மதம், மிராசு லேவாதேவி, 64 வயதுள்ள, பழ. வெ. ராம. இராமநாதன் செட்டியார் நல்ல எண்ணத்துடனும், ஞாபகத் துடனும் எழுதிவைத்த உயில். இப்போது எனக்கு 64 வயது ஆகிறபடியாலும், தள்ளாமை ஜாஸ்தியாக இருக்கிற படியாலும் எனக்குப் பின்னல், என்னல் நடத்தப்பட்டு வருகிற தருமங்கள் மூதலியவைகள், சரிவர நடத்திவர வேண்டியதற்காக, நான் செய்யும் ஏற்பாடாவது:—நானும், என்னுடைய சுவிகார குமாரன் வெ. ராம. வெ. வெங்கடா சலஞ் செட்டியாரும், என்னுடைய சொத்துக்களெல்லாம் சுயார்ச்சிதமாக நான் சம்பாதித்து இருந்தபோதிலும், 1925-ம்ஞு டிசம்பர்-மீ 18உக்கு குரோதன-ஞு மார்கழிமீ 4-உயில் எங்கள் நாட்டுக்கோட்டையார் வழக்கப் படி, பஞ்சாயத்தார்களின் முன்னிலேயில், பிரிவினை செய்து கொண்ட தஸ்தவேஜிப்படி, நான் கொடுக்கவேண்டிய செல்லு களை, மேற்படி வெ. ராம. வெ. வெங்கடாசலஞ்செட்டியார் கொடுத்துத் தீர்த்துக்கொள்ளுகிறதென்று தீர்மானித்து, அவரவர்களுக்கு ஏற்படுத்திக்கொடுத்த சொத்துவகையறுக் களை, அவரவர்களும் தனித்தனியே அனுபவித்து வருகிறோம். என்னுடைய பாகப்படி, எனக்குக்கிடைக்கப் பட்ட சொத்துக்களை, என்னுடைய ஏகதேச வினியோகத் திற்காக ஒதுக்கப்பட்டு, என்னுடைய அனுபோகத்தி லிருந்துவருகிறது. எனக்குச் சொந்தமாய், நான் கிரயங் கொடுத்து வாங்கி, என் அனுபோகத்திலிருந்து வருகிற, 1-வது ஷெடியூலில் கண்ட சொத்துக்களிலிருந்து, 2-வது ஷெடியூலில் கண்டிருக்கிறபடி, வருஷாந்திரம் வாங்கக்கூடிய வரும்படியைக்கொண்டு, 3-வது ஷெடியூலில் கண்ட தருமங்களைச் சரிவர நடத்திவரவேண்டியது. 4-வது ஷெடியூலில் கண்டிருக்கிறபடி, எனக்கு வரவேண்டிய

தொகைகளில், பிறைங்குப் பக்கமுள்ள இராமனயிற்ருேலிங் ஷேர்களை விற்று, பாக்கித் தொகைகளை நேரிலாவது, கோர்ட்டு மூலமாவது வசூலித்தும்; 5-வது ஷெடியூலில் கண்டிருக்கிறபடி, நான் கொடுக்கவேண்டிய கடன்களைக் கொடுத்துத் தீர்த்தும்; மீதமிருப்பதை மேற்கண்ட தருமங்களுக்காகப், பண்டாக வைத்துக்கொள்ளவேண்டியது. 1-வது ஷெடியூலில் கண்ட சொத்துக்களில் மன்னார்குடியிலிருக்கும் ஓட்டு வீட்டையும், அதைச் சேர்ந்த நிலத்தையும் நல்ல விலைக்கு விற்று, வந்த தொகையை மேற்கண்ட தருமங்களுக்காக, இந்தத் தொகையையும் பண்டாக வைத்துக் கொள்ளவேண்டியது. மேற்கண்ட சொத்துக்களை, என் சுவிகார குமாரனுகிய, வெ. ராம. வெ. வெங்கடாசலஞ் செட்டியார் சரியானபடி விருத்திசெய்து, அதனுடைய வரும்படிகளைக்கொண்டு, 3-வது ஷெடியூலில்கண்ட தருமங்களை என்றென்றைக்கும் என்பேரால் சாஸ்வதமாக நடத்திவர வேண்டியது. மேற்படி வரவு செலவு கணக்குச் சரியானபடி வைத்துக்கொள்ளவேண்டியது. மேற்படி வெங்கடாசலஞ் செட்டியார் காலம் வரையில் அவரும், அவருக்குப் பிறகு அவருடைய வார்சுதார்களும் டிரஸ்டிகளாக இருந்து, மேற்படி சொத்துக்களைச் சேதமன்னியில் விருத்திசெய்து மேலேகண்ட தருமங்களை, நன்ருக என்றென்றைக்கும் நடத்திக்கொண்டு வரவேண்டியது. 1-வது ஷெடியூலில் கண்டிருக்கிற சொத்துக்களில் விற்பனை செய்ய வேண்டிய மன்னார்குடி வீடுதவிர, மற்றபடி என் அனுபோகத்திலுள்ள திருக்களர் கிராமம் கோட்டகம் இன்னும் ஒவர்க்குடி கிராமம் வகையரூச்சொத்துக்களையும், திருக்களரிலுள்ள இருக்குவேதபாடசாலை, ஓட்டுவில்லைக் கெட்டிக்கட்டிடத்தையும், அதைச் சேர்ந்த நிலத்தையும்; கிரயஞ்செய்து கொடுக்கக்கூடாது; ஒத்தி பெந்தகம்வைக்கக்கூடாது; ஜாமீன்

கொடுக்கக்கூடாது; கிரயஞ்செய்து கொடுத்தாலும், ஒத்தி பெந்தகம் வைத்தாலும், ஜாமீன் கொடுத்தாலும் செல்லத் தக்கதில்லை. 1வது ஷெடியூலில்கண்ட சொத்துக்களில் சேகரஞ்செய்து கொள்ளவேண்டிய நிமித்தம் தேவையானால் அந்தந்தக் கிராமத்தில் பரிவர்த்தனை செய்துகொள்ளலாம். இதரகிராமங்களில் பரிவர்த்தனை செய்துகொண்டால், செல்லத்தக்கதில்லை. திருக்களர் ஸ்ரீ அமுதவல்லியம்பாளைச் சேர்ந்த பூரா அவயவங்களுக்குள்ள, "சுவர்ன அங்கி" செட்டு ஒன்றும், 'புஜக்கிளி' இரண்டும், 'கைக்கிளி' ஒன்றும், வைரமூக்குத்திசேர்ந்த புலாக்கு' ஒன்றும் என் துவாராவில் என்னுடைய இருக்குவேத பாடசாலையி லிருந்து வருகிறது. மேற்கண்ட திருவாபரணம் வகையறுக்களை, மேற்படி கோவிலுக்குத் தேவையுள்ளபோதெல்லாம் தவக்கமன்னியில் என்றென்றைக்கும் கொடுத்துத் திரும்ப வாங்கிப் பந்தோபஸ்தாய் வைத்துக்கொண்டுவரவேண்டியது திருக்களரில் ஆண்டவர் கோவிலுக்கும், மடத்துக்குமாக முன் தருகிறதாக ஒப்புக்கொண்டு புஸ்தகத்தில் எழுதிக் கொடுத்திருக்கிற வகைக்கு, வெ. ராம. வெ. வெங்கடாசலஞ் செட்டியார் வசம், துன்மதிஸ்ரீ தைமீ 1உயாக அரையே யரைக்கால் வட்டிக்கு, திருக்களர் ஆண்டவர்பேரால் வரவு வைத்துக் கொடுத்திருக்கிற ரூ. 250-க்கு வட்டியும் முதலும் கூடிய தொகையை மேற்படி வெங்கடாசலஞ் செட்டியார் மேற்படி மடத்தார் வசம் ரசீது வாங்கிக்கொண்டு கொடுத்துத் தீர்த்துவிடவேண்டியது. என்வசமாக இருக்கப் பட்ட நகைகளில், வெ. ராம. வெ. சேதுராமன் செட்டிக்கு 'வைரம்வைத்த கெவுடு' ஒன்றும், வைரத்தடை யொன்றும் 'வைரமோதிரம்' இரண்டும் மேற்படியானிடம் கொடுத்திருக் கிறது. என் மனைவி இலட்சுமி ஆய்ச்சிக்கு ராம. மு. வி. மெ. வினையத்தான் செட்டியாரிடமிருக்கிற 'தங்கக்கழுத்துத்தாரு

ஒன்றும், 'வைர அட்டிகை' ஒன்றும் இருப்பதை வாங்கியும்; இருப்புப்பெட்டியிலிருக்கிற 'வைரத்தோடு' ஜோடி ஒன்றும் 'வைரமோதிரம்' ஒன்றும், சிகப்புக்கல் மோதிரம்' ஒன்றும், 'சிகப்புக் காப்பு' ஜோடி ஒன்றும், 'பச்சைக்காப்பு' ஜோடி ஒன்றும்; 'பவுன் மாலை' ஜோடிப்பு ஒன்றும் மேற்படியாளிடம் கொடுக்கிறது. அவளுக்குப் பிற்காலம், மீதமிருப்பதை வெ. ராம. வெ. வெங்கடாசலஞ் செட்டியாரும், அவனுடைய வார்சுகளும் அடையவேண்டியது. மேற்கண்ட இரண்டுபேருக்கு மிருக்கிற நகைகள் நீங்கலாக, மீதமிருக்கிற நகைகள் பூராவையும் வெ. ராம. வெ. வெங்கடாசலஞ் செட்டியார் எடுத்துக்கொள்ளவேண்டியது. இந்த உயிலில் கண்ட யாவற்று சங்கதிகளும் என் ஜீவதிசைக்குப் பிறகு அனுஷ்டானத்துக்கு வரவேண்டியது. இதை மாற்றவும், ரத்துசெய்யவும் எனக்கு அதிகாரமுண்டு.

(ஒப்பம்.) பழ. வெ. ராம. இராமநாதஞ் செட்டியார்.

---

## 1-வது ஷெடியூல் சோத்துக்களின் விபரமும் மதிப்பும்.

| | ரு. | அ. | பை. |
|---|---|---|---|
| 1. திருத்துறைப்பூண்டி தாலூகா, வங்கநகர் வட்டம், ஒவர்க்குடி கிராமம் என்னுடையது பூராவும் பெறுமானம் | 40000 | 0 | 0 |
| 2. மன்னார்குடி தாலூகா, திருக்களர் கோட்டகம் கிராமம் என்னுடையது பூராவும் மதிப்பு | 21500 | 0 | 0 |

| | | | |
|---|---|---|---|
| 3. மேற்படி திருக்களரில் என்னுல் கட்டப் பட்டிருக்கிற இருக்குவேதபாடசாலே கட்டிடம் அதைச் சேர்ந்த கீழ்நிலம் உள்பட மதிப்பு | 60000 | 0 | 0 |
| 4. மன்னார்குடியில் நாஷனல் ஹைஸ்கூலுக்கு எதிரடியிலிருக்கும் ஓட்டுவீடு கீழ்நிலம் மேன் கூரைஉள்பட மதிப்பு | 1500 | 0 | 0 |
| மொத்தம் | 123000 | 0 | 0 |

## 2-வது ஷேடியூல் வரும்படிகளின் விபரம்.

| | | | |
|---|---|---|---|
| 1. ஒவர்க்குடி கிராமம் ஏகர் 200 சென்ட் 63 நிலத்தில் வரும்படி மேல்வாரம் கிடைக்கக்கூடியது நெற்கலம் 2000-க்கு கலம் 1-க்கு ரூ. 2–4–0 வீதம் ஆகக் கூடுதல் ரூ. 4500. சர்க்கார் கிஸ்தி ரூ. 1050 கிராம அசாமிச் சம்பளம் ரூ. 500. ஆக ரூ. 1550 நீக்கி பாக்கி வரும்படி | 2950 | 0 | 0 |
| 2. திருக்களர் கோட்டகம் 4 வேலி சொச்சத் திற்கு வரும்படி மேல்வாரம் கிடைக்கக்கூடியது நெற்கலம் 400-க்கு கலம் 1-க்கு ரூ. 2–8–0 வீதம் கூடுதல் ரூ. 1000. இதில் சர்க்கார் கிஸ்தி ரூ. 160 அசாமிச் சம்பளம் ரூ. 125 ஆக ரூ. 285 செலவு நீக்கி பாக்கி வரும்படி | 715 | 0 | 0 |
| 3. பாடசாலேப் பண்டு ரூ. 5000 இப்போது பண்டு வைக்கிறதாக ஏற்படுத்தியிருப்பதால் மேற் படி தொகைக்கு வருஷம் 1-க்கு வட்டியினுல் வரவு | 375 | 0 | 0 |
| ஆக வகை 3-க்கு வரும்படி | 4040 | 0 | 0 |

## 3-வது ஷெடியூல் தருமங்களின் விபரம்.

### திருக்களர் ஸ்ரீ அமுதவல்லியம்பாள் சமேத ஸ்ரீ பாரிசாதவனேஸ்வரஸ்வாமி கோவிலுக்கு

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1. | திருவனந்தக் கட்டளைக்கு வருஷம் 1-க்கு | 500 | 0 | 0 |
| 2. | குழித்தளிகைக்கு வருஷம் 1-க்கு | 142 | 8 | 0 |
| 3. | உருத்திரசெபக் கட்டளைக்கு வருஷம் 1-க்கு | 84 | 0 | 0 |
| 4. | தேர் மண்டபப்படிக்கு வருஷம் 1-க்கு | 50 | 0 | 0 |
| 5. | ஸ்ரீ பாரிசாதவனேசுர சுவாமி நித்தியப்படி அருச்சனைக்கு வருஷம் 1 க்கு | 24 | 0 | 0 |
| 6. | ஸ்ரீ அமுதவல்லியம்பாள் சந்நிதிக்கு நித்தியப்படி தீபத்தெண்ணெய்க்கு வருஷம் 1-க்கு | 24 | 0 | 0 |
| 7. | மகாசிவராத்திரிக்கு காலம் 1க்கு வருஷம் 1க்கு | 50 | 0 | 0 |
| 8. | திருக்களர் ஆண்டவர்கோவில் சுண்டல் கட்டளைக்கு வருஷம் 1-க்கு | 18 | 0 | 0 |
| 9. | மேற்படி ஆண்டவர் குருபூசைக்கு வருஷம் 1-க்கு | 51 | 0 | 0 |
| 10. | சிதம்பரத்தில் இளமை ஆக்கினர் கோவில் திருநந்தனவனத்திற்கு வருஷம் 1-க்கு | 250 | 0 | 0 |
| 11. | சிக்கல் பால் கட்டளைக்கு வருஷம் 1 க்கு | 180 | 0 | 0 |
| 12. | சிதம்பரம் தினப்படி நைவேத்தியத்திற்கு வருஷம் 1-க்கு | 50 | 0 | 0 |

| | | | |
|---|---|---|---|
| 13. இருக்குவேத பாடசாலை 12 பிள்ளைகளுக்குக் குறையாமல் வைத்துப் பாடசாலைத் தருமத்தை நடத்திவருவதற்கு வருஷம் 1-க்கு | 2000 | 0 | 0 |
| 14. உத்ஸவம் பிராமணாள் போஜனம் வருஷம் 1-க்கு | 500 | 0 | 0 |
| 15. ஓவர்க்குடி கிராமம் ஸ்ரீ கைலாசநாத சுவாமி தினப்படி அபிஷேகச் சாமான் வகையறாக்களுக்கு வருஷம் 1-க்கு | 100 | 0 | 0 |
| ஆக மொத்தம் | 4023 | 8 | 0 |

## 4-வது ஷெடியூல் வரவேண்டிய தோகைகளின் விபரம்.

| | ரூ. | அ | பை. |
|---|---|---|---|
| 1. பினுங்கு பக்கமுள்ள இராமனயிற் ரேலிங் ஷேர் 17600-ல் செலவு செய்தது போக மீதமிருக்கிற ஷேர் 5000-க்கு மதிப்பு | 18480 | 0 | 0 |
| 2. 1926-ம் ௵ அக்டோபர்-௴ 28௳ கோட்டூர் தோட்டம் அருளப்ப நாடார் மகன் சின்னமுத்து நாடான் வட்டி $1\frac{1}{2}$ வீதம் எழுதிக் கொடுத்திருக்கிற பிராம்சரி நோட்டுப்படி வர வேண்டியது | 200 | 0 | 0 |
| 3, துந்துபி - ௵ பங்குனி-௴ 8 ௳ நாகபட்டினம் எருத்துக்காரத் தெருவிலிருக்கும் கோவிந்த செட்டியார் மகன் வைத்திலிங்க செட்டியார் $1\frac{1}{4}$ வட்டி வீதம் எழுதிக்கொடுத் திருக்கிற நோட்டுப்படி வரவேண்டியது | 100 | 0 | 0 |

| | | | |
|---|---|---|---|
| 4. 1926-ம் ஆு பிப்ரவரிமீ 24வுக்குச் சரியான குரோதன-ஆு மாசி-மீ 13வயில் மேற்படி மீ 6வயாக $1\frac{1}{8}$ வீதம் வட்டி கோட்டூர் S. கோபாலசாமி முதலியார் தரவேண்டியது நோட்டுப்படி | 4000 | 0 | 0 |
| 5. குரோதன ஆு மீ 18வ திருக்களர் இரங்கசாமி தொண்டைமான் மகன் குப்புசாமி தொண்டைமான் எழுதித்தந்த நோட்டு வட்டி $1\frac{1}{2}$ வீதம் தரவேண்டியது | 45 | 0 | 0 |
| 6. துந்துபி-ஆு பங்குனி-மீ 8 வ திருக்களர் சூரியமூர்த்தி தேசிகர் குமாரர் சோமசுந்தர தேசிகர் நோட்டில் செல்லானது போக பாக்கி தரவேண்டியது ஒரு ரூபாய் வீதம் வட்டி | 75 | 0 | 0 |
| 7. அக்ஷய ஆு ஐப்பசிமீ 18வ நன்னிலம் சுப்பிரமணிய ஐயர் குமாரர் நாராயணசாமி ஐயர் நோட்டு வட்டி 1 வீதம் தரவேண்டியது | 110 | 0 | 0 |
| 8. துந்துபிஆு ஆனி-மீ 5வ திருக்களர் வெங்கடாசல தேவர் மகன் பிச்சைய தேவர் நோட்டு வட்டி 1 வீதம் தரவேண்டியது | 60 | 0 | 0 |
| 9. 1926-ம் ஆு சூன்மீ 4வ திருக்களர் கோவிந்த கோனர் மகன் மாரிமுத்து கோனுன் நோட்டில் செல்லானதுபோக பாக்கி செல்ல வேண்டியது வட்டி $1\frac{1}{4}$ ரூபாய் வீதம் | 90 | 0 | 0 |
| 10. அக்ஷய ஆு ஆனி மீ 9வ ஆதனக் கோட்டை முத்தையா சேர்வை கருப்பையா சேர்வை நோட்டுப்படி தரவேண்டியது வட்டி 1 வீதம் | 400 | 0 | 0 |

| | | | |
|---|---|---|---|
| 11. அக்ஷய௵ சித்திரை௴ 17௳ அழகிரி கோட்டகம் அப்பாசாமி தேவர் மகன் மாரியப்ப தேவன் நோட்டுப்படி தரவேண்டியது வட்டி 1½ வீதம் | 40 | 0 | 0 |
| 12. 1926-ம்௵ ஜூலை௴ 20௳ கோடியக்கரை ஓமக்குட்டியா பிள்ளை எழுதிக்கொடுத்திருக்கிற கைலெட்டர்படி தாவேண்டியது அசல் ரூ. 513. வட்டி ¾ வீதம் | 513 | 0 | 0 |
| 13. துந்துபி௵ ஆவணி௴ 19௳ இராயநல்லூர் சொக்க தேவர் மகன் கிருஷ்ணசாமி தேவர் நோட்டில் செல்லு போக பாக்கி வரவேண்டியது வட்டி 1 வீதம் | 140 | 0 | 0 |
| 14. 1921-ம்௵ செப்டம்பர்௴ 5௳க்குச் சரியான துன்மதி௵ ஆவணி௴ 21௳ ஆரியலூர் குப்புசாமி மேஸ்திரி மகன்கள் இராமலிங்க மேஸ்திரி 1. நடேச மேஸ்திரி 2, இவர்கள் எழுதிக்கொடுத்திருக்கிற பெந்தகப் பத்திரப்படி வரவேண்டியது வட்டி 1 வீதம் | 1000 | 0 | 0 |
| 15. அக்ஷய௵ வைகாசி௴ 17௳ திருக்களர் சபாபதி பிள்ளை மகன் ஷண்முகம் பிள்ளை வட்டி 1 வீதம் தரவேண்டியது | 50 | 0 | 0 |
| 16. குரோதன-௵ தை௴ 28௳ கீழப்பள்ளிச்சந்தத்திலிருக்கும் சாம்பசிவக்குருக்கள் குமாரர் பஞ்சாக்ஷரக்குருக்கள் வர்த்தமானப்படி ரூ. 361-6-0-க்கு கணக்கு மூலம் வரவு ரூ. 300 நீக்கி பாக்கி வரவேண்டியது | 61 | 6 | 0 |

17. 1919-ம்வூ ஜூன்மீ 23உ திருக்களர் சிதம்பரம் பிள்ளை குமாரர் வேலாயுதபிள்ளை 1. மேற்படியார் மகன் சிதம்பர சபாபதி பிள்ளை 2, எழுதிக்கொடுத்திருக்கிற பெந்தகப் பத்திரத்தில் செல்லானது போக பாக்கி வரவேண்டியது 1 வீதம் வட்டி — 160 0 0

18. சித்தார்த்தி வூ மார்கழிமீ 26 தேதி திருக்களர் சிங்காரவேலுதேவர் மகன் நாராயண சாமி தேவர் நோட்டு பாக்கி வரவேண்டியது 1 வீதம் வட்டி — 25 0 0

19. குரோதன-வூ சித்திரை-மீ 16 உ திருக்களர் அ. கோதண்டபாணி நோட்டு பாக்கி வரவேண்டியது வட்டி 1 வீதம் — 46 12 3

20. 1919-ம் வருஷம் ஜூன் மாதம் 19-ம் தேதி அ. கோதண்டபாணி எழுதிக்கொடுத்திருக்கிற ரூ. 200 பெந்தகப் பத்திரத்திற்கு வரவு ரூ. 100 நீக்கி அசல் வரவேண்டியதற்கு வட்டி $1\frac{1}{4}$ ஆக பாக்கி — 100 0 0

ஆகக் கூடுதல் — 25696 2 3

## 5-வது ஷெடியூல் கொடுக்கவேண்டிய கடன்களின் விபரம்.

1. தேவகோட்டை ராம வீர. வுக்கு க. முத்துப்பட்டணம் அ. ராம. நா. சித. மாறலாய் அக்ஷய வருஷம் சித்திரை மாதம் 1 தேதி மதராஸ் நடப்பு வட்டிக்குமேல் வெயன் வீசம் வட்டிக்கு எழுதிக்கொடுத்திருக்கிற அண்டிமாண்ட் 1-க்கு

| | |
|---|---|
| கொடுக்கவேண்டியது அசல் ரூ. 6550-ம் மேற்படிக்கு நாளது தேதிவரையில் உத்தேசம் வட்டி ரூ 600-ம் வட்டி முதலுள்பட | 7150 0 0 |
| 2. காரைக்குடி ஆ. வி. பழ. வக்கு அக்ஷய௵ வைகாசி மாதம் 18 தேதியாக மதராஸ் நடப்பு வட்டிக்குமேல் வெயன் வீசம் வட்டிக்கு எழுதிக்கொடுத்திருக்கிற கையெழுத்து லெட்டர் 1க்கு கொடுக்கவேண்டியது அசல் ரூ 6288-11-6ம் மேற்படிக்கு நாளது தேதி வரை வட்டி ரூ. 520-ம் ஆக வட்டி முதலுள்பட | 6808 11 6 |
| 3. இரங்கூன் ஆத. பழ. கு. பழ. சுப. வக்கு அக்ஷய வருஷம் மாசி மாதம் 27-ம் தேதியாக கொடுக்கவேண்டியது ரூ. 3004—14—0ம் மேற்படி தொகைக்கு நாளது தேதி வரைக்கும் உத்தேசம் வட்டி ரூ. 60ம் ஆக வட்டி முதலுள்பட | 3064 14 6 |
| 4. 1927ம் ௵ ஜனவரி மாதம் 27-ம் தேதி நேமம் கந்தசாமி பொறையருக்கு 100க்கு ½ வீதம் வட்டியுடன் கொடுப்பதாய் எழுதிக்கொடுத்திருக்கிற பிராம்சரி நோட்டு அசல் கொடுக்கவேண்டியது ரூ. 2700-ம் நாளது தேதி வரையில் உத்தேசம் வட்டி ரூ. 40-ம் ஆக வட்டி முதலுள்பட நான் கொடுக்கவேண்டியது | 2740 0 0 |
| 5. பாடசாலைக்குப் பண்டு வைக்கவேண்டிய வகையில் | 5000 0 0 |
| ஆக மொத்தம் | 24763 9 6 |

(ஒப்பம்) பழ. வெ. ராம. இராமநாதந் செட்டியார்.

மேற்படி உயில் 1927-ம் ௵ ஏப்ரல்-௴ 30௳ ஆதிச்சபுரம் சப்ரிஜிஸ்டரார் ஆபீஸில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. மேற்படி இராமநாதன் செட்டியாரவர்கள் 1928-ம் ௵ மார்ச்சு௴ 26௳க்குச் சரியான பிரபவ-௵ பங்குனி-௴ 14௳ இறந்துபோய்விட்டார்.

கோவிலுக்கு வெள்ளியில் செய்துவைக்கப்பட்டுள்ளவைகளும், பிரமோற்சவம் முதலிய விசேஷங்களில் உபயோகிக்கப்பட்டு வருகின்றவைகளும், ஆகிய 'அபிஷேகக் கலயம் (1), அரிக்கவட்டகை (1), காளாஞ்சி (4), விபூதி மடல் (1), பன்னீர்ச்செம்பு (2), சந்தனப்பேலா (2), தூபக் கால் (1), தீபக்கால் (1), அஞ்சடுக்குத்தீபம் (1), ஒருமுக கற்பூரதீபம் (1), இடபதீபம் (1), கஜதீபம் (1), நாகதீபம் (1), புருஷதீபம் (1), சிங்கதீபம் (1), கும்பதீபம் (1), பஞ்சதாப்பாளதீபம் (5), சுருட்டி (1), குடை (1), கண்ணாடி (1), விசிறி (1), சாமரம் (2), ஏழுமுகம் (வில்வக்கிளை) கற்பூரதீபம் (1), இடபதடி (2)' என்னும் வெள்ளிச்சாமான்கள் இருக்குவேத பாடசாலையிலிருக்கின்றன. அவைகளை மேற்படி உயிலில் எழுதாமல் விடுபட்டிருப்பதால், அவைகள் கோவிலிலேயே இருக்கவேண்டியவைகளென்பது நன்கு விளங்குகின்றன.

மேற்படி உயிலில் கண்டபடி 'திருவனந்தல், குழித்தளிகை, உருத்திரசெபம், தேர்மண்டபப்படி, சுவாமி நித்தியப்படி அருச்சனை, அம்பாள் சந்நிதி நித்தியப்படி தீபத்தெண்ணெய், மகாசிவராத்திரி ஒருகாலம்' என்னும் கட்டளைகளுக்காக பிரதி வருஷத்திலும் கொடுக்கவேண்டிய ரூ. 874-8-0-யும் மேற்படி உயில் தருமபரிபாலகராகிய வெ. ராம. வெ. வெங்கடாசலஞ் செட்டியாரவர்கள் கொடுக்காமல் 1929-ம் ௵ முதல் நிறுத்திவிட்டு மௌனஞ்சாதிக்

கின்றார். 1929-ம் ஹூ முதல் 1933-ம் ஹூ வரையில் கூடிய வட்டி முதல் தொகை ரூ. 6220. இந்த ரூபாய் ஆறாயிரத்து இருநூற்றிருபதும் மேற்படி வெங்கடாசலஞ் செட்டியார் அவர்கள் கோவிலுக்குக் கொடுக்கக் கடமைப்பட்டவரா யிருக்கின்றார். இதனைக் கேட்டு வாங்கிக் கோவிலைச் சரிவர நடத்தக்கூடிய பஞ்சாயத்தார்களிருப்பதாகத் தெரியவில்லை. பிரமோற்சவத்தில் நடத்தவேண்டிய பிராமண போஜனத்தையும், 1929-ம் ஹூ முதல் நிறுத்திவிட்டார். இருக்குவேத பாடசாலையில் மேற்படி உயில்படி 12 பிள்ளைகள் வைத்து நடத்தவில்லை. சில பிள்ளைகள் வைத்து நடத்துகின்றார். அப்பிள்ளைகளுக்காக வருஷம் ஒன்றுக்கு எக்காரணத்தை முன்னிட்டும் ரூ. 1000 (ஆயிரத்து) க்குமேல் செலவாகாது. பிரதி வருஷத்திலும் ரூ. 1000 மீதமேயாகும். மற்றைய தருமங்களும் நடந்துவருமென்று நம்புவதற்கு ஆதாரமில்லை. மேற்படி உயிலில்கண்ட ஒவர்க்குடி கிராமத்துக்குச் சரியான வடிகாலில்லை. கவர்ன்மெண்டாரவர்கள் வடிகால் சம்பந்தமாக ஏற்படுத்தும் திட்டத்தில் பாதியிற் பாதியை மேற்படி வெங்கடாசலஞ் செட்டியாரவர்களும், பாதியிற் பாதியை மற்றைய மிராசுதார்களும் கொடுத்துவிடுகிற பட்சத்தில் கவர்ன்மெண்டாரவர்கள் சரியான முறையில் வடிகால் வைத்துக்கொடுக்கத் தடையில்லை. கவர்ன்மெண்டாரவர்கள் உத்தரவுப்படி பணங்கொடுக்காத காரணத்தினால் வடிகால் வைக்கப்படாமலிருக்கிறது. வடிகால் வைக்காத பட்சத்தில் மேற்படி கிராமம் எக்காலத்திலுங் கங்காதேவிக்குச் சொந்தமே யாகும். இருக்குவேத பாடசாலைக் கட்டிடமிருக்கும் இடமானது, ஆதியில் கோவிலுக்குச் சொந்தமானது. 1911-ம் ஹூத்தில் ரூ. 600-க்கு நன்செய் நிலம் வாங்கிக் கொடுத்துப் பரிவர்த்தனை செய்தது. மேற்படி பரிவர்த்தனை நன்செய் நிலமானது, 1923-ம் வருஷத்தில் முன்

பாத்தியத்திற் போய்விட்டது. ஏலம்போன தேதி முதல் இன்று வரையில் மேற்படி நன்செய் நிலத்துக்கு எவ்வித பரிகாரமும் ஏற்படவில்லை. 1924-ம்ஷ முதல் 1933-ம்ஷ வரையில் மேற்படி ரூ. 600-க்கும் மீ 1-க்கு நூற்றுக்கு வட்டி 1-வீதம் கூடிய வட்டி முதல் தொகை ரூ. 1867. இந்த ஆயிரத்து எண்ணூற்று அறுபத்தேழு ரூபாய்க்கும் மேற்படி வெங்கடாசலஞ் செட்டியாரவர்கள் கோவிலுக்கு நன்செய் நிலம் வாங்கிக்கொடுக்கவும், நன்செய் நிலம் வாங்கிக் கொடுக்காத பட்சத்தில் மேற்படி பாடசாலைக் கட்டிடமிருக்கும் இடத்திற்குப் பகுதிப் பத்திரம் எழுதிக் கொடுக்கவும் கடமைப்பட்டவரா யிருக்கின்றார்.

1920-ம் ஷ ஜூன்மீ 28உ மேற்படி பழ. வெ. ராம. இராமநாதன் செட்டியார் அவர்கள், திருக்களர் வெ. திருவேங்கட கண்டியரிடத்தில் ரூ. 21500-க்கு 'நன்செய் ஏகர் 27 சென்ட் 50, புன்செய் வகையரு ஏகர் 2 சென்ட் 27, ஓட்டுவீடு வகையரு' என்பவற்றைக் கிரய சாசனம் வாங்கியிருக்கிறார். அந்தச் சாசனத்தில் 'மன்னார்குடி இலட்சுமண முனைதிரையரிடத்தில் கிரயத்துக்கு வாங்கி, திருக்களர் ஸ்ரீ பாரிசாதவனேஸ்வர சுவாமிக்காக, மேற்படி கோவில் பஞ்சாயத்து பூவனூர் இராசு முதலியார் 1, மேற்படி கோவில் பஞ்சாயத்து S. இரங்கசாமி முதலியார் 2, இவர்களிடம் 8-வருஷ காலமாய் பரிவர்த்தனையாக விட்டு, மேற்படி சுவாமிக்குச் சொந்தமான நிலத்தை, மேற்படி பஞ்சாயத்தார்களிடம் பரிவர்த்தனை வாங்கி, நான் சர்க்கார் கிஸ்தி செலுத்தி நான் அனுபவித்துவருகிற நன்செய்' என்று எழுதப்பட்டிருக்கிறது. 'கிரயத்தொகை, சர்வே நெம்பர், நிலத்தின் விஸ்தீரணம்' காணப்படவில்லை. பரிவர்த்தனை சாசன

மிருப்பதாகவாவது, அதனை மேற்படி கிரய சாசனத்துடன் கொடுத்திருப்பதாகவாவது தெரியவில்லை. பரிவர்த்தனை செய்திருக்கும் பட்சத்தில், பரிவர்த்தனை சாசனத்தையும், இத்துடன் கொடுத்திருக்கிறேனென்று எழுதியிருக்கக்கூடும். இவ்வாறு எழுதாத காரணத்தினுல் பரிவர்த்தனை செய்யவில்லையென்பது நிச்சயமேயாகும். கோவில் நிலத்துக்கு மாத்திரம் 'பரிவர்த்தனைக் கட்டளை சர்வே 220 நெம்பர் ஏ லெட்டர் ஏகர் 2 சென்ட் 59, மேற்படி கட்டளை சர்வே 245 நெம்பர் ஏ லெட்டர் ஏகர் 2 சென்ட் 88, பனைமரங்கள்' என்று கண்டிருக்கிறது. ரி சர்வேயில் 'சர்வே 220-ல் 2. ஏகர் 2 சென்ட் 48, சர்வே 245-ல் 2. ஏகர் 3' என்றிருக்கிறது. இந்நிலத்துக்கு 'கப்பலடிக்காடு' என்று பெயர். இந்த நிலமானது மேற்படி சாசனத்திற் கண்ட திருவேங்கட கண்டியருடைய நிலத்திற்குப் பக்கத்திலிருக்கிறது. இதன் கிரயம் மேற்கண்ட சாசனப்படி ரூ. 4005 ஆகிறது. மேற்படி இலட்சுமண முனைதிரையரிடத்தில், மேற்படி திருவேங்கட கண்டியர் கிரய சாசனம் வாங்கிய நிலத்துக்கு 'கீழக்கருப்பன்சேரி' என்று பெயர்; சர்வே 54-ல் 1. ஏகர் 4 சென்ட் 8, அதன் கிரயம் ரூ. 1300. அந்த நிலமானது கோவில் நிலத்துக்கும், மேற்படி கிரயசாசனத்திற் கண்ட நிலத்துக்கும் சம்பந்தமில்லாத தனித்தவிடத்தில் கடைமடைபாய்ச்சலில் இருக்கிறது. இதன் விபரங்களையெல்லாம் 1912-ம் வருஷத்தில் மேற்படி இலட்சுமண முனைதிரையரிடத்தில் மேற்படி திருவேங்கட கண்டியர் வாங்கிய கிரய சாசனத்திற் காணலாகும். மேற்படி வெ. ராம வெ. வெங்கடாசலஞ் செட்டியாரவர்கள் அனுபோகத்திலிருக்கிற கோவில் நிலத்தின் கிரயம் ரூ. 4005-ல் மேற்படி இலட்சுமண முனைதிரையரிடத்தில் மேற்படி திருவேங்கட கண்டியர் கிரயசாசனம் வாங்கி, கோவில் அனுபோகத்திலிருக்கிற

நிலத்தின் கிரயம் ரூ. 1300 நீக்கி, பாக்கி ரூ. 2705. இந்த இரண்டாயிரத்து எழுநூற்றைந்து ரூபாய்க்கும் 1914-ம் வருஷம் முதல் 1933-ம் வருஷம் வரையில் மாதம் ஒன்றுக்கு நூற்றுக்கு வட்டி ஒன்று வீதம் கூடிய வட்டி முதல் தொகை ரூ. 26962 இந்த இருபத்தாறுயிரத்து தொளாயிரத்து அறுபத்திரண்டு ரூபாயும், மேற்படி வெ. ராம. வெ. வெங்கடாசலஞ் செட்டியார் அவர்கள் கோவிலுக்குக்கொடுக்கக் கடமைப்பட்டவரா யிருக்கின்றார். கருணை தங்கிய எண்டோமெண்ட் போர்டாரவர்களும், கனந்தங்கிய கமிட்டியாரவர்களும் மேற்கண்டவற்றை யெல்லாங் கவனித்து, தக்க பரிகாரஞ் செய்வார்களாக.

## கிருஷ்ணசாமி ஐயர்.

இவர் திருக்களருக்கு வந்து கோவில் பஞ்சாயத்தார்களாகிய "கோபாலசாமி முதலியாரவர்கள், சோமசுந்தர முதலியாரவர்கள்' என்பவர்களுடைய பிரதிநிதியாக சுமார் 10-வருஷ காலம் கோவில் விசாரணை பார்த்துவந்தார். இவர் காலத்தில் கோவிலுக்குச் சொந்தமான திருநந்தனவனம், பசுமடம், இருக்குவேத பாடசாலை, எசுர்வேத பாடசாலை, சாமவேத பாராயணம், குருபூசை மடம், விளக்குடி தென்னந்தோப்பு' என்பவற்றின் பரிவர்த்தனை நிலங்கள் பறிமுதலாயின. அவற்றைப்பற்றி மேற்படி நிலங்கள் வாங்கிப் பரிவர்த்தனை கொடுத்தவர்களுக்குத் தெரிவித்து, எவ்விதமான பரிகாரமுந் தேடாமல் மௌனமாக இருந்துவிட்டார். தேவஸ்தானங் கமிட்டியாரவர்களுக்குத் தெரிவித்து, அவர்கள் உத்தரவுப்படி நடவடிக்கைகள் நடத்தியதாகவுந் தெரியவில்லை மேற்படி பரிவர்த்தனை நிலங்களின் கிரயம் ரூ. 2750. இந்த இரண்டாயிரத்து எழுநூற்றைம்பது ரூபாய்க்கும் வருஷம் 10-க்கு மாதம் ஒன்றுக்கு

நூற்றுக்கு வட்டி 1 வீதம் கூடுதலாகும் வட்டி முதல் தொகை ரூ. 8543 இந்த எண்ணுயிரத்து ஐந்நூற்று நாற்பத்து மூன்று ரூபாயில் விளக்குடித் தென்னந்தோப்புக்காக மேற்படியூர் கரு. சிவசாமி நாடார் ரூ. 1555க்கும்; இருக்குவேத பாடசாலைக்காக வெ. ராம. வெ. வெங்கடாசலஞ் செட்டியார் அவர்கள் ரூ. 1867-க்கும்; 'திருநந்தனவனம், பசுமடம், எசுர்வேத பாடசாலை, சாமவேதபாராயணம், குருபூசைமடம்' என்பவற்றிற்காக மேற்படி தருமங்களின் தருமகருத்தாக்கள் ரூ. 5121-க்கும் கோவிலுக்கு நிலங்கள் வாங்கிக் கொடுக்கக் கடமைப்பட்டவர்களாயிருக்கின்றார்கள். மேற்படி நிலங்கள் பறிமுதலானவுடன் மேற்படி தருமகருத்தாக்களுக்குத் தெரிவித்திருக்கும் பட்சத்தில் அப்போதே வேறே நிலங்கள் வாங்கிக் கொடுப்பதோடு அந்த நிலங்கள் கொடுத்தவர்களிடத்திலும் கிரயத்தை வசூல் செய்திருப்பார்கள். மேற்படி தருமங்களுக்கு ஆயிரமாயிரமாகப் பிரதி வருஷத்திலும் செலவிடுகின்றவர்களானதால் இதுவரையில் நிலங்கள் வாங்கிக் கொடுக்காதிருக்கக் காரணமில்லை. இதுவரையில் அவர்களுக்குத் தெரிவிக்காதிருந்த காரணத்தினுல் மேற்படி அசல் தொகை ரூ. 2750-க்கும் ஏற்பட்ட வட்டி ரூ. 5793-ம் மேற்படி கிருஷ்ணசாமி ஐயர் கொடுக்கக் கடமைப்பட்டவராகின்றார்.

மேற்படி கிருஷ்ணசாமி ஐயர் ஒரு நவராத்திரி உற்சவத்தில் செய்யத்தகாத காரியத்தைச் செய்து, அமுதவல்லியம்பாளுடைய 'மஞ்சள், பச்சை, நீலம்' என்னும் எழு பட்டுப்புடவைகள்; விலையேறப்பெற்ற ஐந்து படுதாக்கள்; 'அசுமானகிரிகள், அசைந்தாடுமாலைகள், வாசன் மாலை, மகரதோரணக்கொடி' என்பனவாகிய அலங்காரச்

சாமான்கள் முதலியவற்றைக் கொளுத்தி, ரூ. 1500 நஷ்ட முண்டுபண்ணினர். இவருடைய காலத்தில் வசந்த மண்டபத்துக்கெதிரில் சுவாமி சந்நிதியிலிருந்த கொட்டகை, கோபுரவாயிலுக்கு வடபுறமிருந்த வாகனமண்டபம், மேற்படி வாயிலுக்குத் தென்புறமிருந்த விறகுவாடிக் கட்டிடம், திருக்குளத்துக்குத் தென்கரையிலிருந்த குருக்கள்வகையறு ஐந்து வீடுகள், தேர்நிலைகளுக்குத் தெற்கு வடக்குக் கட்டிடங்கள் என்பன இடிந்துபோனவகையில் நஷ்டம் ரூ. 30000. மழையொழுக்கு ஆரம்பித்தபோதே கவனித்துப் பழுது பார்த்திருந்தால் இந்த நஷ்டம் நேர்ந்திருக்காது. மேற்படி குருக்கள் வகையறு ஐந்துவீடுகள் கட்ட சௌகரிய மில்லையென்று தேவஸ்தானம் கமிட்டியாரவர்களுக்கு இயாதாஸ்து எழுதிய க. வீ. சொ. வீ. அழகப்ப செட்டியார் அவர்கள் கோவிலுக்குள் ஒரு வீண் கட்டிடம் கட்டச் செய்திருப்பதோடு மதிலுக்கு வெளியில் கல்லு நட்டு முட் கம்பி போடப்போகின்றாராம். இந்த வேலைகள் எதற்காகச் செய்கின்றாரோ! அது கடவுளுக்குத்தான் தெரியும். தேர்முட்டிகளுக்குத் தெற்கிலும் வடக்கிலும் இடிந்து விழுந்துகொண்டிருக்கின்ற கட்டிடங்களைப் பழுது பார்த்துப் புதுக்கிக் கட்டிவிடுகிற பட்சத்தில் முற்காலம் போல் எக்காலத்திலும் தேர்ச்சாமான்கள் வைத்துக் கொள்ளலாம். தேர்கள் கட்டும்போது எடுக்கவும், பிரிக்கும் போது அடுக்கவுஞ் சோதாயிருக்கும். வேறிடமாயிருந்தால் தேர்கள் கட்டும்போது, எடுத்துக்கொண்டுவரவும்; பிரிக்கும் போது கொண்டுபோய் அடுக்கவும் பொருட்செலவு மிகுதி யாகும். மேற்படி கட்டிடத்தில் பாக்கியிருக்கிற இடங் களுக்கு வாடகையும் கிடைக்கும்.

மேற்படி கிருஷ்ணசாமி ஐயர் காலத்திலேயே நவராத்திரி உற்சவத்தில் தீப்பிடித்தபோது உருகிய

'வெள்ளிப் பெரியநாகாபரணக்குவளை, வெள்ளிப்புதாலிகள், வெள்ளிப்புடிக்குகள், வெள்ளிமணிகள், பதக்கங்கள். நெற்றிப் பட்டம்' என்பன காணமற்போன வகையில் ரூ. 1350. மேற்படி வெள்ளிச்சாமான்கள் காணமற்போன காலத்தைச் சுமார் 7 வருஷத்துக்கு முற்பட்ட காலமாக வைத்துக் கொண்டாலும் மேற்படி ரூ. 1350-க்கும் மாதம் ஒன்றுக்கு நூற்றுக்கு வட்டி 1 வீதம் கூடுதலாகும் வட்டி முதல் தொகை ரூ. 2922. இந்த இரண்டாயிரத்துத் தொளாயிரத்து இருபத்திரண்டு ரூபாயில் 'நாகாபரணக்குவளை, வெள்ளிப் புதுலிகள்' என்பவற்றின் வட்டி முதல் தொகை ரூ. 2198-ம் பெட்டித்திறவுகோல் வைத்திருப்பவராகிய மேற்படி கிருஷ்ணசாமி ஐயரும்; வெள்ளிப்புடிக்குகள் வகையருச் சாமான்களின் வட்டி முதல் தொகை ரூ. 724-ம் வசந்தமண்டபத் திறவுகோல் வைத்திருப்பவராகிய சண்முகசுந்தரஞ் செட்டியார், மெய்காவல் இராமலிங்கம் என்பவர்களும் கொடுக்கக் கடமைப்பட்டவர்களா யிருக்கின்றார்கள்.

மேற்படி கிருஷ்ணசாமிஐயர் இவ்வூருக்குக் குடிவந்தது நற்காலந்தான். இவருக்கு இவ்வூரில் 'சாவித்திரி தரிசனம்; நன்செய் நிலம் ஏகர் 3 சென்ட் 34 (மா 10); பஞ்சாயத்துப் பவர்ப் பிரதிநிதிப்பதவி என்னும் மூன்று பெருங்காரியங் கள் சித்தியாயின. இவர் இவ்வூருக்கு வந்தவுடன் கோவிலில் வேலைபார்த்த பத்தராவி முதலியாரை நீக்க வேண்டிய தற்காக, அப்பத்தராவி முதலியார் எழுதியது போல கோபாலசாமி முதலியாரவர்களுக்கு ஒரு கடிதம் எழுதி அனுப்பினார். அவரவருக் கேற்றபடி நயவஞ்சகமாகப் பேசு வதில் அதிக சமர்த்தர். கோவிலூரில் இவருடைய காரியம் பலிதமாகவில்லை. அங்கு சாவித்திரி தரிசனமும் கிடைக்க

வில்லையாம். இங்கு 'சாவித்திரிதரிசனமும், கிருபாநோக்கமும்' சதா கிடைக்கின்றனவாம். இவருக்கு "ஒன்பதாமிடத்தில் இராசாவும், சுக்கிரதிசையும்" இப்போது வந்திருக்கின்றன போலும். இவர் பிரதி மாசத்திலும் 20-நாட்களுக்குக் குறையாமல் சிவபுரியில் சாகைவைத்துக் கொண்டு "சிதம்பரம், மஞ்சக்குப்பம்" முதலிய விடங்களில் தங்குவர். திருக்களரில் 10-நாட்கள் சாகைவைத்துக்கொண்டு "மன்னார்குடி, தஞ்சாவூர், கும்பகோணம்" முதலிய விடங்களில் தங்குவர். இவர் தன்னுடைய சேனாதிபதிகளாகிய "அமிர்தங்கண்ட பிள்ளை, முருகைய தொண்டைமான்" என்பவர்களைக் கொண்டு, காலாட்படைகளாகிய "பள்ளர், பறையர்"களை அணிவகுத்து, காக்கையன் பெண்சாதியாகிய பறைச்சி கையில் சாணிச்சட்டியாகிய கேடயமும், விளக்குமாறாகிய தண்டாயுதமுந் தோன்ற நான்குவீதிகளிலும் காமாதுரப்பேச்சுப் போர்புரிந்தார். இவர், மு. சுவாமிநாத உபாத்தியாயர் குடும்பப் பற்றுதல் நீங்கியவரென்பதையும்; அவர் "புகழ், புண்ணியம், பொருள்" என்பவற்றை விரும்பாதவரென்பதையும்; தேகம் அநித்தியமென்றுணர்ந்தவரென்பதையும்; கடவுளுக்குத் திருத்தொண்டுசெய்து, அவருடைய திருவடியடைதலே நித்தியமெனக்கருதியவரென்பதையும் நன்குணரச் சக்தியின்றி, அவர் வைத்திருந்த வேலியை வெட்டியெறிதல், அவரெழுதுவதை விசாரித்தல், அவருடைய பாடசாலைக்குப் போகிறவர்களை விசாரித்தல், அவருடன் பேசுகிறவர்களை விசாரித்தல், அவருடன் பேசக்கூடாதென்று தடுத்தல், அவருடைய பாடசாலையை ஆத. பழ. சிதம்பர செட்டியாரவர்களிடத்திற்சொல்லி பிரித்துக் காலிசெய்து விடுகிறேனென்று சொல்லுதல், அவர் தன்னைவந்து பார்க்காமலிருக்கின்றாரே யென்று சொல்லுதல், அவரை வரும்படிசெய்யுங்களென்று சொல்லுதல் முதலிய சூட்சிகள் செய்கின்றார்.

மேற்கண்ட காரணங்களினல் மேற்படி கிருஷ்ணசாமி ஐயருக்குக் கோவிலைக் கவனிப்பதற்குப் போதிய சாவகாச முண்டா? இவர் கோவிலைக் கவனிக்கவில்லையென்பதற்குக் கோவில் பரிவர்த்தனை நிலத்தை சேஷாத்திரி ஐயங்கார் நிராக்ஷேபணையாக வசப்படுத்திக்கொண்டு போனதே தக்க சான்ருகும். இவரைப்போன்ற அசாமிகளை நியமித்து, அவர்களுக்குக் கோவில் பணத்தைப் பங்கிட்டுக் கொடுக்க வேண்டியதற்காகத்தான் கோவிலுக்கு க. வீ. சொ. வீ. அழகப்ப செட்டியாரவர்களைப் பஞ்சாயத்தாக நியமித்திருக்கிறது.

## அமிர்தங்கண்ட பிள்ளை.

இத்தலத்தில் "இரங்கன்கண்ட பிள்ளை" என்னும் பெயரையுடைய ஒருவர் குடியேறியிருந்தார். அவருக்கு படிக்கவும், பொய்சொல்லவும் அறவே தெரியாது. அவர் சத்தியமும் பக்தியும் நிறைந்தவர். அவருக்கு மூன்று ஆண்களும், இரண்டு பெண்களுமுண்டு. ஆண்களுக்கு முறையே "நடேசன்கண்ட பிள்ளை, பக்கிரிகண்ட பிள்ளை, அமிர்தங்கண்ட பிள்ளை" என்று பெயர். அமிர்தங்கண்ட பிள்ளை மாத்திரம் படித்தவர். கோவில் விசாரிப்பு வேலையை ஏற்கனவே பக்கிரிகண்ட பிள்ளை பார்த்துவந்தார். இப்போது அமிர்தங்கண்ட பிள்ளை பார்த்துவருகின்ருர். பக்கிரிகண்ட பிள்ளை பார்த்த காலத்தில், தன் தாயார் பார்வதி பெயருக்கு ரூ. 423-க்கு கிரயசாசனம் வாங்கியிருந்த வைக்கோற்போர்க் கட்டளை நன்செய் சர்வே 35-ல் 7. ஏகர் 1 சென்ட் 41 நிலத்தை 1913-ம் வருஷத்தில் கோவில் அனுபோகத்தில் சேர்த்துவிட்டு, கோவிலுக்குச் சொந்தமாயிருந்த ரூ. 1692 பெறுமானமுள்ள காரியங்தோப்படி நன்செய் சர்வே 284ல் 2

ஏகர் 1 செண்ட் 60, வண்ணான் குளத்தடி நன்செய் சர்வே 315-ல் 1. செண்ட் 28 ஆக ஸ்தலம் இரண்டுக்கு ஏகர் 1 செண்ட் 88. இந்த ஒரு ஏகர் எண்பத்தெட்டு செண்ட் நிலத்தையும், மூவரும் அனுபவித்துக்கொண்டிருந்து சுமார் 8 வருஷத்துக்கு முன் தங்களுடைய அத்தை மகனாகிய குப்புசாமிக் காலிங்கராயரிடத்தில் ரூ. 660-க்கு சர்வே 284-ல் 2. ஏகர் 1 செண்ட் 60 நிலத்தில் ஏகர் 1, செண்ட் 10 கிரயசாசனஞ் செய்து கொடுத்துவிட்டு, பாக்கி செண்ட் 78 நிலத்தை அனுபவித்துக்கொள்ளுகின்றார்கள். கோவிலுக்கும் மேற்படியார்களுக்கும் 'பரிவர்த்தனை' முதலிய எவ்வித தஸ்தவேஜிகளும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. கவர்ன்மெண்ட் கணக்கில் 'சர்வே 284-ல் 2. சர்வே 315-ல் 1. என்னும் இரண்டு ஸ்தலங்களும் ஸ்ரீ பாரிசாதவனேஸ்வர சுவாமி பெயராலும்; 'சர்வே 35-ல் 7. மேற்படியார்கள் பெயராலும் இருப்பதாகத் தெரியவருகின்றன. கோவில் நிலமென்று ஒருவரும் கிரயசாசனம் வாங்கிக்கொள்ளச் சம்மதிக்காத காரணத்தினால் சொந்த அத்தை மகனும், ஒரே குடும்பமாகவுள்ள சகோதரி புருஷனுடைய தமையனுமாகிய மேற்படி குப்புசாமிக் காலிங்கராயரிடத்தில் கிரயசாசனஞ் செய்து கொடுத்திருக்கின்றார்கள். அந்தச் சாசனப்படி மேற்படி கோவில் நிலம் ஏகர் 1 செண்ட் 88-க்கு கிரயம் ரூ. 1128 ஆகிறது. மேற்படி சர்வே 284-ல் 2-க்குப் பக்கத்தில் ஒரு ஸ்தலமும்; சர்வே 315-ல் 1-க்குப் பக்கத்தில் ஒரு ஸ்தலமும் மடத்தில் கிரயசாசனம் வாங்கியிருக்கிறபடி கிரயம் ரூ. 1692 ஆகிறது. கோவில் நிலமென்று ஒருவரும் கிரயத்துக்கு வாங்கிக்கொள்ளப் பிரியப்படாத காரணத்தினாலும், நெருங்கிய பந்துவாகிய அத்தை மகனிடத்தில் விற்கிரயஞ் செய்த காரணத்தினாலும் ரூ. 330 தள்ளுபடிசெய்து கிரயசாசனஞ் செய்திருக்கின்றார்கள். மேற்படி

ரூ. 1692-ல் அவர்கள் கோவில் அநுபோகத்தில் விட்டிருக்கிற நிலத்தின கிரயம் ரூ. 423-நீக்கி, பாக்கி ரூ. 1269-க்கும் 1914-ம் வருஷம் ஜனவரி மீ 1-உ முதல் 1933-ம் வருஷம் டிசம்பர் மீ 31உ வரையில் வருஷம் 20-க்கு மாசம் ஒன்றுக்கு வட்டி நூற்றுக்கு மூன்று வீசம் கூடுதலாகும் வட்டி முதல் தொகை ரூ. 12187. இவ்வாறு 'வேலி பயிரை யழிப்பதுபோல' கோவிலில் விசாரிப்புப் பார்ப்பவர்களே, கோவில் தாவர சொத்தை, எவ்வித காரணமுமில்லாமல் கைப்பற்றிக்கொண்டு, கோவிலுக்கு நஷ்டத்தையுண்டுபண்ணுவார்களே யானல், கோவில் எப்படி நன்னிலைமையிலிருக்கும்? இதைக் கவனித்துச் சீர்திருத்தஞ்செய்யச் சக்தியில்லாத 'குட்டிச்சுவர்போன்றவர்'களைப் பஞ்சாயத்தார்களாக நியமிப்பதிற் பிரயோசனம் என்னே? தாவர சொத்திலேயே மேற்கண்டபடி நஷ்டத்தை யுண்டுபண்ணியவர்கள் ஜங்கம சொத்துக்களாகிய நெல்லிலும் பணத்திலும் எவ்வளவோ கைப்பற்றி யிருப்பார்கள். இப்பேர்ப்பட்டவர்களை நம்பி 'நெற் கண்டுமுதல் செய்தல், பணம் வசூல் செய்தல், மெய்க்காடெழுதல், கூலி கொடுத்தல்' முதலியவற்றை எப்படிச் செய்யச்சொல்லலாம்? இருட்டு வீட்டிற் போனாலும் திருட்டுக்கை சும்மாவிராதே! இதற்குத்தான் ஒரு விசாரிப்புக்கு வருஷம் ஒன்றுக்கு நெற்கலம் 48 கொடுக்கவேண்டியதற்குப்பதிலாக மேற்படி அமிர்தங்கண்டபிள்ளைக்கு நெற்கலம் 60-ம் மானியத்தில் இருபோகத்துக்கும் கண்டுமுதலாகும் நெற்கலம் 15-ம் ஆக நெற்கலம் 75 கொடுக்கின்றார்கள் போலும். இருபது வருஷ காலங்களாக மேற்படி அமிர்தங்கண்டபிள்ளை வகையறாப் பேர்கள் மேற்கண்டபடி. கோவிலுக்கு நஷ்டமுண்டுபண்ணிவருவது, பஞ்சாயத்தார்களுக்கும் அவர்களுடைய பிரதிநிதிகளுக்கும் தெரியாமலிருக்க நியாயமில்லை. ஒரு சமயம் பஞ்சாயத்தார்களுக்குத் தெரியாவிடினும், பிரதிநிதிகள் எல்லாருக்கும்

தெரிந்திருக்குமென்பது நிச்சயமே. தெரிந்துகொள்ளக் கடமைப்பட்டவர்களாகிய மேற்படி பிரதிநிதிகள் தெரிந்து கொள்ளாதவர்களைப்போல, மேற்படி அமிர்தங்கண்டபிள்ளை வகையறாப் பேர்களுக்கு ஒற்றுமையாக இருந்திருப்பதால், மேற்படி பிரதிநிதிகளெல்லோரும் கோவிற் பொருள்களை வேட்டையாடினார்களென்பதும்; அங்ஙனம் வேட்டை யாடாத பட்சத்தில் கோவிலுக்குக் கடனேற்படாதென் பதும்; வேட்டையாடிய காரணத்தினால் வெறுங்கையோடு இவ்வூருக்கு வந்த கிருஷ்ணசாமி ஐயர் தாயார் பெயருக்கு நன்செய் நிலம் மா 10 வாங்கப்பட்டிருக்கிறதென்பதும்; மேற்படி கண்ட பிள்ளை வகையறாப்பேர்கள் தந்திரோ பாய மந்திரவசியர்களென்பதும் அறிவாளிகளுக்கு நன்கு விளங்காமற் போகாது. சென்ற வருஷத்தில் மேற்படி அமிர்தங்கண்ட பிள்ளை குமாரமங்கலம் கிராமத்திலிருந்து நெல் மூட்டை 3-ம், அத்தியடிக் களத்திலிருந்து நெல் மூட்டை 2-ம் தன்னுடைய வீட்டிற்கு இராத்திரியில் கொண்டு வந்ததாயும்; சேரடிக் களத்திலிருந்து நெல்மூட்டை 8, இறந்துபோன கோதண்டபாணி வண்டியிலேற்றி மன்னார்குடிக்குக் கொண்டுபோய் விற்றதாயும் வதந்தி.

திருக்களரிலிருக்கும் க. முருகையன் என்பவர் தன் னுடைய அத்தைமகனாகிய, (மாடுமுட்டித் திருத்துறைப் பூண்டி ஆஸ்பத்திரியிலிருந்து, திருக்களருக்குக் கொண்டு வரும்போது 25—3—33-ல் இறந்துபோன) கோதண்ட பாணிக்குச் சொந்தமான ரூ. 200 பெறுமானமுள்ள வண்டி, வண்டிமாடுகள், ரூ. 75 பெறுமானமுள்ள கியாஸ் லைட்டுகள் மூன்று, ரூ. 35 பெறுமானமுள்ள வெண்கலப்பாத்திரங்கள், நெற்கலம் 50, அடிக்காமல் நெல்லோடிருந்த வைக்கோற் போர் 1, என்பவற்றை மேற்படி அமிர்தங்கண்ட பிள்ளை

O23:38·21193·T
N34
68280

வகையரு கைப்பற்றிக்கொண்டதாக 19-4-33-ல் மன்னார்குடி டிவிஷன் மகா-ள-ள-ஸ்ரீ டிப்டிகலெக்டர் துரையவர்களுக்கு ஒரு மனுவும், 27-4-33-ல் தஞ்சாவூர் ஜில்லா மகா-ள-ள-ஸ்ரீ கலெக்டர் துரையவர்களுக்கு ஒரு மனுவும் எழுதியிருக்கிறதாகத் தெரியவருகின்றது. மேற்படி சொத்துக்களைக் கோவிலுக்கு மேற்படி கோதண்டபாணி செய்துவந்த 'தைக்கார்த்திகை உபயம், மாதப்பௌர்ணமி பிரதோஷ உபயம்' என்பவை எக்காலமும் நடைபெறும் பொருட்டுக் கைப்பற்றியதாக வதந்தி. மேற்படி சொத்துக்கள் கோவில் கணக்கில் வரவு வந்திருக்கிறதாவென்று தேவஸ்தானம் இன்ஸ்பெக்டரவர்கள் கவனிப்பார்களாக. சென்ற வைகாசி மாசத்தில் கும்பாபிஷேகத்திற்காக விறகுக்கு வந்திருந்த கருவைமரங்களில் சிலவற்றை மேற்படி அமிர்தங்கண்டபிள்ளை அவருடைய வீட்டுக்கு முருகையகண்டியர் வண்டியில் ஏற்றிக்கொண்டு போனாராம்.

மேற்கண்ட காரணங்களினால் மேற்படி அமிர்தங்கண்டபிள்ளை நன்னடக்கையில்லாதவரென்பதும்; கோவிற்பொருள்களை அபகரித்துக்கொண் டிருக்கின்றாரென்பதும்; பஞ்சாயத்தார்களுடைய பிரதிநிதிகளை வசியஞ்செய்துகொள்ளுகின்றாரென்பதும்; சிவத்துரோகத்தைச் சிநேகிதாக நினைத்திருக்கின்றாரென்பதும் நன்கு புலப்படாமற்போகாது. இருபது வருஷங்களாக 'பஞ்சாயத்தார்கள் கோவிலைக் கவனிக்கவில்லை' என்பதற்கு மேற்கண்ட காரணங்களே, தக்க சான்றாகும். கருணைதங்கிய கமிட்டியாரவர்கள் மேற்படி அமிர்தங்கண்டபிள்ளை வகையறாப்பேர்களால் கோவிலுக்கு மேற்கண்டபடி ஏற்பட்டிருக்கும் நஷ்டத்திற்கு தக்க பரிகாரந் தேடுவதோடு, கோவில் நிலத்தைக் கோவில் அனுபோகத்திற்குக் கொண்டுவரத்தக்கவர்களைப் பஞ்சாயத்தார்களாக நியமித்துக், கோவில் நன்னிலைமையிலிருக்கும்படி செய்வார்களாக.

## சண்முகசுந்தரஞ் செட்டியார்.

இவர் மன்னார்குடிக்குப்போய், கோவிலுக்குவேண்டிய சாமான்கள் வாங்கிக்கொண்டுவருதல்; அச்சாமான்களைத் தன் வசத்தில் வைத்துக்கொண்டு, தினம் 'காலை, மாலை' இரண்டு வேளைகளிலும், பூசைப்படித்தரத்துக்கு, திட்டப்படி சாமான்கள் கொடுத்தல்; காலையில் எல்லாமூர்த்திகளுக்கும், மாலையில் சுற்றுக்கோயில் மூர்த்திகளுக்கும் பூச்சரங்கள் கட்டிக்கொடுத்தல்; நித்தியப்படி அருச்சனைக்கு 'வில்வம்' எடுத்துக்கொடுத்தல் முதலிய 'அறைதிருமாலையசாமி'யாகிய உட்துறைமணியமும்; திருநந்தனவனம் தருமகர்த்தாக்களின் சார்பாக 'சுவாமி, அம்பாள், சபாநாயகப்பெருமான், சோமசுந்தரப்பெருமான' முதலிய மூர்த்திகளுக்கு நித்தியப்படி 'தோடு, கொண்டைமாலை, மணிமாலை, தொடைமாலை, இண்டை, கண்ணி' முதலியன புஷ்பங்களின் வரவுக்கேற்றபடி கட்டிக்கொடுத்தலாகிய 'திருமாலை' உத்தியோகமும் பார்க்கின்றவர். இவருக்கு மாசம் ஒன்றுக்குத் திருநந்தனவனம் தருமகருத்தாக்கள் ரூ. 11-ம், கோவிலில் ரூ. 7—8—0-ம், அரிசி படி 45-க்குச் சாதமுங் கொடுக்கின்றார்கள். ஆனால் இவருக்கு ஏற்பட்ட சாதம் ஒன்பதுக்கு விடவேண்டிய அரிசி படி $1\frac{1}{2}$-யையும் தினப்படி விடாமல் ஒரே தேதியில் அரிசியாகவே எடுத்துக்கொண்டு போய் விடுகின்றார். இவரிடத்தில் 'திருவாபரண அறை, சாமானறை, திருமாலையறை, வசந்தமண்டபம்' என்பவற்றின் திறவுகோல்களிருக்கின்றன. 'திருமாலையறை, வசந்தமண்டபம்' என்பவற்றைப் பள்ளியறையாகப் பாவித்தவர்; 'வீட்டுக்கார ஆய்ச்சியையும், கூட்டுக்கார வலைச்சியையும்' பேதாபேதமாக நினையாதவர்; 'சைவம், அசைவம், என்ற உயர்வு தாழ்வு பாராட்டாதவர்; 'வலைப்பெண்களுக்கும்,

குலப்பெண்களுக்கும்' வித்தியாசம் பாராட்டாதவர்; வலைப் பெண்களைக்கொண்டு, சொந்தவேலைக ளெல்லாவற்றையும் முடித்துக்கொள்கின்றவர்; திருவிளக்குப் போடும் 'நாடிமுத்து' மெய்காவல் பார்க்கும் 'இராமலிங்கம்' என்னும் இரு வலைஞர்களிடத்திலும் மிக்க பேரன்புடையவர்; அதிலும் இராமலிங்கத்தினிடத்தில் அளவுகடந்த பேரன்புடையவர்; இவ்விருவர்களுடைய பேருதவியைப் பெரிதும் பெற்றுக்கொள்கின்றவர். இவர் அவரவருக்கேற்றபடி நய வஞ்சகமாகப் பெரிதும் பேசி தன் காரியத்தைச் சாதித்துக் கொள்வதில் அதிசமர்த்தர். இவரிடத்தில் 'வசந்தமண்டபத் திறவுகோலும், மெய்க்காவல் இராமலிங்கமும்' கையிலிருக்கும்போது, அவ்வசந்தமண்டபத்துக்குள்ளிருக்கின்ற 'வெள்ளிக்காளை'களினுடைய 'புடுக்குகள், மணிகள், பதக்கங்கள், நெற்றிப்பட்டம்' என்பன காணுமற்போனது ஆச்சரியமன்றோ! இவரும் பஞ்சாயத்தார்களுடைய பிரதிநிதியாகிய கிருஷ்ணசாமி ஐயரும் தொன்றுதொட்டு பள்ளிக்கூடத்துச் சிநேகிதர்களைப்போல அத்தியந்த சிநேகிதர்களாயிருக்கின்றார்கள். எப்படித்தான் வெளியாகும் போனது போனதுதான். பஞ்சாயத்தாரவர்களைக் கமிட்டியாரவர்கள் கேள்வி கேட்டால் என் காலத்தில் போகவில்லை என்காலத்தில் எல்லாம் சரியாயிருக்கிறதென்று எழுதியனுப்புவார். இந்தத் திருட்டைப்பற்றி 'திருக்களர் விளக்கம்' என்னும் புத்தகத்தில் 37-ம் பக்கத்தில் **வாகனங்களின் நிலைமை** என்ற மகுடத்தின் கீழ் எழுதியிருப்பதைப்பற்றி, மேற்படி சண்முகசுந்தரஞ் செட்டியார் காமாதுரமாக வாயில் வந்தபடி வைதாராம். மேற்படி புடுக்கு வகையறு வெள்ளிச்சாமான்களின் கிரயம் சுமார் ரூ. 350 பெறக்கூடும். திருட்டுப்போன காலத்தைச் சுமார் வருஷம் 7-க்கு முற்பட்டகாலமாக வைத்துக்கொண்டாலும்,

மேற்படி ரூ. 350-க்கும் மாசம் ஒன்றுக்கு நூற்றுக்கு வட்டி ஒன்று வீதம் வருஷம் 7-க்குக் கூடுதலாகும் வட்டி முதல் தொகை ரூ. 724. இந்த எழுநூற்று இருபத்து நான்குரூபாய்க்கும் மெய்காவல் இராமலிங்கம்ஜவாப்புதாரியா அல்லது மேற்படி சண்முகசுந்தரஞ் செட்டியார் ஜவாப்பு தாரியா? அல்லது மேற்படி கிருஷ்ணசாமி ஐயர் ஜவாப்பு தாரியா? இது ஒருபுறமிருக்க, மேற்படி சண்முகசுந்தரஞ் செட்டியார் இடிந்துபோன கோவிற் கட்டிடங்களின் கற்களை அள்ளிக்கொண்டுபோய் தன் வீட்டுப் பின்புறத்துக் 'குறடும், முற்றமும்' கட்டியிருக்கின்றார். சென்ற வைகாசி மாதம் கும்பாபிஷேகத்துக்கு விறகுக்குக் கொண்டுவந்து போட்டிருந்த கருவை மரங்களில் சிலவற்றை இவருடைய தகப்பனார் அள்ளி நந்தனவனத்திற் போட்டுவைத்திருந்து, இராத்திரியில் எடுத்துக்கொண்டுபோனார். மேற்கண்ட காரணங்களினால் 'சண்முகசுந்தரஞ் செட்டியாரும், மெய் காவல் இராமலிங்கமும்' ஒன்று சேர்ந்திருக்கின்றார்களென்பதும்; நாளடைவிலே திருட்டு நடந்து கொண்டிருக்கின்றன வென்பதும்; திருநந்தனவனம் தருமகருத்தாக்கள் பஞ்சாயத்தார்களாக வந்துவிடும் பட்சத்தில் தங்களுடைய சூட்சிகளைத் தெரிந்துகொள்வார்களென்று நினைத்து, அவர்கள் வராதிருக்கும் பொருட்டுக் 'கிருஷ்ணசாமி ஐயர், அமிர்தங்கண்ட பிள்ளை, சுப்பிரமணிய பிள்ளை' என்பவர்களோடு சேர்ந்து கிளர்ச்சி செய்கின்றார்களென்பதும் யாவரு மறிவர்.

## சுப்பிரமணிய பிள்ளை.

இவர் நெற்றரகு (புரோக்கர்) தொழில் செய்தவருடைய குமாரர்; தந்தைமதி மைந்தருக்குண்டென்பதை இவரிடத்திற் காணலாகும்; பலவிதம் எழுதுவதில் மிக்க வல்லவர். இவர் குருபூசைமடத்து உத்தியோகத்திலிருப்பவர். • சுயநலங் கருதி, மடத்துவேலைகளைப் பார்த்தல், திருப்பணி

வேலைகளைப்பார்த்தல், எழுத்துக்கூலி வேலைகளைப்பார்த்தல், மருந்துகளைச்செய்து கொடுத்தல், சமயத்துக்கேற்றபடி நடத்தல், அவரவருக்கேற்பப் பேசுதல், நயவஞ்சகம் பேசுதல், சனங்களை வசியஞ்செய்துகொள்ளுதல் முதலியவற்றிற் சிறந்தவர். இவர் விசேஷமாக "காரைக்குடி, கோட்டையூர், கோவிலூர், பாகனேரி' முதலிய வூர்களுக்குப் போய் வருவது யாவருமறிவர்; தொண்ணூற்றாறு நகரங்களிலும் நடைபெறும் விசேஷங்களெல்லாவற்றையும் இவரைக்கொண்டு தெரிந்துகொள்ளலாம்.

இவர் கோவிலூர் சுவாமிகள் 'பசுமடம் திருநந்தனவனம்' தருமகருத்தாக்களி லொருவராகிய காரைக்குடி ராம. ஆத. மெ. மெய்யப்ப செட்டியாரவர்களைக் கோவில் பஞ்சாயத்தை ஒப்புக்கொள்ளும்படி சொன்னதுபோலவும்; அதற்கு அவர் தன்னுடைய தகப்பனார் கோவிலுக்கு நிலம் வாங்கிவைக்கும் பொருட்டுக் கப்பலேறி 'பினாங்கு, சிங்கப்பூர்' முதலிய தீவுகளுக்குப்போய் சம்பாதித்துக் கொண்டுவந்து மடத்தில் கொடுத்த பணத்திலிருந்து மருதவனம் கிராமத்தில் கிரயசாசனம் வாங்கிவைத்திருக்கும் நிலத்தைக் கோவில் அனுபோகத்தில் விட்டுவிடுகிற பட்சத்தில் பஞ்சாயத்தை ஒப்புக்கொள்ளுகிறேனென்று சொன்னது போலவும் பிரஸ்தாபப்படுத்தினர்.

இவர் ஒரு சமயம் இடைக்காட்டூருக்கு சவுக்குக் கன்று வாங்கிக்கொண்டுபோய்க் கொடுத்துவிட்டுத் திரும்பிவந்தவுடன் கோட்டையூர் க. வீ. சொ. வீ. அழகப்ப செட்டியாரவர்களும், காரைக்குடி சா. நா. அ. அழ. அருணசலஞ் செட்டியாரவர்களும் பாகனேரிக்குப்போய் குருபூசை மடத்துத் தருமகருத்தாக்களிலொருவராகிய பெரி. அழ. மு. முத்துக்கருப்ப செட்டியாரவர்களையும், பஞ்சாயத்து ஒப்புக்

கொள்ளும்படி சொன்னதாகவும்; அதற்கு அவர் மூவருஞ் சேர்ந்து ஒரு பண்டுவைத்துச் சரிவரக் கவனித்து நடத்துவதாயிருந்தால் ஒப்புக்கொள்ளுகிறேனென்று சொன்னதாகவும்; இருவரும் மௌனமாகத் திரும்பி வந்துவிட்டதாகவும் பிரஸ்தாபஞ் செய்தார்.

இவர் வகையறு ஐந்து எதிரிகள் இந்தியன்பினல்கோட் '386, 347, 144' என்னுங் குற்றங்களைச் செய்ததாக, வாதி-மன்னார்குடி இலட்சுமண மூனதிரையர் என்பவரால் 12—8—930-ல் மன்னார்குடி ஸ்டேஷனெரி 2-வது வகுப்பு மாஜிஸ்திரேட் கோர்ட்டில் ஒரு பிரயாது கொடுபட்டிருந்ததாகத் தெரிகிறது. அந்தப் பிரயாதில் இரண்டாவது எதிரியாக இவரைச் சேர்க்கப்பட்டிருக்கிறது; அன்றியும் வாதி 10–8–930-ல் காலை 8 மணிக்கு திருக்களரில் தன்மகள் வீட்டிலிருந்ததாயும்; முதலாவது எதிரிவந்து, இரண்டாவது எதிரி அழைத்துக் கொண்டுவரச் சொன்னதாகச் சொல்லி, அழைத்துக்கொண்டு வந்ததாயும்; இரண்டாவது எதிரி தன்னுடைய சுவாதீனத்திலிருக்கிற குருபூசைமடத்துக் கட்டிடத்துக்குள் காலை $8\frac{1}{4}$ மணி முதல் மாலை 7 மணி வரையில் அடைத்துவைத்து எதிரிகள் கத்தியைக் காட்டிக் கொலை செய்துவிடுவதாகச் சொல்லிப் பயமுறுத்தி, முதலாவது எதிரிபேருக்கு, இரண்டாவது எதிரி 'ஒரு வர்த்தமானமும், மூன்று ரூபாய் இரண்டு ஸ்டாம்பில் ரூ. 200-க்கு ஒரு கிரயசாசனமும்' எழுதிப் பலவந்தமாகக் கையெழுத்து வாங்கிக்கொண்டதாயும்; மேற்படி சாசனம் மோசடி எனவும், அதின்படி யாதொரு தொகையும் எனக்குக் கிடைக்கவில்லையெனவும், முதலாவது எதிரி சாசனம்பெற அந்தஸ்துள்ளவனுமல்ல எனவும், இரண்டாவது எதிரி இப்படித்தான் சம்பாதிக்கிறார் எனவுங் கண்டிருக்கின்றன.

மேற்படி சுப்பிரமணியபிள்ளை இரண்டு மூன்று வருஷத்துக்கு முன், ஒரு நாள் மடத்து வண்டியில் மன்னார்குடிக்குப்போய்ச் சாமான்கள் வாங்கிக்கொண்டு, பூரணனந்த போதக்கடலில் மூழ்கிச் சட்டைப் பாக்கெட்டில் மணிபாக்ஸில் வைத்திருந்த "நூறு ரூபாய் நோட்டும், ஐம்பது ரூபாய் சில்லரையும்" அம் மணிபாக்ஸோடு "கடையிலோ, வழியிலோ, வெளிக்குப்போன விடத்திலோ, காலலம்பப் போன குளத்திலோ" விழுந்தவிடந் தெரிந்துகொள்ளச் சக்தியில்லாத நிலைமையில் ஆனந்தபரவசராய் அவ்வண்டியிலேயே திருக்களருக்கு வந்து, பணங்கெட்டுப்போனதைத் தெரிந்துகொண்டு, அவ்வண்டிக்காரனாகிய 'ஆறுமுகம்' என்பவனைக் (குருபூசைமடத்துக் களஞ்சியத்திலிருந்த நெல்லை நாளடைவிலே 'மூட்டை, மூட்டை'யாகக் கட்டிக்கொண்டு போன திருடனை ஒருநாள் பிடித்துக் கட்டிவைத்து அடித்து இரண்டு மோதிரங்களைப் பறித்துக்கொண்டதை நினைத்துக்கொண்டு) கட்டிவைத்து இரண்டு நாள் வரையில் அடித்துப்பார்த்துவிட்டு, ஒன்றும் வெளியாகாமையால் வெருட்டிவிட்டுவிட்டார். அவன் மிருந்த ஏழையானதால் தெய்வத்தினிடத்தில் தெரிவித்துவிட்டு, இருந்த ஊருக்குப் போய்விட்டான். அக்கிரமமாகச் சம்பாதித்த பணம் அநியாயமாகப் போய்விட்டதென்று வதந்தியுண்டாயிற்று.

இவர் திருக்களர்ச் சிவதலத்தைச் சுற்றிலும் 10 மைல் தூரம் வரையிலுமுள்ள கிராமங்களி விருக்கின்றவர்களுடைய 'கலியாணம், கருமாதி' முதலிய எல்லா விசேஷங்களுக்கும், குருபூசைமடத்திலிருக்கின்ற 'சமையற் பாத்திரங்கள், பிரப்பம்பாய்கள், தாம்பாளங்கள், சந்தனப் பேலா, பன்னீர்ச்செம்பு, பெட்ரூம் கியாஸ்லைட்டு' முதலிய

சாமான்களைக் கொடுத்துதவி, அவ்விசேஷங்களைச் சிறப்பிக்கச்செய்து, 'புகழையும், புண்ணியத்தையும்' அடைவதோடு, தருமகருத்தாக்களுக்கும் தக்க லாபத்தையும், புண்ணியத்தையும் சம்பாதிக்கின்றார்.

இவர் குருபூசைமடத்துக்கு நன்செய்நிலம் வாங்கிய வகையில் திருலோக்கி 'இரத்தினம்பிள்ளை முத்துக்குட்டி ஆய்ச்சி' என்பவர்களுக்குத் தக்க ஜாமீன்பேரில் கொடுக்க வேண்டிய தொகையைத், தரகுக்கு ஆசைப்பட்டுத் தகாத ஜாமீன்பேரில் வாங்கிக்கொடுக்கவேண்டியதற்காக மேற்படி இரத்தினம்பிள்ளையினுடைய மைத்துனர் 'முத்தையா பிள்ளை' என்பவரை அழைத்துக்கொண்டு 'பாகனேரிக்கும், காரைக்குடிக்கும்' நாலைந்து நடை போனார். அங்கே இவருடைய எண்ணம் பலிதமாகவில்லை. பலிதமாகியிருக்கும்பட்சத்தில் குருபூசைமடத்துக்கு பெருத்த நஷ்டமுண்டாகுமென்பதிற் சந்தேகம் சிறிதுமில்லை.

இவர், எசுர்வேதபாடசாலை தருமகருத்தா அவர்களிடமிருந்து, கொற்றமங்கலம் அரியரபுத்திரதேவரவர்களுக்குக் கிடைக்கவேண்டிய தொகையை வாங்கிக்கொடுத்துத் தரகு பெற்றுக்கொள்ளும்பொருட்டு மேற்படி அரியரபுத்திர தேவரவர்களை அழைத்துக்கொண்டு காரைக்குடிக்கு இரண்டு மூன்று நடை போனார். இவர் பின்னேடு சில கடிதங்களும் போனதாக வதந்தி. அங்கே இவர் எண்ணப்படி ஒன்றும் நடைபெறவில்லை. நடைபெற்றிருக்குமாகில் எசுர்வேத பாடசாலைக்குப் பெருத்த நஷ்டமுண்டாகியிருக்குமென்பதிற் சிறிதும் சந்தேகமில்லை.

இவர், தஞ்சாவூர் சப்கோர்ட்டு அசல் 75/928-ம் நெம்பரில் குருபூசைமடத்துச் சார்பாக வக்கீல் வைத்து

நடவடிக்கை நடத்தினர். டிக்ரியானவுடன் குருபூசை மடத்துக்குச் சாதகமாக டிக்ரியாகியிருப்பதாகப் பிரஸ்தாபப் படுத்தினர். வாதி அமீனு சகிதமாய் 21—9—33-ல் திருக்களருக்கு வந்து கோவில் நிலத்தோடு, குருபூசைமடத்து நன்செய் மா 11. நிலத்தையும் நிராக்ஷேபனையாக வசப் படுத்திக்கொண்டு போய்விட்டார். அவர் அமீனு சகிதமாய் வந்ததும் வசப்படுத்தியதும் இவருக்குத் தெரியும். இவர் வாதிக்குச் சார்பாக ஆக்ஷேபிக்காம லிருந்துவிட்டார். திரும்ப மேற்படி சப்கோர்ட்டில் வக்கீல் வைத்து மனுப் போட்டு நடவடிக்கை நடத்துகின்றூர். எக்ஸ்பார்ட்டியாக டிக்ரியான கோவில் நிலத்தோடு, ஆரம்ப காலமுதல் வக்கீல் வைத்து நடவடிக்கை நடத்திக் குருபூசைமடத்துக்குச் சாதகமாக டிக்ரியாகியிருப்பதாகப் பிரஸ்தாபத்துக்குவந்த நிலமும் நிராக்ஷேபனையாக வசப்படுத்திக்கொள்ள நேர்ந்தது ஆச்சரியமேயாகும். நடவடிக்கை நடத்தியவருக்கு வாதியின் மரபினரல்லாதவரும், வாதிக்குச் சிநேகமல்லாதவரும் ஆகிய வக்கீலை வைத்து நடவடிக்கை நடத்தவேண்டுமென்ற தோற்றமுண்டாகாத காரணத்தினுலும்; வியாச்சியத்தைக் கவனித்து நடத்துவதற்குப் போதிய சாவகாச மில்லாத காரணத்தினுலும்; வியவகார ஞானம் நன்கு புலப்படாத காரணத்தினுலும்; தாகில் அபேட்சையிருந்த காரணத்தினுலும் நிலத்தை நிராக்ஷேபனையாக வாதி வசப்படுத்திக் கொள்ள இடமுண்டாயிற்று.

இவர் 'திருக்களர் விளக்கம்; திருக்களர் விளக்கம் இரண்டாம் பாகம்; திருக்களர் விளக்கம் மூன்றும் பாகம்; என்பவற்றிற் கண்டபடி 'குருபூசைமடம் தருமகருத்தா அவர்கள், எசுர்வேத பாடசாலை தருமகருத்தா அவர்கள், பசுமடம் திருநந்தனவனம் தருமகருத்தாக்கள் அவர்கள்'

என்பவர்கள் சாசுவத பஞ்சாயத்தார்களாக வந்துவிடும் பட்சத்தில், தன்னுடைய சூட்சிகள் நடைபெறுமற் போய் விடுமென நினைத்து 'திருக்களர் விளக்கம் இரண்டாம் பாகம், திருக்களர் விளக்கம் மூன்றும் பாகம், திருக்களர் விளக்கம் நான்காம் பாகம்' என்பன வெளிவராதிருக்கும் பொருட்டு, ஏகாம்பர தேவரிடத்தில் வாத்தியார் புத்தகம் எழுதுகிறாரே! எதற்காக எழுதுகிறார்? இவருக்கென்ன? எனவும்; ஸ்ரீ கிருஷ்ணனந்த சுவாமிகளிடத்தில் வாத்தியாருடைய வேலிவெட்டியதை சுவாமி ஏன் போய்ப்பார்த்தது? அவர் புத்தகம் எழுதுகிறாரே! வெட்டியது கிரமந்தானே? எனவும்; சுப்பிரமணிய ஐயரிடத்தில் ஸ்ரீ கிருஷ்ணனந்த சுவாமிகளை வாத்தியார் சாட்சி போட்டுவிடும்பட்சத்தில், 'கோர்ட்டுக்குப்போக நேரிடுமே' என்று நினைத்து, சுவாமி ஏன் போய்ப் பார்த்ததென்று கேட்டேன் எனவும்; தருமலிங்கதேவரிடத்தில், வாத்தியார் நடக்கிறதை எழுதாமல் நடக்காததை எழுதுகிறார், இருபது வருஷத்துக்கு முன்னே போனதையெல்லாம் எழுதுகிறார், திடலைவெட்ட வேண்டும் தென்னம்பிள்ளை வைக்கவேண்டுமென்று எழுதுகிறார், புடுக்குப்போயிற்று தாலிபோயிற்று இதுபோயிற்று அதுபோயிற்று என்று எழுதுகிறார், இவர் ஒப்புக்கொண்டு பார்த்தால் தெரியும்; முற்காலத்தில் எழுதினுரென்றால் அந்தக்காலம் வேறு இந்தக்காலம் வேறு, இந்தக்காலத்தில் இவரெழுத்துச் செல்லாது, வீணுக்கெழுதுகிறார், இவர் எழுதுவதினலே எதுவும் நடக்கப்போகிறதில்லையெனவும் சொன்னாராம். கணேசதேவர் மேற்கண்ட 'திருக்களர் விளக்கம்' வெளிவருவதற்கு 'வாக்குச்சகாயம், பொருட் சகாயம்' செய்வதுபோலக் கடிதமெழுதினாராம்.

மேற்கூறிய எல்லாவற்றையும் உற்றுநோக்குவோர்க்கு இவர், பாவத்தை—பாரஇகபோகமாகவும், பஞ்சாமுதமாகவும்,

பஞ்சகிருத்தியமாகவும் நினைத்துத் திருக்களரைத் திருக்களராக்கியவரும், ஆக்குகின்றவருமாய் விளங்குகின்றாரென்பதும்; சிவத்துரோகத்தை—சிவபக்தியாகவும், சிநேகிதராகவும், சீருஞ்சிறப்புமாகவும் கருதித் திருக்கோவிலைத் திருக்கோவிலாக்கியவரும், ஆக்குகின்றவருமாய் நடிக்கின்றாரென்பதும்; தருமத்துரோகத்தை—தந்தை தாயாகவும், தனதான்யமாகவும், தமையன் தம்பியாகவும் எண்ணி மடாலயத்தை மடாலயமாக்கியவரும், ஆக்குகின்றவருமாய்ப் பிரகாசிக்கின்றாரென்பதும்; குருத்துரோகத்தை—குருவாகவும், குணமாகவும், குணாதீதமாகவும் உன்னி வித்தியாகுருவுக்கு நற்புத்தி போதனாமுறை போதித்தவரும், போதிக்கின்றவருமாய்த் தோன்றுகின்றாரென்பதும் நன்கு விளங்காமற்போகாது. இவருக்கு ஆண்டவராகிய வீரசேகரமகாமுனிவரும், துருவாசமகாமுனிவரும், சபாநாயகப்பெருமானும், அமுதவல்லியம்பாளும் அருள் புரிவார்களாக.

இவர் சிவத்துரோகத்துக்குச் சிறிதும் பயப்படாமல் அமுதவல்லியம்பாளுடைய தாலிவகையறாக் கோர்வை திருடிய பக்காத்திருடருடைய குமாரரைத் தனக்குக் குமஸ்தாவாகக் குருபூசைமடத்தில் வைத்திருக்கின்றார். இவர் ஊருக்குப் போகும்போதெல்லாம் குருபூசை மடத்துத் திறவுகோலை அந்தக் குமஸ்தாவினிடத்தில் கொடுத்துவிட்டுப் போகின்றார் அவர் எந்தச்சமயத்தில் எதைக் கிளப்பிக்கொண்டு ஓட்டம்பிடிப்பாரோ! அது கடவுளுக்குத்தான் தெரியும். இவர் குருபூசைமடத்துச் சமையல் அடுப்பில், மேற்படி மடத்து இருப்புச்சட்டியில், 'காகத்தினுடைய ஈரற்பித்து, பச்சைப்பாம்பினுடைய ஈரற்பித்து. நாங்கூழ் (நாக்குப்பூச்சி)கள், மயிலின் மலம்' என்பன் சேர்ந்த 'தயிலம்' வைத்தாராம். 'சீவகாருண்யம்,

சிவபக்தி, சிவனடியார்பக்தி' முதலியனவுடைய சைவரா யிருக்கும்பட்சத்தில், இந்த அநுசிதமான காரியத்தை மடத்துக்குட் செய்திருக்கமாட்டார். அசைவரானதால் 'பேதாபேதம், சுத்தாசுத்தம்' புலப்படாமையால் அனுசித மான காரியத்தை மடத்துக்குட் செய்தார்போலும்.

## நஷ்ட விபரம்.

| | ரு. | அ. | பை |
|---|---|---|---|
| 1. வெ ராம. வெ. வெங்கடாசலஞ் செட்டியாரவர்கள் ரூ. 1300 பெறுமானமுள்ள நிலத்துக்குப் பதிலாக ரூ. 4005 பெறுமானமுள்ள கோவில் நிலத்தை அனுபவித்துக் கொள்ளுகிற வகையில் அதிகப்பற்ருன ரூ. 2705-க்கு வருஷம் 20-க்கு மாசம் 1-க்கு நூற்றுக்கு வட்டி 1 வீதம் கூடுதல் வட்டி முதல் தொகை | 26962 | 0 | 0 |
| 2. அமிர்தங்கண்ட பிள்ளை வகையருப் பேர்வழிகள் ரூ. 423 பெறுமானமுள்ள நிலத்துக்குப் பதிலாக ரூ. 1692 பெறுமானமுள்ள கோவில் நிலத்தை அனுபவித்துக்கொள்ளுகிற வகையில் அதிகப்பற்ருன ரூ. 1269-க்கு வருஷம் 20-க்கு மாசம் 1-க்கு நூற்றுக்கு வட்டி 1 வீதம் கூடுதல் வட்டி முதல் தொகை | 12187 | 0 | 0 |
| 3. 'திருநந்தனவனம்; பசுமடம், இருக்கு வேத பாடசாலை, எசுர்வேத பாடசாலை, சாம வேத பாராயணம், குருபூசைமடம் விளக்குடித் தென்னந்தோப்பு' என்பவற்றின் பரிவர்த்தனை நிலங்கள் பறிமுதலான வகையில் அந்த நிலங்களின் கிரயம் ரூ. 2750-க்கு வருஷம் 10-க்கு மாசம் 1-க்கு நூற்றுக்கு வட்டி 1 வீதம் கூடுதல் வட்டி முதல் தொகை | 8543 | 0 | 0 |

| | |
|---|---|
| 4. ஒரு நவராத்திரி உற்சவத்தில் தீப்பற்றி எரிந்துபோன 7 பட்டுப்புடவைகள், 5 படுதாக்கள், அசுமானகிரிகள், அசைந்தாடு மாலைகள்; வாசன்மாலை, மகரதோரணக்கொடி' என்பவற்றின் கிரயம் | 1500 0 0 |
| 5. 'வசந்தமண்டபத்துக் கெதிரிலிருந்த கொட்டகை, கோபுர வாயிலுக்கு வடக்கிலிருந்த வாகன மண்டபம், அக்கோபுர வாயிலுக்குத் தெற்கிலிருந்த விறகுவாடிக்கட்டிடம். திருக்குளந் தென்கரையிலிருந்த ஐந்து வீடுகள், தேர் முட்டி களுக்குத் தெற்கிலும் வடக்கிலுமிருந்த கட்டிடங் கள்' என்பவைகள் இடிந்து விழுந்துவிட்ட வகையில் | 30000 0 0 |
| 6, 'வெள்ளிப் பெரிய நாகாபரணம், வெள்ளிப் புதுலிகள். வெள்ளிப் புடுக்குகள், வெள்ளி மணிகள், பதக்கங்கள். நெற்றிப்பட்டம்' என்பன காணமற்போன வகையில், அவற்றின் கிரயம் ரூ. 1350-க்கு வருஷம் 7-க்கு மாசம் 1-க்கு நூற்றுக்கு வட்டி 1 வீதம் கூடுதல் வட்டி முதல் தொகை | 2922 0 0 |
| 7. பழ. வெ. ராம. இராமநாதன் செட்டியாரவர்கள் எழுதிவைத்த உயிலில் கண்ட படி திருவனந்தல் குழித்தளிகை. உருத்திர செபம். தேர் மண்டபப்படி, சுவாமி நித்தியப்படி அருச்சனை, அம்பாள் சந்நிதி நித்தியப்படி தீபத் தெண்ணெய், சிவராத்திரி ஒருகாலம்' என்னும் கட்டளைகளுக்காகப் பிரதி வருஷத்திலும் கொடுக்கவேண்டிய ரூ. 874—8—0-யும், வெ. ராம. வெ. வெங்கடாசலஞ் செட்டியாரவர் கள் 1929-ஞ முதல் கொடுக்காமல் நிறுத்திக் கொண்ட வகையில் வருஷம் 5-க்கு மாசம் 1-க்கு நூற்றுக்கு வட்டி 1 வீதம் கூடுதலாகும் வட்டி முதல் தொகை | 6220 0 0 |

8. *தற்கால பஞ்சாயத்தாராகிய க. வீ. சொ. வீ. அழகப்பசெட்டியாரவர்களுடைய விசாரணையில் அமுதவல்லியம்பாளுடைய ரூ. 500 பெறுமானமுள்ள தாலிக்கோர்வை வகையரு திருட்டுப்போதல், பிரமோற்சவம் நிறுத்தல், பரிவர்த்தனை நிலம் நிராக்ஷேபனையாக வசப்படுத்தல் என்பவற்றினல் ரூபாய்* 5680 0 0

*ஆக இனம் எட்டுக்கு நஷ்டம் ரூ.* 94014 0 0

---

கருணைதங்கிய எண்டோமேன்ட் போர்டாரவர்கள் தருமபரிபாலக நீதிநெறித்தலைவர்க ளென்பதையும்; கனந்தங்கிய தேவஸ்தானங் கமிட்டியாரவர்கள், 'உலகமுள்ளளவும் மைனராய் விளங்கும், கடவுளுடைய கோவில்களாகிய குடும்பங்களை அன்போடு பரிபாலிக்குங்' கார்டியர்க ளென்பதையும்; பக்தி நிரம்பிய பஞ்சாயத்தார்கள், அக்கார்டியர்களுடைய பவர்ப்பிரதிநிதிக ளென்பதையும் நன்குணராமல், சிவத்துரோகத்தை–சிநேகிதனைப்போலவும், சீஷனைப் போலவும் நினைத்து மேற்கண்ட நஷ்டத்தை உண்டு பண்ணியவர்களும், உண்டு பண்ணுவதற்கு உதவி புரிந்தவர்களும்; கோவிலைக் கவனிக்காமல்–பராமுகமாயிருந்தவர்களும், பராமுகமா யிருக்கின்றவர்களும் 'மைனர்' சோத்துககுக் காலாவதி யில்லையேன்பதை அறியாதவர்களாய் 'வருஷம் இருபதாயிற்று, அவன் கிடக்றண்டா, எழுதியேன்னடா செய்யப்போகிறன், வீண்பயல் எழுதிக்கிட்டிருப்பான், இவன் எழுத்தை யார்டா கவனிக்கப்போறு, அவன் கிடக்றண்டா போடா' என்று பரிகாசம் செய்கின்றர்கள். இவர்களுக்குக் கடவுள் உதவிபுரிவாராக.

## வேண்டுகோள்.

தரும பரிபாலக 'சங்கச்' செல்வர்களாகிய எண்டோமெண்ட் போர்டாரவர்களும், தேவாலய பரிபாலக 'சபைச்' செல்வர்களாகிய தேவஸ்தானங் கமிட்டியாரவர்களும் கிருபைகூர்ந்து, இப்புத்தகமாகிய 'திருக்களர் விளக்கம்' 2, 3, 4 பாகங்களையும்' நன்காராய்ந்து, மேற்கண்ட நஷ்டங்களெல்லாவற்றிற்கும், காரணகருத்தாக்களா யிருக்கின்ற 'பஞ்சாயத்தார், பஞ்சாயத்தாருடைய பவர்ப்பிரதிநிதியாகிய மானேஜர், பூசகர்களாகிய குருக்கள்கள், அறை திருமாலை மணியமாகிய உட்துறை மணியம், மெய்காவல், கிராம விசாரிப்புகள்' என்பவர்களை விலக்கி; குருபூசை மடத்துத் தருமகருத்தாக்களி லொருவராகிய 'பாகனேரி பெரி. அழ. மு. முத்துக்கருப்ப செட்டியாரவர்கள் (1), பசுமடம், திருநந்தனவனம் தருமகருத்தாக்களாகிய 'காரைக்குடி ராம. ஆத. மெ. மெய்யப்ப செட்டியாரவர்கள்' (2), மேற்படி 'காரைக்குடி ஆத. லெ. ஆத. சொக்கலிங்க செட்டியாரவர்கள்' (3), எசுர்வேத பாடசாலை தருமகருத்தாவாகிய 'காரைக்குடி ஆத. பழ. சிதம்பர செட்டியாரவர்கள்' (4) இந்நான்கு மகானுபவர்களையும் எக்காலத்திலும் கோவிலைப் பரிபாலனஞ்செய்யும்படி சாசுவத பஞ்சாயத்தார்களாக நியமித்து; அவர்களைக்கொண்டு கோவிலுக்கு வேறே அசாமிகள் நியமிக்கவும், மேற்கண்ட நஷ்டங்களுக்குத் தக்க பரிகாரந்தேடவும் செய்வார்களாக. மேற்படி நான்கு மகானுபவர்களும் இக்கோவிலுக்காக 'குருபூசை, தேவாரபாராயணம், பாலபிஷேகம், புஷ்பாலங்காரம், எசுர்வேத பாராயணம்' என்னும் தருமங்களைவைத்துப், பக்தி சிரத்தையோடு எத்தனையோ இலட்சம் செலவிட்டு நடத்திவந்திருக்கின்றார்கள்

இன்னும் எத்தனையோ இலட்சம் பரம்பரையாகச் செல விட்டு நடத்தப்போகின்றார்கள். இவர்கள் இக்கோவிலினிடத்தில் அளவுகடந்த பேரன்புடையவர்கள்; இது 'உண்மை, உண்மை, முக்காலும் உண்மை.' இவர்களைவிட இக்கோவிலினிடத்தில் பக்தியும் அபிமானமும் உடையவர்கள் இல்லவே இல்லை; இது 'சத்தியம், சத்தியம், முக்காலும் சத்தியம்.' இவர்களை இக் கோவிலுக்குப் பஞ்சாயத்தார்களாக நியமிக்காமல் வேறு பஞ்சாயத்தார்கள் நியமிப்பது இக்கோவிலை யிடிப்பதேயாகும். இக்கோவிலின் பெயரால் பொருள் வசூல்செய்து பலவிதச் சூட்சிகள் செய்யும் பொருட்டு, அநேகர் பஞ்சாயத்து ஒப்புக்கொள்ள முயற்சி செய்வார்கள்; அவர்களுக்குப் பஞ்சாயத்துக் கொடுப்பது அதிபாதகமேயாகும். இதுவரையில் அவ்விதம் பல சூட்சிகள் நடந்திருக்கின்றன; அவை பின்னால் வெளிவரும். ஆகையால் மாட்சிமைதங்கிய எண்டோமெண்ட் போர்டாரவர்களும், மகிமை தங்கிய கமிட்டியாரவர்களும் ஏழைக் கோவிலின்மீது அன்புவைத்து மேற்கண்ட நான்கு தருமகருத்தாக்களையும் சாசுவத பஞ்சாயத்தார்களாக நியமித்துக், கோவிலை நன்னிலைமையில் வைப்பார்களாக.

சுபம்! சுபம்!! சுபம்!!!

திருக்களர் விளக்கம்

(நான்காம் பாகம்)

முற்றிற்று.

உலகப் பிரக்கியாதிபெற்ற
சாந்தி மஹா மண்டலேஸ்வர மஹான்
ஸ்ரீ கருணையானந்த யோகீஸ்வரர் அவர்களால்
ஜீவர்கள்மீது கருணைபாலித்து தயாரிக்கப்பெற்ற
விலைமதிக்க முடியாத மாணிக்கம் போன்ற

# பூபதி ஔடதங்கள்

நமது ஔடதங்கள் கைவசமிருந்தால் நீங்கள்
வைத்தியர்களைத் தேடவேண்டியதேயில்லை

(ஏழைகளுக்கு மட்டும் பாதி விலை.)

## பூபதி புத்திர சந்தான சஞ்சிவி

இது ஓர் (வரப்பிரசாதமான) தேவ ஔஷதம்.

காசி, இராமேஸ்வரம், திருப்பதி முதலான எண்ணிறந்த ஆலயங்களில் சென்று பிரார்த்தனை செய்தும், கங்கை முதலான நதிகளில் மூழ்கியும் புத்திரப்பேறு இல்லாமல் இனி என் செய்வோம்! என்று வருந்துபவர்களே! கவலைப் படவேண்டாம். நீங்கள் எத்தனையோ வைத்தியர்களிடம் மருந்து புசித்தும் பிரயோஜனமில்லையே என்று வருந்தினும், கடைசியாக இந்த ஔஷதத்தை நன்னம்பிக்கையுடன் வாங்கிச் சாப்பிட்டுப் பாருங்கள், திருவருள் சகாயத்தால் பலன் கிடைக்குமென்பது நிச்சயம்!

இந்த நிகரில்லாத ஔஷதமானது பெண்கள் படும் அவஸ்தையை நீக்க அமிர்தம்போன்றது. பெண்களுக்கேற் பட்ட சூதகவாயு, சூதகவலி, சூதகச்சிக்கல், நாள்தவறிவரும் சூதகம், வயிற்றுவலி, தலைவலி முதலானவைகளை ஆச்சரியப் படும்படி குணப்படுத்தும். பிறரிடத்தில் எப்படிச்சொல்வது என்று வெட்கப்பட்டுள்ள அநேக வியாதிகளை அற்புதம்! ஆச்சரியம்! என்று மெச்சும்படியாகக் குணந்தந்து புத்திர சந்தானம் உண்டாகும்படியாக எப்படியோ செய்துவிடுகிறது.

விலை ரூ. 8—0—0

# திருக்களர் விளக்கம்.

## அநுபந்தம்.

எண்டோமெண்ட் போர்டு என்பது 'தேவாலயங்கள்' முதலிய தருமங்களெல்லாவற்றையும், மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் நீதிநெறியே பரிபாலனஞ் செய்து, நிலைநிறுத்தும் பொருட்டு ஏற்பட்ட "நீதி மன்றம்" என்பதும்; அம்மன்றத்தில் எழுந்தருளியிருந்து, செங்கோலோச்சுகின்ற மெம்பர்களில் பிரஸிடெண்டு பதவி பெற்றிருப்பவர் "அரசர்" என்பதும்; மற்றையோர்கள் "மந்திரிகள்" என்பதும்; அப்போர்டின் ஆட்சியில் அநேகம் தேவஸ்தானம் "கமிட்டிகள்" இருக்கின்றன என்பதும்; அக்கமிட்டிகள் தேவத்துரோகத்துக்குப் பயந்து, சரியானவழியில் தேவாலயங்களாகிய மைனர் குடும்பங்களைப் பரிபாலனஞ்செய்யும் பொருட்டு ஏற்பட்ட "கார்டிய மன்றம்" என்பதும்; அம்மன்றத்தில் எழுந்தருளியிருந்து, தேவாலயங்களைப் பரிபாலிக்கின்ற கார்டியர்களாகிய மெம்பர்களில் பிரஸிடெண்டு அவர்கள் மைனர் குடும்பங்களின் "தலைவர்" என்பதும்; மற்றையோர்கள் மைனர் குடும்பங்களின் "மந்திரிகள்" என்பதும்; ஒவ்வொரு கமிட்டியினுடைய ஆட்சியிலும் பல தேவாலயங்கள் இருக்கின்றன என்பதும்; அத்தேவாலயங்களுக்கு கார்டியப் பிரதிநிதிகளாகிய டிரஸ்டிகளை (பஞ்சாயத்தார்களை) நியமிக்கும் அதிகாரம் அந்தந்தக் கமிட்டியிலும் இருக்கின்றன என்பதும்; டிரஸ்டிகள் "சீவகாருண்யம், தெய்வ பக்தி, விக்கிரக வழிபாடு, நீதிநெறி" என்பன நிறைந்தவர்களாயும், தருமசிந்தையுடையவர்களாயும், தனவந்தர்களாயும், இருக்கவேண்டும் என்பதும்; தெய்வத்துரோகர்கள், குருத்துரோகர்கள், சுயநலங்கருதியவர்கள், நானே பிரமமென்னுங் கொள்கையுடையவர்கள், சுயசாதியபிமான முடையவர்கள், சீவகாருண்ய மில்லாதவர்கள், இடம்ப முடையவர்கள், பஞ்ச மகாபாதகர்கள் முதலியோர்கள் டிரஸ்டிகளாக வரும்பட்சத்தில் தேவாலயங்களுக்குத் தீங்குண்டாகும்

என்பதும்; டிரஸ்டிகள் கமிட்டியாரவர்களுடைய உத்திர வின்பேரில் கோவில்களை இடித்துக் கட்டுதல், கோவில் நிலங்களை விற்றல், பரிவர்த்தனைசெய்தல், கோவில் விக்கிரகங் களை விற்றல், கோவிலுக்கு "நிலம், விக்கிரகம்" முதலியன வாங்குதல் முதலிய முக்கிய பெருங்காரியங்களை யெல்லாஞ் செய்யவேண்டும் என்பதும்; கமிட்டியாரவர்களுடைய உத்தரவுபெற்றுக்கொள்ளாமல் கோவில் காரியங்களெல்லா வற்றையும் மனம்போனபடி நடத்துகின்ற டிரஸ்டிகளும், கோவில்களை தங்களுடைய குடும்பங்களைவிட கோடிமடங்கு அதிகமாகக் கருதிப் பரிபாலனஞ்செய்யாத டிரஸ்டிகளும், நரிகளினிடத்தில் ஆடுகளை ஒப்புவிப்பதுபோல தங்களுடைய பிரதிநிதிகளிடத்தில் கோவில்களை ஒப்புவிக்கின்ற டிரஸ்டி களும் பஞ்சமகா பாதகத் தெய்வத் துரோகிகள் என்பதும் யாவருமறிவர்.

கோட்டையூர் க. வீ. சொ. வீ. அழகப்ப செட்டியா ரவர்கள் திருக்களர்க் கோவிலுக்கு டிரஸ்டியாக வருவதற்கு எவ்வித சுதந்தரமு மில்லாதவர். ஒருவருடைய தூண்டு தலுக்காகவும், சுயநலங்கருதியும் டிரஸ்டியாக வந்தவர். இதற்குச் சான்று கமிட்டியாரவர்களுடைய உத்தரவன்னி யில் தமக்குப் பதிலாகக் கோவில் சம்பளத்தில் பவர்ப்பிரதி நிதி நியமித்திருப்பதேயாகும். மேற்படி செட்டியார் நானே பிரமமென்னுங் கொள்கையுடையவர். இவருடைய காலத்தில் கோவிலுக்கு அநேகங் கெடுதிகள் ஏற்பட்டிருக் கின்றன. மேற்படி பவர்ப்பிரதிநிதியாகிய கிருஷ்ணசாமி ஐயர் மேற்படி செட்டியாரவர்களோடு 'சென்னை, மஞ்சக் குப்பம், சிதம்பரம், சிவபுரி, கும்பகோணம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, கோட்டையூர், காரைக்குடி, கோவிலூர், மன்னார்குடி' முதலிய வூர்களுக்குப் போய் வந்துகொண் டிருக்கின்றார். இவர் கோவிலில் பூசையின்றியிருந்த ரூ. 500 பெறுமானமுள்ள பழைய இரண்டு துவாரபாலக சிலா விக்கிரகங்களைக் கமிட்டியாரவர்களுடைய உத்தரவில்லாமல் ரூ. 142-க்கு விற்றுவிட்டார்.

கோவிலில் மூலத்தான அம்பாளுடைய திருவுருவம் போல 'அபயம், வரதம், செபமாலை, பூச்செண்டு' உடைய நான்கு திருக்கரங்களோடு கூடிய செப்புத் திருவுருவமாகிய

அம்பாளுடைய திருவுருவத்தை வெள்ளிக்கிழமைதோறும் பிரகாரத்தில் எழுந்தருளப்பண்ணுவது வழக்கம். அந்த அம்பாளுக்கு 'சுக்கிரவார அம்மன்' என்று பெயர். மேற்படி சுக்கிரவார அம்மனுடைய திருவுருவம் பளுவாயிருந்த காரணத்தினால் அதனைப் பூசையின்றி அறையிலிருக்கிற விக்கிரகங்களோடு வைத்துவிட்டு, அதற்குப் பதிலாக அவ்வறையில் பளுவு குறைவாயிருந்த 'போகசத்தி' அம்மனை எடுத்து வந்து பூசையில் வைத்துக்கொண்டு, சுக்கிரவாரந்தோறும் பிரகாரத்தில் எழுந்தருளப் பண்ணுகிறார்கள். மேற்படி அறையில் வைத்த சுக்கிரவார அம்மனாகிய விக்கிரகம் ரூ. 350 பெறுமானமுள்ளது. மேற்படி விக்கிரகம் காணமற்போய்விட்டதாக வதந்தியுண்டாகிறது.

கீழவீதியில் தேர்நிலைகளுக்கு வடக்கிலும், தெற்கிலும் கட்டிடங்கள் இடிந்துபோன பகுதியில், பலர் கூரைக்குச்சுகளை ஏற்படுத்திக்கொண்டு குடியிருந்து வருகின்றார்கள். விநாயகர் தெருக்கு அருகில் நமசிவாய ஆசாரி கூரைக்குச்சு ஏற்படுத்திக்கொண்டு, அதில் குடியிருந்து வருகின்றார். அவர் குடியிருப்புக் குச்சுக்கும், விநாயகர் தெருக்கும் இடையில் பனையோலையால் வேலியடைக்கப்பெற்ற குப்பைக்குழி யிருக்கிறது. அக்குப்பைக்குழியிலிருந்து 8—4—34-ல் இராத்திரி 2 மணி சுமாருக்கு நெருப்புப் பற்றிக்கொண்டது; தெய்வீகமாக ஜனங்கள் விழித்துக்கொண்டு சத்தம்போட்டு நெருப்பை அவித்துவிட்டார்கள். ஜனங்கள் விழித்துக்கொள்ளாத பட்சத்தில் ஐந்து தேர்களும் தீக்கிரையாகியிருக்குமென்பதிற் சிறிதும் சந்தேகமில்லை. தேர்கள் தீக்கிரையாகியிருக்கும் பட்சத்தில் சிலர் 'சனியன் ஒழிந்தது, சங்கடந் தொலைந்தது' என்று சந்தோஷப்பட்டுக்கொண்டிருப்பார்கள். அங்ஙனம் நிகழாமற்போனது கடவுள் செயல்தான்.

கோவிலில் 29—4—33 முதல் 8—5—33 வரையில் நடைபெறவேண்டிய ஸ்ரீமுக-ஷு சித்திரை-மீ பிரமோற்சவத்தை நிறுத்தியதுபோல 19-4-34 முதல் 28-4-34 வரையில் நடைபெறவேண்டிய பவ-ஷு சித்திரை-மீ பிரமோற்சவத்தையும் நிறுத்திவிட்டார்கள். இப்பிரமோற்சவத்தை

கிருத்திய வகையில் மண்டபப்படிகள் செய்வோர்களால் கோவிலுக்கு வரவேண்டிய ரூ 1480 நஷ்டம். இரண்டு பிரமோற்சவங்கள் தொடர்ச்சியாக நின்றுவிட்டபடியால் மண்டபப்படிகள் செய்வோர்கள் இனிமேல் நடைபெறும் பிரமோற்சவத்தில் மண்டபப்படிகள் செய்வார்களென்று நம்புவதற்கு இடமில்லை. மேற்படி மண்டபப்படிகள் நின்றுவிடும் பட்சத்தில் பிரதி வருஷத்திலும் கோவிலுக்கு ரூ. 1480 நஷ்டமேயாகும். மண்டபப்படிகள் நின்றுவிடுகிற பட்சத்தில் பிரமோற்சவம் நடைபெற மார்க்கமேயில்லை. ஒவ்வொரு பிரமோற்சவத்துக்கும் 'மரம், கீத்து, கயிறு' வகையரு தளவாட சாமானுக்கு ரூ. 600; கொடியேற்றுவிழா முதல் விடாயாற்றிவிழா இறுதியாக பதினொரு விழா உபயத்துக்கும் ரூ 1650; கொத்து வகையருச் சம்பளம் ரூ. 250 ஆக இனம் மூன்றுக்கும் ரூ. 2500 செலவுக்கு வேண்டும், இந்த இரண்டாயிரத்து ஐநூறு ரூபாயில் மண்டபப்படி உபயக்காரர்கள் வரவு ரூ. 1480. உற்சவ முடிவில் தளவாட சாமான்கள் விற்று வரவு ரூ. 500. ஆக இனம் இரண்டுக்கு வரவு ரூ. 1980 நீக்கி பாக்கி ரூ. 520. இந்த ஐநூற்றிருபது ரூபாயில் 'கொடியேற்றுவிழா, இரண்டாம்விழா, தீர்த்தவிழா, கொடியிறக்குவிழா' என்பவற்றிற்காக ரூ. 150 செலவாகிறது; இந்நான்கு திருவிழாக்களுக்கும் உபயஞ்செய்வோர்களைத் திட்டஞ்செய்து விடுகிறபட்சத்தில் பிரதி பிரமோற்சவத்துக்கும் கோவிற்பணத்தில் ரூ. 370-க்கு மேல் எக்காரணத்தை முன்னிட்டும் செலவாகமாட்டாது. உற்சவத்தையும் விமரிசையாக நடத்தலாம்.

இக்கோவிலுக்கு 'நிலம் நன்செய் புன்செய் வேலி 46½, தென்னைமரம் 1500, பனைமரம் 2000, இருப்பைமரம் 170, மாமரம் 3' முதலியவைகளிலிருந்தும், தொடர்ச்சியாக இரண்டு பிரமோற்சவங்கள் நடைபெறுமற்போனதும்; தினப்படி பூசைக்கு ஏற்பட்ட (4 1/8) நாலேயரைக்கால் மரக்கால் அரிசியில் 'குருக்கள், பரிசாரகர், அறை திருமாலை' என்னும் அசாமிகளுடைய சாதத்துக்கு ஏற்பட்ட (2 3/8) இரண்டேகாலேயரைக்கால் மரக்கால் அரிசி நீக்கி பாக்கி (1¾) ஒன்றே முக்கால் மரக்கால் அரிசி பொங்கி காலையில்

இரண்டு காலம், மாலையில் மூன்று காலம் மணியடிப்பதும்; 'கெண்டாமணியோசை, மேளச்சத்தம், பெட்ரூம் கியாஸ் லைட்டு வெளிச்சம்' என்பவைகள் மேன்மேலோங்குவதும்; வருஷம் ஒன்றுக்கு பவர் ஏஜண்டுக்கு ரூ. 300, அடிஷனல் ஏஜண்டுக்கு ரூ. 180, எட்மணிய விசாரிப்புக்கு நெற்கலம் 75-க்கு ரூ. 112½, போர்வீர விசாரிப்புக்கு நெற்கலம் 48க்கு ரூ. 72, இரண்டு தலையாரிகளுக்கு நெற்கலம் 18-க்கு ரூ. 27, இரண்டு குருக்கள்களுக்கு அரிசியுள்பட ரூ. 301¼, இரண்டு பரிசாரகர்களுக்கு அரிசியுள்பட ரூ. 427¼, அறைதிருமாலை அசாமிக்கு அரிசியுள்பட ரூ. 123¾, மெய்காவல் திரு விளக்கு அசாமிகளுக்குச் சாதமுள்பட ரூ. 126, கூட்டல் பத்துத்தேய்த்தல் அசாமிக்குச் சாதமுள்பட ரூ. 26¼ ஆக ரூ. 1696 பங்கிட்டுக்கொடுப்பதும் வெகு அழகாயிருக் கின்றன.

கோவிலில் ஐவேஜியில்லையென்று இரண்டு பிரமோற் சவங்களை தொடர்ச்சியாக நிறுத்திவிட்டு, தினம் ஒன்றே முக்கால் மரக்கால் அரிசி விதம் பொங்கி ஐந்து வேளை மணியடிக்கும்போது 'பவர் ஏஜண்டு, அடிஷனல் ஏஜண்டு, எட்மணிய விசாரிப்பு, போர்வீர விசாரிப்பு, இரண்டு தலையாரி, முப்பது ஏர், இரண்டு குருக்கள், இரண்டு பரிசாரகர், இரண்டு திருவிளக்கு மெய்காவல் அசாமிகள், இரண்டு சதை மேளம்' எதற்காக? 'வாகனமண்டபமிடித்தல்' விறகுவாடிபிடித்தல், வீண் களர்நில மத்தியில் தென்னம் பிள்ளைகள் போடுவித்தல், கோவிலுக்குள் மூத்தாளைக்கூவுங் கூரைக்கட்டிடங் கட்டுவித்தல்' முதலிய அநீதங்கள் எதற்காக? இவைகளெல்லாம் கோவில் பொருளுக்குக் கணக் கெழுதி, கோவிலை வெறுங் கோவிலாக்கி, தொடர்பாக பிரமோற்சவங்களை நிறுத்தி, மண்டபப்படிகளை காலி செய்யவேண்டியதற்காக நடக்கின்றன போலும். மேற் கண்டவர்களையெல்லாம் விலக்கி, 'கணக்கு மணியம் (1), விசாரிப்பு (1), தலையாரி (1), ஏர் (20), குருக்கள் (1), பரிசாரகர் (1), திருவிளக்கு மெய்காவல் அசாமி (1), வைத்து நடத்தும் பட்சத்தில் பிரதி வருஷத்திலும் ரூ. 1000 மீதமாகும். அந்தந்த வருஷத்திலும் மீதமாகும் ரூபாயைக்கொண்டு பிரமோற்சவத்தை நடத்தலாம்.

உபயஞ்செய்வோர்களும் பக்திசிரத்தையோடு சிறப்பாக நடத்துவார்கள். உற்சவம் முடிந்தவுடன் தளவாட சாமான் களை ஏலம்போட்டு, செலவான தொகைபோக, பாக்கித் தொகையை அடுத்த பிரமோற்சவத்துக்கு பண்டாக வைத்துக்கொள்ளலாம். இந்தப்படி நடத்துகிற பட்சத்தில் வெகு விமரிசையாக நடத்தலாம். நாளடைவிலே பிரமோற்சவத்துக்காக ஒரு பண்டும் ஏற்படக்கூடும். கோவில் செலவிலேயே நடைபெறும் 'கொடியேற்றுவிழா, இரண்டாந்திருவிழா, தீர்த்தவிழா, கொடியிறக்குவிழா' என்பவற்றுள் கொடியேற்றுவிழாவுக்கு ரூ. 50-ம், இரண்டாநாள் 'சந்திரப்பிரபை, சூரியப்பிரபை' விழாவுக்கு ரூ. 50-ம், பத்தாநாள் 'பஞ்சமூர்த்திகள்' துருவாச தீர்த்த விழாவுக்கு ரூ. 50-ம், கொடியிறக்கு விழாவுக்கு ரூ. 35-ம் செலவிடக்கூடிய நான்கு உபயக்காரர்களை திட்டஞ்செய்து விடுகிற பட்சத்தில் உற்சவம் சிறப்பாக நடப்பதோடு கோவிலுக்கு ஆதாயமும் ஏற்படும். மண்டபப்படிகளை காலிசெய்யக் கூடியவர்கள் அதிகாரிகளாக வந்திருக்கும் போது எந்தக்காரியம் நடைபெறப்போகிறது?

பிரமோற்சவம் நடக்காத கோவிலில் கோபுர வாயிலுக்கு வெளியில் சிவதிருவுருவங்கள் எழுந்தருளிவரக் கூடாதெனவும், கும்பாபிஷேகம் நடந்த கோவிலில் பிரமோற்சவந்தொடங்கி கோபுரவாயிலுக்கு வெளியில் சிவதிருவுருவங்கள் எழுந்தருளிவரலாமெனவும் 'சாஸ்திரம்' கூறுவதால், கும்பாபிஷேகத்துக்கு முன்னும் பின்னும் முறையே இரண்டு பிரமோற்சவங்கள் நடக்காத இக்கோவி லில் கோபுரவாயிலுக்கு வெளியில் சிவதிருவுருவங்கள் எழுந்தருளிவரக் காரணமில்லை. ஆனால் இஷ்டப்படி நடத் தக்கூடிய 'ஐயன், பிடாரி' கோவில்களைப் போன்றதல்ல வென்பதையும்; சாஸ்திரப்படி நடத்தவேண்டிய தேவாரத் திருப்பதிகம்பெற்ற, புராதன முத்தித்தலமென்பதையும நன்குணராதவர்கள் பரிபாலனஞ்செய்வதாலும்; அதற் கொற்றுமையாக சுயலாபங்கருதி அவரவர்கள் நோக்கம் போல் • பேசுகின்றவரும், 'சாஸ்திரம், சம்பிரதாயம்' என்பவற்றைத் தூக்கித் தூரத்திலெறிகின்றவரும், சிவனடி யாராகிய 'சண்டேசுர' நாயனாரை, சிவவாகனமாகிய இடப

வாகனத்தில் எழுந்தருளிவரச் செய்கின்றவரும் ஆகிய சோமசுந்தரக் குருக்கள் பூசகராயிருப்பதாலும் எப்படியும் செய்வார்கள்.

பிரமோற்சவ சப்பந்தமாக, பவர்ப்பிரதிநிதியாகிய மேற்கண்ட கிருஷ்ணசாமி ஐயர், கோட்டையூருக்குப் போய், க. வீ. சொ. வீ. அழகப்ப செட்டியாரவர்களை அழைத்துக்கொண்டு, கோவிலூர் மடத்துக்குப்போய், பட்டத்து சுவாமிகளிடம் தெரிவித்ததாயும்; சுவாமிகள் கோவிலில் தருமங்கள் வைத்து நடத்துகின்ற செட்டிப் பிள்ளைகளை வரவழைத்து, பிரமோற்சவ செலவுக்கு பணம் கேட்டதாயும்; செட்டிப்பிள்ளைகள்—எவ்வித பாத்தியமுமில்லாத அழகப்ப செட்டியார் பஞ்சாயத்தாராயிருப்பதால் அவர் ரூ. 1000-ம் போட்டு நடத்துவாரென்று சொன்ன தாயும்; சுவாமிகள்—நீங்கள் கோவிலை ஒப்புக்கொண்டு நடத்துங்களென்று சொன்னதாயும்; செட்டிப்பிள்ளைகள்—கோவிலுக்காக 'பினங்கு, சிங்கப்பூர்' முதலிய தீவாந்தரங்களில் வசூல்செய்து கொண்டுவந்து மடத்தில் கொடுத்த ரூ. 80000-த்திலிருந்து, மடத்தின்பேரால் மருதவனம் கிராமத்தில் ரூ. 40000-த்துக்கு வாங்கியிருக்கும் நிலத்தையும், பாக்கி ரூ. 40000-த்துக்குள்ள வட்டி முதல் தொகையையும் கொடுத்தால் ஒப்புக்கொண்டு நடத்துகிறோமென்று சொன்னதாயும்; சுவாமிகள்—மருதவனம் கிராமத்தை விட்டுவிடுகிறோம், பாக்கி ரூபாய் ஆண்டவர் கோவில் கட்டியபோது செலவாகிவிட்டது என்று சொன்னதாயும்; செட்டிப் பிள்ளைகள்—மடத்தில் பிரத்தியேகமாய் வரிவசூல்செய்து ஆண்டவர் கோவில் கட்டப்பட்டிருக்கிறது, நாங்களும் வரிக் கொடுத்திருக்கிறோம், திருப்பணிக் கணக்கைப் பார்த்தால் தெரியும் என்று சொன்னதாயும்; சுவாமிகள்—மௌனமாக இருந்துவிட்டதாயும்; செட்டிப் பிள்ளைகள்—நாள் பார்த்து பந்தற்கால் முகூர்த்தஞ்செய்து, உற்சவத்தை ஆரம்பித்து நடத்துங்கள் நாங்கள் செய்கிற மண்டபப்படிகளை சென்ற வருஷங்களைப் பார்க்கிலும் சிறப்பாகச் செய்கிறோம், ஆனால் மண்டபப்படி சாமான்களையெல்லாம் நாங்களே வாங்கிவைத்துக்கொண்டு, எங்கள் அசாமிகளை வைத்து எடுத்துக் கொடுப்போம்

என்று சொன்னதாயும்; பிரமோற்சவத்தை நிறுத்திவிட்டதாயும் ஓர் வதந்தி யுலாவுகிறது.

**நடுவு நிலைமையே சான்றோர்க்கழகு-அதுவே சத்தியம்.**

சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி.

**ஆசையே பிறவிக்கு வித்து—அதுவே துன்பம்.**

அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றுந்
தவாஅப் பிறப்பீனும் வித்து.

**அநித்தியமே தேகம்—அதுவே பேய்த்தேர்**

குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
யுடம்போ டுயிரிடை நட்பு.

உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு.

**பக்தியே முத்தி—அதுவே இன்பம்.**

பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

சைவசமய முதற் குரவராகிய துருவாச மகாமுனிவர் பூசித்ததும்; 'பிறந்தோர், நினைத்தோர், தரிசித்தோர், இறந்தோர்' பிறவாப்பேறு பெறுவதுவ; ஓதாதுணர்ந்த திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருவாய்மலர்ந்தருளிய தேவாரம் பெற்றதும்; வேதாந்த சித்தாந்த வீரசேகர மகாமுனிவர் திருப்பணி செய்ததும் ஆகிய திருக்கோயில் நாளடைவிலே சீர்கேடடைவதற்குக் காரணம் வஞ்ச நெஞ்சர்கள் சூழ்ந்திருப்பதேயன்றி வேறில்லை. 'பசுமடம், திருநந்தனவனம், குருபூசைமடம், எசுர்வேத பாடசாலை' தருமச் செல்வர்கள் சூழ்ந்து சிறப்பாக நடத்தக் கடவுள் அருள்புரிவாராக.

68280

திருக்களர் விளக்கம்

அநுபக்தம் முற்றிற்று

கருணாநிதி (பில்டிங்ஸ்) பிரஸ், விஜயபுரம் 34 gspm

24-2-98
8B
4105

Printed
at the
Karunanidhi
(Buildings)
Press,
Vijayapuram.
34 gspm